மிஷன் 2024

அடைபட்ட அக்கினி

PR. S. ROMILTON

மிஷன்

2024

அடைபட்ட
அக்கினி

PR. S. ROMILTON

சமர்ப்பணம்

தங்கள் ஆத்தும நேசருடனே மிக அந்நியோன்ய
ஐக்கியமாகவும், நெருக்கமாகவும் இசைந்து நடந்து,
அவரோடு பின்னிப்பிணைந்து, அவருயை
இதயத்தின் மேலே முத்திரையாய்ப் பதிந்து,
அவருடைய இதயத்துடிப்பையே வாஞ்சிக்கும்
தேவபிள்ளைகளாகிய மீதியான ஒரு சிறு
கூட்டத்தின் நினைவுகூரலோடு, அன்பின்
ஆண்டவரும் நேச இரட்சகருமான இயேசு
கிறிஸ்துவுக்கே இப்புத்தகம் அர்ப்பணம் !

இது, அவரது பிரசன்னத்தையும் மகிமையையும் தவிர,
வேறு எந்த அனுபவத்தினாலும் திருப்தியடையாது,
அவரது அமர்ந்த மெல்லிய சத்தத்தைத் தங்கள்
உள்ளான ஆவியிலே கேட்கத்
துடிப்பவர்களுக்கே ! இது, நமது நேச கர்த்தராம்
இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து, அவர் சிநேகிக்கும்
பரிசுத்தத்திற்காய் அனுதினமும் ஏங்கித்
தவிப்பவர்களுக்கே ! இது, தங்கள் வாழ்விலும்,
குடும்பத்திலும், சபையிலும், சமுதாயத்திலும்,
தேசத்திலும் தேவனது வல்லமையான செயலையும்
மாற்றத்தையும் காணத் துடிக்கும்
"கர்த்தரின் பாரத்தை" ஒவ்வொரு கணமும் தங்களுக்குள்
சுமந்து திரிபவர்களுக்கே அர்ப்பணம் !

பாஸ்டர்.
ரொமில்ட்டன்

புத்தக ஆசிரியரைப்பற்றி...

டெல்லியில் மிஷினரி பாஸ்டராகக் கடந்த 30 வருடங்களாகக் குடும்பமாக ஊழியம் செய்து வரும் இவர், கிறிஸ்தவ இலக்கியம் மற்றும் எழுத்துப் பணிகளில் தீவிர ஆர்வம் கொண்டவர். கடந்த பத்து ஆண்டுகளாக உண்மையான ஆவிக்குரிய எழுப்புதல், தமிழ்க் கிறிஸ்தவ உலகால் அறியப்படாத இரத்த சாட்சிகளின் சரித்திரங்கள், மிஷினரி வரலாறுகள் மற்றும் ஆவிக்குரிய யுத்தம் சம்பந்தமான பல புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளைப் படைத்துப் பதிவிட்டு வருகிறார்.

இவைகள் தவிர, அநேக அரிய ஆங்கில நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவற்றுள் முக்கியமானது, Rev. லியோனார்ட் ரேவன்ஹில் அவர்களின், பல எழுப்புதல் செய்திகள் அடங்கிய, இதுவரை வெளிவராத ”எழுப்புதல் இன்னும் தாமதிப்பது ஏன்? என்ற முற்றிலும் புதிய புத்தகம். இதை 2021ல் சகோ. R. Stanley அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

ஹெரலன் பாப்போவ் - ஒரு கைதியின் டைரி, கேட்டகோம்ஸ் இரத்தசாட்சிகள், இனிமேல் சம்பவிக்கப்போகிறது என்ன? இந்து தேசம் முதல் இந்துத்துவா வரை, மீண்டும் ஒரு மிஸா போன்ற பல புத்தகங்களின் வரிசையில் இப்போது...”

மிஷன் 2024..

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar,
Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

பரலோகத்தைத் தாக்கும் ஒரு ஜெபவீரனின் தாக்கம் !

உலக சரித்திரம் முழுவதுமாகப் பார்க்கும் போது, தேவாதி தேவன் அவ்வப்போது தமது பரிசுத்த ஆவியை இந்த பூமியில் ஆங்காங்கே ஊற்றி விசேஷித்த இளைப்பாறுதலின் காலங்களை நமக்குக் கிருபையாகத் தந்திருக்கிறார்.

வானத்தின் மதகுகள் திறக்கப்பட்டு கொட்டப்பட்ட இந்த அடைமழை, ஆசீர்வாதப் பெருமழையாய் சில நாட்களே பெய்து தீர்ந்தாலும் - அது பிசாசின் ராஜ்யத்தின் மீதோ அக்கினியும் கந்தகமுமான நெருப்பு மழையாய்ப் பெய்து அழித்தது என்னவோ உண்மை..

சில நேரங்களில் இந்த வசந்த கால மேகங்கள், மாதக்கணக்கிலோ வருஷக் கணக்கிலோ, தேவ ஜனங்கள் மேல் தங்கியிருந்து அவர்களை தேவ பிரசன்னத்திலேயே மூழ்கித் திளைத்திருக்கச் செய்திருக்கிறது.

ஆனால் இப்படிப்பட்ட காணக்கிடைக்காத இரக்கத்தின் காலங்கள் வருமுன்னே அந்தந்த இடங்களிலும் தேசங்களிலும் சபைகளிலும், ஒரு நீண்ட நெடும் ஆவிக்குரிய பஞ்சகாலம் இருந்திருக்கத்தான் செய்திருக்கிறது.

அந்த ஆவிக்குரிய வறண்ட காலத்தில் சபை சத்து இன்றி, சத்துவமின்றி, சத்தமுமின்றி வெறிச்சோடி இருக்கும். தேசம் முழுவதுமே தேவனை விட்டு தூரம் போய், சோரம் போய் பாவத்திலும் பாதாளத்திலும் போய்க் கொண்டிருக்கும்.

அப்போது ஜனத்தின் மீதிருந்த தேவ கரத்தின் பிடி தளர்ந்து, சபை அந்தகார இருளின் பிடிக்குள் சென்று கொண்டிருக்கும்.

அந்த நாட்களில் தேசத்தில் துன்மார்க்கமும், பில்லி சூனியமும், மது மயக்கமும், லோக இன்பங்களும் இச்சை ரோகங்களும் நிறைந்து மலிந்து காணப்படும்.

பகையும் துவேஷமும் சண்டைகளும் மிகச்சாதாரணமாயிருக்கும்.தேவ வசனம் வீதியில் கேட்பாரற்றுக் கிடக்கும். சத்தியம் தள்ளுபடியாகி, பரிசுத்தம் பரிகசிக்கப்பட்டு பகடியாய்ப் போயிருக்கும்.

”புசித்துக் குடித்துக் கொண்டாடி நாளை செத்தால் தான் என்ன?” என்பதே பேய்த்தனமான தத்துவமாகி, அன்றாடகக் காட்சியான அவலமாயிருக்கும்.

ஆனால் அதே நேரத்தில் அந்த தேசத்தின் ஏதோ ஒரு காட்டுக்குள்ளே, எங்கோ ஒரு மலைச்சரிவின் கேட்பாரற்ற ஒரு குடிசையின் மூலையிலே, பழைய சாக்கு ஒன்று விரிக்கப்பட்டிருக்கும்.

அதின் மேல் யாரோ ஒரு தேவ மனிதன், பிரசவ வேதனைப்படும் ஒரு தாயைப் போலத் தன் தேசத்துக்காக முழங்காலில் கதறி அழுது அழுது அந்தக் கோணியும் கிழிந்து நைந்து போய்க் கிடக்கும் - அவனது இருதயத்தைப் போலவே..

குடிசைக்கு வெளியே நரகத்தின் புகை மேலே எழும்பிக் கொண்டிருந்தாலும், அந்த சிறிய கொட்டகைக்குள்ளே பரலோகத்தின் நறுமணக்காற்று வீசிக் கொண்டிருக்கும்.

எந்தக் காலத்திலேயும், எழுப்புதலுக்காக ஏங்கித் தவித்து பரலோக ராஜ்யத்தைப் பலவந்தம் பண்ணிப் பூமியில்

இழுத்துப் போடத் துடித்துக் கொண்டிருக்கும் பலவந்தர்கள் ஆங்காங்கே தேசத்தில் இருக்கத்தான் செய்திருக்கிறார்கள்..

” மீதியானவர்களின் ” ஒரு கூட்டத்தை தேவன் தமக்கென்று தம் வசம் எப்பொழுதும் வைத்தே தான் இருந்திருக்கிறார்.அவர்கள் பலிபீடத்தின் கொம்புகளை விடாப்பிடியாய் பிடித்துக் கொள்ளுகிறவர்கள்.

தேவன் தங்கள் தேசத்தை சந்திக்க வரும் வரை அவர்களது புலம்பல்களும் கூக்குரல்களும் இரவின் இருளையும் இறுக்கத்தையும் கிழித்துச் சென்று தேவ சிங்காசனத்தை அசையப் பண்ணுகின்றன.

அவர்களது நெருப்புப் பொறி பறக்கும் ஜெபங்கள், காரிருளைக் கிழித்து வெளிப்படும் மின்னல் வெளிச்சம் போல வானத்தில் மின்சாரம் பாய்ச்சுகின்றன..

ஒரு பக்கம் சினிமா தியேட்டர்களிலும், பார்களிலும், டான்ஸ் ஹால்களிலும் பிசாசோடு கைகோர்த்துக் கொண்டு ஜனங்கள் குத்தாட்டம் போட்டுத் தங்கள் ஆத்துமாவோடு சூதாட்டம் ஆடிக்கொண்டிருக்க,

அங்கே சில நூறு அடிகள் தள்ளி ஒரு சிறிய வீட்டின் அறைக்குள்ளே,”ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும்..இல்லாவிட்டால் நான் சாகிறேன்..” என்று போராடிய ஜாண் நாக்ஸைப் போல யாரோ ஒரு ஜெபவீரன் தன் இருதயத்தைக் கிழித்து ஜெபத்தில் போராடிக் கொண்டிருக்கிறான்.

“உம்மை விடுவதில்லை என்று உம்முடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்” என்பது போன்ற விடாப்பிடியான, பிடிவாதமான, ஊக்கமான,இடைவிடாத, ஆத்துமாவை மரணத்தில் ஊற்றிய, தேவனே இறங்கி வந்தாலொழிய வேறு எதினாலும் நிறுத்த முடியாத அவனது ஜெபதொனி பரலோகத்தின் முற்றத்தில் இடைவிடாமல் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது.

இரவும் பகலும் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு சீக்கிரமே நியாயம் செய்யும் தேவனின் செவிகள், அந்த ஜெபப் போராளியின் கூப்பிடுதலுக்கு சீக்கிரமே இரங்குகிறது.

விசுவாச வீரர்களின் தணியாத தாகமும், ஆத்துமாக்களைக் குறித்த அவர்களது பாரமும்,
கண்ணீரும் தேவனது சிங்காசனத்தையே அசைத்து அவரைத் தமது மகிமையுள்ள சிங்காசனத்திலிருந்து எழுந்து நிற்கவே செய்து விடுகிறது.

பரலோகத்தின் சிங்காசன மேடையில் பரலோகப் பிதாவானவர் எழுந்து நிற்பதைக் கற்பனை செய்து பார்க்கிறேன் !

அவர் தமது வலது கையை உயர்த்தியவராக..”காபிரியேலே ! யுத்தத்துக்கு எக்காளம் ஊது! ஆயிரம் பதினாயிரமான நமது போர்க்களத்து தூதர்களை
ஆயத்தப்படுத்து!”

”பரிசுத்த ஆவியானவரே ! வேளை வந்தது!
என் குமாரனாகிய இயேசுவே, உமது பாடுகளின் பலனைக் கண்டு நீர் திருப்தியாகும் நேரம் இது !”

“பரிசுத்த ஆவியானவரே ! தேசத்தை உமது
பிரசன்னத்தினால் மூடுவீராக !”

”அதோ! மேல் வீட்டு அறையில் கூடியிருக்கும் அந்த 120
பேரைப் பார்க்கிறேன்! வானங்கள் திறக்கப்பட்டு
பரலோகத்தின் வல்லமைகள் அவர்கள் மேல்
ஊற்றப்படுவதாக!”

”அக்கினி நாவுகள் அவர்கள் மேல் இறங்குவதாக! பலத்த
காற்று அங்கே வீசப்படுவதாக! இடிமுழக்கம் உண்டாகட்டும் !”

”இப்போதே பரலோக வல்லமையால் அவர்கள்
நிரப்பப்படுவார்களாக! அபிஷேகம் மழையாய்ப் பெய்யட்டும்!
அக்கினி பற்றி எரியட்டும் !”

”இப்பொழுதே எழுப்புதல் !
எழுப்புதல் ! எழுப்புதல் !”

தொடர்ந்து பிதாவிடமிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டுக்
கொண்டே இருக்கிறது!

”பரலோக சேனைகளே ! ஈவன் ராபர்ட்ஸோடு
கைகோருங்கள்!
அவனது ஜெபம் கேட்கப்பட்டது..வேல்ஸ் தேசத்தில் எழுப்புதல்
வெள்ளம் புரண்டு ஓடட்டும் !”

”நிலக்கரி சுரங்கத்தின் தொழிலாளிகளின் இருதயங்கள்
உருகுவதாக! அவர்களது கரி படிந்த முகங்களில்
மனந்திரும்புதலின் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதாக!”

பரலோகத்தின் சத்தம் தொடர்ந்து ஒலிப்பதைக்
கேட்கிறேன்..பிதாவானவர் பேசுகிறார்..

”பரிசுத்த ஆவியானவரே, Asuza தெருவின் சிறு மந்தை மேல் உம்முடைய உன்னத பெலன் நிழலிடுவதாக! அன்பு சகோதரன் செய்மூரைத் தொடுவீராக!”

”ஆவியானவரே ! பசித்த ஒவ்வொரு ஆத்துமாவையும் நிரப்புவீராக! தாகமுள்ள அந்தக் குழுவின் மேல் தண்ணீராய்ப் பாய்ந்து செல்வீராக ! அக்கினியின் அபிஷேகத்தில் மூழ்கடிப்பீராக !”

”ஓ ! ஜாண் வெஸ்லி !
ஒயிட் ஃபீல்டு ! டெனன்ட், ஜோனத்தான் எட்வர்ட்ஸ், டேவிட் பிரெயினார்ட் ! ஃபின்னி ! ஜாண் சுங், போங்க்கே, பால் யாங்கி சோ ! உங்கள் யாவருக்காகவும் இதாே பரலோகத்தின் பொக்கிஷசாலை திறக்கப்படுகிறது ! எடுத்துக்கொள்ளுங்கள்! அபிஷேகத்தை அளவில்லாமல் அள்ளிக் கொண்டு என் வார்த்தையை கடற்கரை மணலத்தனை ஜனங்களுக்கு தைரியமாய்ச் சொல்லுங்கள் !”

கட்டளை தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கிறது..

நேற்றைய மற்றும் இன்றைய நாட்களின் இந்த எழுப்புதல் வீரர்களிடம் காணப்படும் பொதுவான ஒன்றே ஒன்று - எழுப்புதலின் கதறுதல் !

கர்த்தர் அவர்களின் விண்ணப்பத்தைக் கேட்டார், கண்ணீரைக் கண்டார். தேசத்தின் பாவத்தின் அரிபிளவை (cancer) சுகமானது.

யுத்தத்தின் மையத்திலிருந்து திசை திரும்பாத இவர்களில் ஒருவரைப் போல நானும் இருப்பேன் என்ற முடிவோடு இறங்கிவிடு மன்றாட்டு யுத்தத்தில் !

தணிக்க முடியாத வாஞ்சையோடும் தாகத்தோடும் தேவனை இறுகப் பற்றிக் கொள்! உன் ஜெபம் கேட்கப்படும் வரை அவரை அமர்ந்திருக்க விடாதே !

ஒரு வெஸ்லியாய், ஒரு எட்வர்ட்ஸாய், ஒரு ஃபின்னியாய்,
எழுப்புதலின் பெருமழை பெய்யும் வரை எழுந்திரு!
இராத்திரியின் முதற்சாமத்திலே கூப்பிடு!

இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு !
ஒய்ந்திராதே..உன் கண்களின் கறுப்புவிழி
சும்மாயிருக்கவொட்டாதே!

ஆண்டவரின் சமூகத்திலே உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு! உன் தேசத்தின் ஜனங்களின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்துக்கு ஏறெடு !

- Steve Hill

Revival Study Bible

அட்டவணை

முன்னுரை 19

அத்தியாயம் - 1

பாழான மண்மேடுகள் யாவும்
பாராளும் வேந்தன் மனையாகும் 21

அத்தியாயம் - 2

எசேக்கியாவின் பத்து அம்சத்திட்டம்

பகுதி - 1 ராஜ்யத்தின் முதலாம் வருடம்,
முதலாம் மாதம், முதலாம் நாள்.. 29

பகுதி - 2 மிகுதியானவர்கள் அல்ல
மீதியானவர்கள் 33

பகுதி - 3 பார்க்கிறீர்களே ! 40

பகுதி - 4 எசேக்கியாவின் உடன்படிக்கை 47

பகுதி - 5 விரிவடையும் தரிசனம் பரவும் பாரம் ! 51

பகுதி - 6 பிராயச்சித்தம் 54

பகுதி - 7 புதுப்பிக்கப்பட்ட தேவ ஆராதனை 60

பகுதி - 8 கடைசி நபருக்கும் தரிசனம் 64

பகுதி - 9 கர்த்தருக்குப் பஸ்கா 66

பகுதி - 10 போய் சுதந்தரிப்போம் 72

அத்தியாயம் - 3

சிந்தை எனும் சிறை 80

அத்தியாயம் - 4

ஜெபவீரரின் ஆவி ஆத்துமா சரீரத்துக்கு
எதிரான அக்கினியாஸ்திரங்கள் 91

அட்டவணை

அத்தியாயம் - 5
சிதைந்து கிடக்கும் இந்திய மண்ணின் சிதிலங்களை எழுந்து கட்டுவோம் வாருங்கள்!

பகுதி - 1 ஆட்டுவாசல் 106
பகுதி - 2 மீன் வாசல் 110
பகுதி - 3 பழைய வாசல் 113
பகுதி - 4 எப்பிராயீம் வாசல் 118
பகுதி - 5 பள்ளத்தாக்கின் வாசல் 121
பகுதி - 6 குப்பைமேட்டு வாசல் 124
பகுதி - 7 ஊருணி வாசல் 127
பகுதி - 8 தண்ணீர் வாசல்........ 132
பகுதி - 9 குதிரை வாசல்........ 141
பகுதி - 10 கிழக்கு வாசல்........ 151
பகுதி - 11 காவல்வீட்டு வாசல்........ 157
பகுதி - 12 மிப்காத் என்னும் வாசல்........ 165

அத்தியாயம் - 6
Election ’ 24 - ஒரு விசுவாச உறுதிமொழி........ 169

அத்தியாயம் - 7
Election ’24 - ஒரு செயல்திட்டம் (An Action plan)........ 172

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்........ 177

மொழிபெயர்ப்புகள்........ 180

முன்னுரை

கர்த்தருக்குள் எனக்கன்பானவர்களே,
இயேசு கிறிஸ்துவில் அன்பின் வாழ்த்துக்கள்.

இது மிஷன் 2024..

இந்திய அரசியல் கட்சிகள் 2024க்கான தேர்தலுக்காகக் களமிறங்கித் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் வேலையில் மும்முரமாய் இறங்கியிருப்பதை அன்றாடம் நாம் காண்கிறோம்.

இவ்வுலக மக்கள் காலத்தைப் பிரயோஜனப்படுத்த நுணுக்கமாய் அறிந்திருக்கிறார்கள். பிசாசும் தன் காலத்தை நன்றாகவே அறிந்திருக்கிறான். ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த் தன் வேளையை அறிந்திருக்கிறது. காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் கூடத் தாங்கள் வரத்தக்க காலங்களை அறிந்திருக்கின்றன (எரே 8:7).

இவ்வுலக மனிதர் தங்கள் இலட்சியங்களை நிறைவேற்ற, தங்கள் நாட்களை நன்கு அறிந்து, அதற்காக எப்படிப்பட்ட ஆயத்தங்களையும் செய்து, அதை அடைய எந்த எல்லைக்கும் சென்றுவிடும்போது, தேவ ஜனமோ, தேவனை சந்திக்க மாத்திரமல்ல, உலகத்தில் தேவன் தங்களை வைத்திருக்கும் காலம் வரை தேசத்தைத் தேவனுக்காக ஆதாயப்படுத்தும் பணியில், தேசத்தின் ஒவ்வொரு சவாலையும் சந்திக்கத் தன்னை நுணுக்கமாக ஆயத்தப்படுத்திக்கொள்ளுதல் அவசியத்திலும் அவசியமன்றோ?

வரப்போகும் தேர்தலுக்காகவும், அதைத் தொடர்ந்த தேசத்தின் எழுப்புதலுக்காகவும் சபையை செயலில் இறங்கும்படியாகத் தூண்டி எழுப்பும் வேதம் சார்ந்த, நடைமுறை செயலாக்கத்திட்டத்தை (Strategical Outlook) விவரிக்கும் ஒரு புத்தகம் இது !

கர்த்தரின் இதயத்திலுள்ள பாரம் கொண்டு எழுதப்பட்ட இவ்வார்த்தைகள், தேவ நோக்கத்தை நிறைவேற்றுவதோடு, தேவ பாரத்தை நமதாக்கிக்கொண்டு கிரியை செய்ய நம்மை ஏவி எழுப்புவதாக !

மிஷன் **2024**

For the Year 2024...
And Beyond...

கிறிஸ்துவில் அன்புடன்
Romilton
20.5.2022

CHAPTER 01

தேர்தலுக்காகவும்.. தேசத்துக்காகவும்..

பாழான மண்மேடுகள் யாவும்
பாராளும் வேந்தன் மனையாகும் !

அவன் ஒரு 24 வயது வாலிபன்..
அவனது தகப்பன் ஒரு வெறிபிடித்த, விக்கிரக ஆராதனையிலும் பில்லிசூனிய மாந்திரீக வித்தையிலும் ஊறிப்போனவன்.. பாதுகாப்பற்று வளர்ந்த தன் பாலியப் பருவத்திலே, தனது சொந்த சகோதரர்கள் தன் கண்முன்னேயே துடிக்கத் துடிக்க மடியக் காண்கிறான் அவன்.. தகப்பனே தன் சொந்தப் பிள்ளைகளைத் தன் கையாலே நரபலி செலுத்திய கொடுமைகளைக் கண்டு வளர்கிறான் அந்த வாலிபன்..

ஊரிலுள்ள சகல உயர்ந்த மேடுகளிலும் பிசாசுகளுக்குப் பலிபீடம் கட்டிப் பலியிட்டு வந்த அந்தத் தகப்பனுக்கு மலைகளும் குன்றுகளும் போதாமல் போகவே, தேசத்தின் சகல பச்சையான மரங்களையும் தன் துணைக்கு அழைத்துக்கொண்டு, அவைகளையும் தன் தெய்வங்களின் கோயில்களாய் மாற்றிவிட்டான் அவன். இப்படி ஒரு சூழலில் வளர்ந்து ஆளாகிறான் அந்த வாலிபன்..

பிரச்சனைகளுக்குத் தலையான அந்தத் தகப்பன், தேசத்துக்கு அதிபதியாயிருந்தது, பிரச்சனைகளை இன்னும் உச்சத்துக்கு ஏற்றியது. திரும்பின திசையெங்கும், உள்ளவர்களையெல்லாம் பகைத்து, யுத்தத்தின் மேல் யுத்தமே அவனது நாளும் பொழுதுமாய்ப்போனது.

தனக்கு ஆதரவாய் இருப்பானென்று பெரிய ராஜா ஒருவனோடு அவன் செய்த உடன்படிக்கை, அவனுக்கே வினையாய் முடிய, அவனையே விழுங்க அவனது வாசல்வரை வந்துவிட்ட அந்த ராஜாவை சமாதானப்படுத்தித் திருப்பியனுப்ப தேவனுடைய ஆலயத்தின் பொன்னையும் வெள்ளியையும் அவன் அள்ளிஅள்ளிக் கொடுக்க, பெரும்படையோடு வந்தவனோ, இவனது ஜனத்தையும் வீட்டிலுள்ளவர்களையும் கூட சிறைப்பிடித்துப் போனான்..

இவை எல்லாவற்றையும் கண்டு பயந்து போன அவன், தன்னை எதிர்த்து ஜெயித்துக்கொண்டே போன அந்த ராஜாக்களின் தெய்வங்களே அவர்களது வெற்றிக்குக் காரணமென்று எடை போட்டு, "என் ராஜ்யத்தை எனக்குக் கொடுத்தால், நான் உன்னைச் சேவிப்பேன்.." என்று அந்தப் பிசாசுகளோடு உடன்படிக்கை செய்கிறான். ஆனால் அந்தத் தெய்வங்களும் அவனுக்கு எதிராக மாறவே, அவனது அந்த எதிர்பார்ப்பிலும் மண்விழுந்தது.

கடைசியாக அந்த வாலிபனின் தகப்பனான அந்த அரசன் தன்னையே தேவனாகப் பிரகடனப்படுத்திக்கொண்டு தேவனின் பரிசுத்த வீட்டுக்குள் நுழைந்து, அங்குள்ள விலையேறப்பெற்ற பாத்திரங்கள், பணிமுட்டுகளை எடுத்துத் தன் ராஜ்யத்தின் தலைநகரை மூலைக்குமூலை விக்கிரகங்களால் நிறைத்தான். அப்படியும் சூழ்நிலை மாறுவதாய் இல்லை. மாறாக, தேசத்தின் ஆவிக்குரிய, சமூக, பொருளாதார நிலை சீர்குலைந்து சின்னாபின்னமானது.

கடைசியாக, மரித்துப்போன அந்த மன்னனுக்குத் தன் முற்பிதாக்களின் கல்லறையிலும் இடமின்றி, நகரில் எங்கோ ஒரு மூலையில் அடக்கம்பண்ணப்பட்டான் அவன்...

இது ஒரு சீர்குலைந்த குடும்பத்தின், கோத்திரத்தின், சமுதாயத்தின், தேசத்தின் உடைந்து சிதைந்த சூழலில் வளர்ந்த வாலிபன் ஒருவனின் கதை!

24, 25 வருடங்களாகத் தன் தகப்பனின் அக்கிரமங்களை நேரில் கண்டு வந்த அந்த வாலிபன், கடைசியாக சின்னாபின்னமாகிக்கிடந்த அந்த தேசத்துக்குத் தன் தகப்பனுக்குப்பின் ராஜாவாகிறான். பொருளாதாரமும் சமுதாயமும் ஒழுக்கமும் ஒன்றுமில்லாமல் போன நிலையில், முழுவதும் அசுத்தமும் அருவருப்பும் மண்டிக்கிடந்த தலைநகரில் வாழ வருகிறான் அவன்.

தன் சகோதரர்கள் தீயிடப்பட்டு நரபலி செலுத்தப்பட்ட நிலையில் அவன் மட்டும் உயிரோடு தப்பியதே அதிசயத்திலும் அதிசயமாயிருந்தது! கதவுகள் உடைந்து தகர்ந்து உட்புறமெல்லாம் வாரி இறைந்து கிடந்த அசுத்தங்களே அங்கே தேவனுடைய ஆலயத்தின் மிச்சமீதியாயிருந்தது.

அப்படிப்பட்ட மயான மண்ணில் வளர்ந்த "எசேக்கியா" என்ற அந்த வாலிபனிடம் வளமையான ஆவிக்குரிய வாழ்வொன்றை எதிர்பார்ப்பது எப்படி? யூதாவின் கேடுகெட்ட ராஜாக்களின் வரிசையில் வந்த அவனது தகப்பனானவன் வேறு யாருமல்ல, "ஆகாஸ்" என்ற அரசனே!

அந்த ஆகாசும் ஆகாபும் சீரழித்துப்போட்ட அன்றைய இஸ்ரவேல் தேசத்தை இன்றைய நமது இந்திய தேசத்தின் நிலையோடு சற்று ஒப்பிட்டுப் பாருங்கள்!

- காலாகாலமாய் விக்கிரகங்களால் மூடப்பட்ட ஒரு தேசம்!

- சகல மலைகளும், மேடுகளும், குன்றுகளும், மரங்களும் தேவ தேவர்களின் கோயில்களால் நிறைந்த ஒரு தேசம்!

- ஹோமங்களுக்கும், பூஜைகளுக்கும், இருளிலே நடக்கும் நரபலிகளுக்கும் குறைவில்லாத தேசம்!

- ஆங்காங்கே எழும்பி வானத்தை முட்டி நிற்கும் சிலைகளும் சிற்பங்களும்!

- புற்றீசலாய்ப் பெருகிவரும் முப்பது முக்கோடித் தெய்வக் கோயில்கள்!

- புனரமைக்கப்பட்டு எழுச்சியடையும் மேடைகள், பீடங்கள், இருப்பிடங்கள்!

- கடந்த சில வருடங்களாக தேசத்தின் வரலாறு காணா சீர்குலைவு !

- தேசத்தின் இன்றைய அதிபதியினால் சீர்கெட்டுக் கிடக்கும் பொருளாதார, சமுதாய, ஒழுக்கச் சீர்கேடுகள்!

- உடைந்து சிதைந்த குடும்பங்கள்! கொலைகள்! தற்கொலைகள்!

- தறிகெட்டுத் திரியும் வாலிப சமுதாயம் !

- முன்னேற்றமில்லா இருளில் மூழ்கிக்கிடக்கும் கிராமங்கள்!

- ஊழலால் புரையோடிப்போன அதிகாரவர்க்கம் !

- ஜாதி மதப் பிரிவினையால் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கக் காத்திருக்கும் மதக்கலவரம் !

- ஒடுக்கப்படும் சிறுபான்மையினர்!

- நாட்டைக் கூறுபோட்டு விற்கும் கார்ப்பரேட் முதலைகள்!

- நீட் நீசங்கள் !வேலையில்லாப் பட்டதாரிகள் !

- நிச்சயமற்ற எதிர்காலத்தில் குடிமக்கள் !

ஒரே நாடு ! ஒரே கட்சி ! ஒரே தலைமை ! ஒரே மதம்!
ஒரே மொழி ! ஒரே கொடி ! ஒரே வரி !
குடியாட்சி போய் முடியாட்சி திரும்பக்
காத்திருக்கும் அவலம்!

இப்படிப்பட்ட சூழலில் தேசம் எதிர்கொள்ளப்போவது 2024 !

தேச ஜனமும் தேவ ஜனமும் நம்பிக்கை இழந்த நிலையில் இன்னும் இரண்டே ஆண்டில் தேசம் சந்திக்கப்போகும் இன்னொரு பாராளுமன்றத் தேர்தல்!

ஆனாலும் இப்படிப்பட்ட நிலையிலும் தேசத்தில் எஞ்சி நிற்பது, "எசேக்கியா" என்ற அந்த வாலிபனைப் போன்ற, விரல்விட்டு எண்ணத்தகும் நம்பிக்கையுள்ள மீதியான கூட்டமென்ற சில முழங்கால் ஜெபவீரர்களே!

2 நாளாகமம் 28 முதல் 33 ம் அதிகாரம் வரையில் காணப்படும் எசேக்கியாவின் நடபடிகள் சொல்லும் செய்தி ஒன்றே! எத்தனை தான், குடும்பமோ, சமுதாயமோ, நாடோ

நகரமோ ஒழுங்கின்மையும் வெறுமையுமாய்க் காணப்பட்டு, மூலை முடுக்கின் ஆழமெல்லாம் இருள் மண்டிக்கிடந்தாலும், அங்கே தேவநாமம் தூஷிக்கப்பட்டு, நகரத்தின் பாதுகாப்பு அலங்கங்கள் இடிபட்டு, அதின் பரிசுத்த ஒழுக்கநெறிகளின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு அவைகள் பிசாசின் மண்மேடுகளே ஆகிப்போனாலும், தேவனுக்குப் பயந்த, தேவன் பட்சம் நிற்கும் ஒரே ஒரு மனிதன் கூட தேவனுக்குக் கிடைப்பானேயானால், அன்று அந்த அனுபவமற்ற வாலிபனான எசேக்கியாவைக் கொண்டு, ஒரே ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்துக்குள்ளாக எருசலேம் நகரத்தைத் திரும்ப எடுத்துக் கட்டி, ஆலயத்தையும் தேசத்தையும் அவற்றின் முந்தின மகிமைக்கும் சீருக்கும் திரும்பக் கொண்டுவந்து நிறுத்திய தேவனாகிய கர்த்தர், இன்றும் இந்த இந்திய தேசத்துக்கு க்ஷேமத்தைத் தர ஆவலும் வல்லமையும் உள்ளவராகவே இருக்கிறார் !

தன் தகப்பன் உருக்குலைத்துப்போட்ட தேசத்தின் மிச்ச சொச்ச எச்சங்களுக்கு நடுவே எழுந்து நின்ற எசேக்கியாவைப் போன்று ஒரு சிறு மீதியான கூட்டம் இன்று இந்த தேசத்தைத் தங்கள் ஜெபத்தாலும் கண்ணீராலும் கட்டியெழுப்ப எழும்பிவருமோ ?

- இது காலாகாலமாய் விக்கிரகக் கோட்டையான தேசம் தான்!

- சத்துரு சகலத்தையும் சர்வநாசம் செய்து கவிழ்த்துப்போட்ட தேசம்தான்!

- ஆகாசைப் போன்ற அரசியல்வாதிகளால் அருவருப்புக்குள்ளான தேசம் தான்!

- அசுத்த ஆவிகளாலும் சூனிய வித்தைகளாலும் சீர்குலைந்த ஒரு தேசம் தான்!

- எதிர்காலமே இன்று சூன்யமாகிப்போய் நிற்கும் நமது இந்திய தேசம் தான்!

ஆனாலும் இவற்றையே சொல்லிச் சொல்லி எத்தனை காலம் தான் மாய்ந்துபோவது? இந்த மண்மேட்டையே பார்த்துப் பார்த்து எத்தனை காலம் தான் மலைத்து நிற்பது? ஆகான்களின் பேராசையினால், தோற்றுப்போன வேதனையினால் எதுவரை அழுது அழுது முகங்குப்புற விழுந்து கிடப்பது ?

தேவனால் புறக்கணித்துத் தள்ளப்பட்ட சவுல்களுக்காய் எம்மட்டும் துக்கித்துக் கொண்டிருப்பது? உலகத்தோடு உலகமான சபைகளுக்காகவும், சபையின் பரிசுத்த வித்து ஜாதிகளோடே கலந்து போனதற்காகவும் எதுவரை தலையிலே சாம்பலை அள்ளிப்போட்டுக் கொண்டு உடைந்து கிடப்பது ?

தேவனுக்கு முன்பாகத் தங்கள் தலைகள் தண்ணீரும் கண்கள் கண்ணீரூற்றுமாக விழுந்து கிடந்த மீதியான சிறுகூட்டம் ஒன்று எழுந்திருக்கும் காலம் இது! ஆகாசின் அக்கிரமங்களினால் துடைத்துக் கவிழ்த்து போடப்பட்ட தேசத்திலும் எசேக்கியா என்றொரு வாலிபனைத் தனக்காகவே தேவன் வைத்திருந்தது போல, இந்த இந்திய மண்ணின் இன்றைய நிலையிலும் தேவனுக்காக வைராக்கியம் பாராட்டி, சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, அவரது வசனத்துக்கு நடுங்குகிற மீதியான அந்தக் கூட்டம் தன் மறைவிலிருந்து வெளிப்பட்டு எழுந்துவரும் காலமிது !

தனி ஒருவனாய் நின்று தேசத்தைத் தேவனிடம் திருப்பிய எசேக்கியாவின் செயல்முறையை அவனது பத்து அம்சத் திட்டமென்று சொல்லலாம். அவனது அந்தப் பத்து அம்சத்திட்டம் தேசத்தில் ஒரு பெரும் புரட்சியையும், சாலமோனின் நாட்களுக்கு நிகரான ஒரு எழுப்புதலின் பொற்காலத்தையும் ஏற்படுத்துமானால், அவனது அதே பத்து அம்சத்திட்டம், இன்றும் ஆவிக்குரிய அமைப்பில் ஜெபத்தோடு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு செயலாற்றப்படுமானால், தேசம் தேவனிடம் திரும்புவது நிச்சயம் நிச்சயமே !

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறாரே !

CHAPTER 02

எசேக்கியாவின் பத்து அம்சத் திட்டம்

PART- 1

(I) எசேக்கிய ராஜ்யத்தின் முதலாம் வருடம், முதலாம் மாதம், முதலாம் தேதி :

(10 அம்சத் திட்டத்தின் முதல் திட்டம்)

"அவன் தன் ராஜ்யத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில்.... (முதலாம் தேதியிலே) கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து அவைகளைப் பழுதுபார்த்து..." (2 நாளா 29:3, 17)

First things first என்பது போல, எசேக்கியா என்ற அந்த 24 வயதுப் பையன் ராஜ்யபாரப் பொறுப்பேற்ற முதலாம் வருடம், முதலாம் மாதம், முதல் நாளிலே தன் சிங்காசனத்தில் அமர்வதற்குப் பதிலாக அவன் நேரே சென்றது கர்த்தருடைய ஆலயத்திற்குள்.. அவன் முதன்முதலாகச் செய்த வேலையே கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து அவற்றைப் பழுதுபார்த்ததுதான்!

தேசத்தில் மாற்றம் கொண்டுவரும் பெரும் பணி ஆரம்பிக்கப்பட வேண்டியது முதலாவது தேவனுடைய ஆலயத்திலேயே ! இழுத்து மூடப்பட்டு இருள் மண்டிக்கிடந்த தேவாலயத்தைத்தான் முதலாவது திறந்தான் எசேக்கியா !

இதோ நமது ஆலய வாசல்களின் தலைகள் உயர்த்தப்படட்டும்!

அநாதி கதவுகள் உயர்ந்து கொடுக்கட்டும்! மகிமையின் ராஜா மீண்டும் உட்பிரவேசிப்பாராக! மகிமையின் ராஜாவை அவரது ஆலயத்திலிருந்தே துரத்திவிட்டோமே! கிருபையின் அரசரை வெறுங்காலாகவே துரத்திவிட்டோமே! அவரை வருந்தி அழைத்து வருவோம்! திரும்ப அழைத்து வருவோம்! (2 சாமு 19:10, 11). தேவனுடைய பெட்டி என்னும் தேவ பிரசன்னத்தை திரும்ப நம் மத்தியிலே கொண்டு வருவோம். கடந்த காலங்களிலே அதைத் தேடாதே போனோமே ! (1 நாளா 13:3).

பரிசுத்தக் குலைச்சல்களுக்கும், பாவ அசுத்தங்களுக்கும் நமது மனதின் வாசல்களையும், நுழைவாயில்களையும் திறந்து கொடுத்து சத்துரு உட்புக இடமளித்தோம். இப்பொழுதோ,"இம்மட்டும் வா, மிஞ்சி வராதே! உன் பெருமைகளும் அசுத்தங்களும் இங்கேயே அடங்கி மடியக்கடவது" (யோபு 38:10, 11) என்று கோடு கிழித்துக் கட்டளையிட்டு, இந்நாள் வரை எது எதையெல்லாம் நமக்குள்ளும் நமது சபைகளுக்குள்ளும் உட்பிரவேசிக்க இடங்கொடுத்தோம் என்று சுயபரிசோதனை செய்து Doorways எனப்படும் வாசல்களையும் கதவுகளையும் செப்பனிட்டு, எல்லை குறித்து, வேலியடைத்து, ஆவிக்குரிய வாழ்வாகிய நமது ஆலயங்களைப் பழுதுபார்க்கத் தொடங்குவோம் !

உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு : (மத் 23:26)

எசேக்கியேல் எட்டாம் அதிகாரத்திலே எசேக்கியேலை ஆவியானவர் ஆலயத்தின் உள்வாசலுக்கும் உட்புறத்துக்கும் எடுத்துச்சென்று காட்டியபோது, அங்கே காணப்பட்ட அருவருப்புகளுக்கு எவ்விதத்திலும் இன்றைய நமது சபைகளின் உட்புறங்களின் அசங்கியங்கள் குறைந்து காணப்படுகிறதோ?

• தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற பலவித காரியங்கள், விக்கிரகங்களாய், அருவருப்புகளாய் சபையின் உள்ளே இன்று காணப்படவில்லையோ? (எசே 8:3, 5)

• தேவனை அவரது பரிசுத்த ஸ்தலத்திலிருந்தே தூரமாய்த் துரத்திவிடும் மிகுந்த அருவருப்புகளும் இங்கே இல்லையோ? (எசே 8: 6)

• இன்னும் உள்ளே போனால் சபைகளின் உட்புறங்களிலே நடக்கிற கொடிய அருவருப்புகளை என்னவென்று சொல்வது? (எசே 8: 9)

• நமது ஆலயங்களின் வெளிப்புற, உட்புற சுவரெல்லாம் வேத வசனங்களால் நிறைந்திருக்க, சபை விசுவாசிகள், ஊழியர்களின் இருதயங்களின் உட்புறமோ சகல அருவருப்பும் நரகலுமான உலக வழிபாடுகள் நிறைந்த விக்கிரகங்களால் சித்திரந்தீட்டப்பட்டிருக்கவில்லையோ? ஒரு காலத்தில் ஜெபத்தினாலும் துதியினாலும் நிறைந்த தூபக் கலசத்தைப் பிடித்து, அந்தத் தூபப் புகையினாலும் மகிமையினாலும் நிறைந்திருந்த ஆலய உட்புறங்கள் இன்று அசுத்த சாம்பலின் புகைமூட்டத்தினாலும் பகை மூட்டத்தினாலும் மூச்சுமுட்டிக் கிடக்கவில்லையோ? (எசே 8:10, 11)

• ஒரு காலத்தில் தேவனுக்காகவும், தேசத்துக்காகவும், இரட்சிக்கப்படாத ஆத்துமாக்களுக்காகவும் புலம்பி மன்றாடிய நமது சபைகளின் சகோதரிகளும் தாய்மார்களும் இன்று "தம்மூசு" போன்று விக்கிரகமாகிப் போன தங்கள் சுயநலங்களுக்காகவே ஆலய உட்புறத்தில் அழுதுகொண்டிருக்கவில்லையோ ? (எசே 8:14)

- **இவைகளெல்லாம் போதாதென்று, எசேக்கியேலின் நாட்களில் ஆலயத்தின் உட்புறத்திலே அன்று சூரிய நமஸ்காரம் செய்த கூட்டம் போன்று, இன்று சூரியனை நமஸ்கரித்து யோகா செய்யும் கூட்டத்தோடு ஒன்றிப்போன கூட்டங்களும், சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியான மனிதனையே உயர்த்திப் பிடித்து, அவர்களையே பிரியப்படுத்தி சேவிக்கும் கூட்டங்களும் இன்றைய சபைக்குள்ளே பெருகிக் கிடக்கவில்லையோ?**

போனது போகட்டும்! எழுந்திருந்து சபைகளின் கதவுகளையும் வாசல்களையும், உட்புறங்களையும் பழுதுபார்த்து, சகல அசுத்த அருவருப்புகளையும் பாளயத்துக்குப் புறம்பே கொண்டு கொட்டுவோம் வாருங்கள்!

எசேக்கியா போன்று இன்று எழும்பும் மீதியான கூட்டம், அவனது பத்து அம்சத்திட்டத்தின் முதல் திட்டமாகத் தன் சொந்த ஆவிக்குரிய வாழ்வு மற்றும் சபைகளின் உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கட்டும். மற்றவைகள் தானாய் வந்து அமையும்!

CHAPTER 02

மிகுதியானவர்கள் அல்ல... மீதியானவர்கள்

PART-2

எசேக்கியத் திட்டத்தின் இரண்டாவது அம்சம் :

“மிகுதியானவர்கள் அல்ல..மீதியானவர்கள்"

"அவன்.. ஆசாரியரையும் லேவியரையும் அழைத்து வந்து ..அவர்களைக் கூடிவரச் செய்து..."(2 நாளா 29:4)

தனியனான ஒரே ஒரு எசேக்கியா, தன்னைப் போன்ற பாரமும் இருதய வேதனையும் கொண்ட, தேசத்தில் மீதியான சிலரைத் தன் வேலையில் தன்னோடு சேர்த்துக்கொண்டு, கூடிவரச் செய்ததே அவனது இரண்டாவது செயல் திட்டம்.

அப்படியே, சபைக்காகவும் தேசத்துக்காகவும் அங்கலாய்க்கும், ஆங்காங்கே சிதறியிருக்கும் மீதியான ஒரு கூட்டத்தைத் தேவன் கூட்டிச்சேர்க்கும் காலமிது!

பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து மீண்டு வந்த மீதியான கூட்டத்திலுள்ள, இஸ்ரவேலின் தேவனுடைய வார்த்தைகளுக்கு நடுங்குகிற யாவரும் உத்தம வேதபாரகனாகிய எஸ்றாவோடு கூடிக்கொண்டது போலவும்...(எஸ்றா 9:4),

சிறையிருப்பிலிருந்து மீந்து தப்பினவர்கள் எருசலேமின் அலங்கங்களை எழுந்து கட்ட நெகேமியாவோடு கூடிக்கொண்டது போலவும், தேசத்தின் இன்றைய இடிந்து தகர்ந்த நிலையை ஜெபத்தில் எழுந்து கட்ட தம்முடைய மீதியானவர்களை தேவன் கூட்டிச்சேர்க்கும் காலமிது!

மீதியானவர்கள் என்றால் யார்? (Remnants)

1. முதலாவது : இவர்கள் தேவனுடைய இராஜ்யம் பெலத்தோடு வரக் காத்திருப்பவர்கள். தேவன் தமது சபையின் மீதும், அழியும் ஆத்துமாக்கள் மீதும் வைத்திருக்கும் அழியா அன்பினிமித்தம் தமது வல்லமையை வெளிப்படுத்தும் அந்த உண்மையான எழுப்புதலுக்காக இரவும் பகலும் ஏங்கிக்கிடப்பவர்கள்..

2. இரண்டாவது : இவர்கள் தங்கள் அழைப்பை நன்கு அறிந்தவர்கள். அதாவது தேவன் தங்களை முதலாவது தாங்கள் வசிக்கும் ஊருக்காகவும், இடத்துக்காகவும், அதன் பிறகு, தாங்கள் ஐக்கியம் கொண்டிருக்கும் உள்ளூர் சபைக்காகவும் அழைத்திருக்கிறார் என்பதே. தாங்கள் ஐக்கியம் வைத்திருக்கும் சபையில் தங்கள் பொறுப்புகளை அவர்கள் உண்மையாய் நிறைவேற்றி வந்தாலும், அவர்கள் இருதயமோ, அவர்கள் இருக்கும் நகரத்துக்காகவும், அதிலே அன்றாடம் அழியும் ஆத்துமாக்களுக்காகவுமே அடித்துக் கொண்டேயிருக்கும்!

3. மூன்றாவது : அவர்கள் ஜெபத்தையே தங்கள் வாழ்க்கை முறையாகவும் உயிர்மூச்சாகவும் கொண்டவர்கள். தாங்கள் ஒவ்வொரு நாளும் சந்திக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடியவர் தேவன் மாத்திரமே என்று அவர்கள் திட்டவட்டமாக நம்புவதால் அவர்கள் இடைவிடாமல் ஜெபித்துக்கொண்டே இருப்பவர்களாயிருப்பார்கள்.

4. நான்காவது : அவர்கள் குழுவோடு இணைந்து பணிபுரியும் தாழ்மையானவர்கள். தாங்கள் மட்டுமே தனியாக எதையும் சாதிக்க இயலாது என்பதை அவர்கள் நன்கு

அறிந்திருப்பவர்களாதலால், ஒரு போதும் அவர்கள் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாய் இருக்க மாட்டார்கள்.

5. ஐந்தாவது : இவர்களுக்கு தேவ ராஜ்யமும், தேவ சித்தமும், தேவ நோக்கமுமே முதன்மையும் முழுமையுமாக இருப்பதால், இவர்கள் தங்களுக்கென்ற எந்தத் தனிப்பட்ட மறைவான உள்நோக்கத்தையும், சுயலாபத் திட்டங்களையும் கொண்டிருப்பதில்லை.

இப்படிப்பட்ட உண்மையான மீதியானவர்களின் கூட்டமொன்று தேவனுக்காய், தேசத்துக்காய் வைராக்கியம் கொண்டு ஜெபத்தால் கட்டியெழுப்ப எழும்பட்டும்!

நெகேமியாவின் தலைமையில் எருசலேம் அலங்கத்தைக் கட்டும்படி எழும்பிய கூட்டம், எருசலேமின் ஆட்டுவாசல் முதல் கிழக்குவாசல் வரையும், மீன் வாசல் முதல் குப்பைமேட்டு வாசலையும், ஊருணி வாசல் துவங்கிப் பள்ளத்தாக்கு வாசல்வரையிலான பத்து வாசல்களையும் அருகருகே நின்று, ஒரு சேர, ஒரே நேரத்தில், ஒருங்கிணைப்போடு கட்டி முடித்த அந்த முழுமையான மாதிரியையே, இந்திய தேசத்தின் பாழான ஸ்தலங்களைக் கட்டியெழுப்ப இன்றும் வேதம் காட்டும் செயல்திட்டத்தின் ஒரே மாதிரியை !

2024 க்கு இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கும் இப்போதே, தங்கள் கட்சி மீண்டும் மீண்டும் ஜெயித்தே ஆகவேண்டும் என்ற முடிவோடு Booth level வரை இப்பொழுதே அவர்கள் ஆயத்தமாகி நிற்கும் போது, வரும் நாட்களுக்காக தேவஜனத்தின் ஆயத்தம் எப்படி என்பதே இன்றைய மிகப்பெரிய கேள்வி! ஆனாலும் இன்றும் தேவன் ஒரு எசேக்கியாவையோ, நெகேமியாவையோ

தேடிக்கொண்டேதான் இருக்கிறார்.
24 வயதுப் பையன் ஒருவன், தன் கண்முன்னே மண்மேடுகளாய், சாம்பல் குவியலாய்ப்போன ஒரு நகரத்தையும் நாட்டையும் கண்டு மலைத்து நில்லாமல், மீதியான ஒரு சிறு கூட்டத்தைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு, தனக்கு முன்னிருந்த சவாலான இமாலயப் பெரும்பணியில் துரிதமாய் இறங்கியது போல, மிஷன் 2024 க்காக மட்டுமல்ல, அதைத் தாண்டிய நாட்களுக்கும் தேசத்தில் மாபெரும் மாற்றம் ஒன்றைக் கொண்டுவரும் பாரத்தோடும், தரிசனத்தோடும் நிற்கும் மீதியான கூட்டமொன்றைத் தமக்கு முன் திறப்பிலே நிற்க தேவன் எழுப்புவாராக!

எருசலேமின் நாலாபக்கமும் ஒவ்வொரு குழுவினர் அருகருகே நின்று ஒரே நேரத்தில் கட்டத் துவங்கியது போல, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை மாநிலத்துக்கு ஒரு ஜெபவீரன், உண்மையாய்த் திறப்பிலே நிற்பானானால், அவனோடு இணைந்த ஒரு சிறு கூட்டம் ஒன்றே அந்தந்த மாநிலத்துக்காகவும், மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்துக்காகவும், ஒவ்வொரு மாநகரத்துக்காகவும், ஊருக்காகவும், ஒவ்வொரு பஞ்சாயத்துக்காகவும், ஒவ்வொரு கிராமத்துக்காகவும், ஒவ்வொரு தெருவுக்காவும், தெருவின் ஒவ்வொரு வீட்டுக்காகவும், வீட்டின் ஒவ்வொரு தனிமனிதனுக்காகவும் திறப்பிலே நிற்கப் போதுமானது!

இதை சாத்தியத்தில் கொண்டுவருவது சத்தியமாய் சாத்தியமில்லையென்று உள்ளுணர்வும், உள் மனமும், உள்ள நிலைமையும், உண்மை அனுபவங்களும் உள்ளபடியே சொன்னாலும், வெறும் 52 நாட்களில் கட்டிமுடிக்கப்பட்ட அலங்கமும், மீண்டும் எழும்பி நின்ற எருசலேம் தேவாலயமும், எசேக்கியாவின் சீரமைக்கப்பட்ட

தேசமும், "தாவீதின் விழுந்துபோன கூடாரத்தை நான் திரும்ப எடுத்து, அதிலே பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வ நாட்களில் இருந்தது போல அதை ஸ்தாபிப்பேன்..." (ஆமோஸ் 9:12) என்ற வாக்குத்தத்தத்துக்கு யதார்த்தத்தில் சாட்சியாய் நின்று நிரூபிக்கவில்லையோ?

எசேக்கியாவின் இரண்டாம் அம்சத்திட்டமான மீதியானவர்களை ஜெபத்தில் ஒருங்கிணைக்கும் திட்டத்தை "மிஷன் 2024" என்ற பெயரில் தேர்தலுக்காகவும், அதைத் தாண்டிய நாட்களுக்காகவும் கையிலெடுப்போம்!

"வரப்பு உயர நீர் உயரும்..
நீர் உயர நெல் உயரும்..
நெல் உயரக் குடி உயரும்..
குடி உயரக் கோன் உயர்வான்.." என்ற புலவர் ஒருவரின் இப்பாடல் எத்தனை உண்மையோ, அதைக் காட்டிலும் நிச்சயமான உண்மை எசேக்கியாவின் செயல் திட்டமும், நெகேமியா 3ம் அதிகாரத்தின் பாலபாடமுமேயாம்..

ஒரு குடும்பத்தின் நபர் ஒரே ஒருவர் ஜெபித்தால் அக்குடும்பத்தின் சிதிலங்கள் கட்டப்படாதோ?

ஒரே ஒரு குடும்பம் ஜெபித்தால் அந்தக் குடும்பம் வசிக்கும் தெருவின் அலங்கங்களும் அவலங்களும் கட்டப்படாதோ?

ஒரு தெருவே இணைந்து ஜெபித்தால் அந்தத் தெரு இருக்கும் பகுதியும், ப்ளாக்கும், அவென்யுவும் கட்டப்படாதோ?

இப்படியே ஒரு ஊரின் ஒவ்வொரு பகுதியும் கட்டப்பட்டால், முழு ஊரும், நகரமும், கட்டப்படாதோ ?

இதுவே ஒவ்வொரு கிராமத்துக்கும், பஞ்சாயத்துக்கும், சிற்றூருக்கும், நகராட்சிக்கும், மாநகருக்கும், மாவட்டத்துக்கும், மாநிலத்துக்கும், முழு தேசத்துக்குமே பொருந்துமே!

இதிலே வரிந்துகட்டி வரும் சன்பல்லாத்துகளுக்கும், தொபியாக்களுக்கும், கேசேம்களுக்கும் பஞ்சமில்லாமல் போகப்போவதில்லை. "இவர்கள் கட்டினாலும்தான் என்ன? ஒரு நரி போன்ற என் குள்ளநரித் தந்திரத்தினால் இவர்கள் கட்டியதெல்லாவற்றையும் உடைத்தெறிவேன்.." என்று கொக்கரிக்கும் பிசாசின் கூட்டங்களுக்கும் குறைவிருக்குப் போவதில்லை. "நாம் அவர்கள் நடுவே வந்து, அவர்களைக் கொன்றுபோடுமட்டும் அவர்கள் அதை அறியாமலும் பாராமலும் இருக்க வேண்டும்; இவ்விதமாய் அந்த வேலையை ஓயப்பண்ணுவோம்.." (நெகே 4:3, 11) என்று சவால்விடும் சத்துருக்களும் இல்லாமலிருக்கப் போவதில்லை. ஆனாலும் "பரலோகத்தின் தேவனானவர் நமக்குக் காரியத்தைக் கைகூடிவரப் பண்ணுவார்.

"எழுந்து கட்டுவோம்" என்ற அறைகூவலைக் காலாகாலமாய் நாமும் கேட்டுக்கொண்டே இல்லாமலில்லை. ஆனாலும் இதோ நமக்கு முன் நெருங்கி நிற்கும் "மிஷன் 2024." மீதியானவர்கள் ஆங்காங்கே எழும்புவார்களாக! நெகேமியா 3ம் அதிகாரமே நமது பாலபாடமாய் இருப்பதாக !

2006 ல் நாம் எழுதிய ஒரு பாடல்

அலங்கமே பாழானதே !
வாசல்கள் தீக்கிரையே!
நிந்தையும் தீங்கையும், சிறுமையும் வெறுமையும்
கண்ணால் காண்கின்றோமே!

1. எழுந்து கட்டிடுவோம்
இணைந்து கட்டிடுவோம்..
இணைந்து கட்டிடுவோம்..
ஜெபத்தினாலும், கண்ணீரினாலும்
முழங்காலில் கட்டிடுவோம் - அலங்கமே..

2. பரிசுத்த ஜீவியமே..
பாழாய்ப்போனதே..பாழாய்ப்போனதே..
பரிசுத்த இரத்தத்தால்..
பரிசுத்த வார்த்தையால்
திரும்பவும் கட்டிடுவோம் - அலங்கமே..

3. மன்றாட்டு ஜீவியமே
மறைந்து போனதே..
மறைந்து போனதே..
ஆவியினாலும் அபிஷேகத்தாலும்
நிறைந்து கட்டிடுவோம் - அலங்கமே..

4. தேசத்தின் வாசல்களே தீக்கிரையானதே..
தீக்கிரையானதே..
ஒன்று சேர்ந்திடுவோம்.. ஒருமனமாவோம்..
இணைந்து கட்டிடுவோம் - அலங்கமே..

CHAPTER 02

பார்க்கிறீர்களே !

PART-3

எசேக்கியத் திட்டத்தின் மூன்றாவது அம்சம் :

“பார்க்கிறீர்களே ! (நெகே 2:17)

எசேக்கியாவின் அடுத்த அடி, தன்னோடு எழுந்து கட்ட வந்தவர்களை நோக்கி, "எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக்கிடக்கிறதையும், நாம் இருக்கிற சிறுமையையும் 'பார்க்கிறீர்களே!' " என்று சவாலிட்ட நெகேமியாவின் அறைகூவலுக்கு நிகரான ஒன்று.

தன்னோடு கூடிய ஆசாரிய, லேவியரைப் பார்த்து,"லேவியரே கேளுங்கள்..நம்முடைய பிதாக்கள் துரோகம் பண்ணி, நம்முடைய தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து.. அவருக்கு முதுகு காட்டினார்கள். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் தூபங்காட்டாமல், விளக்குகளை அணைத்துப்போட்டு, மண்டபத்தின் கதவுகளையும் பூட்டிப்போட்டார்கள். இப்போதும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய உக்கிர கோபம் நம்மை விட்டுத்திரும்பும்படிக்கு... நீங்கள் உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு, கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தம் பண்ணி, அசுத்தமானதைப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டு போங்கள்.." (2 நாளா 29:5-10) என்று எசேக்கியா சொன்னது, "நாம் இருக்கிற சிறுமையைப் பார்க்கிறீர்களே!" என்ற நெகேமியாவின் வேதனை நிறைந்த வார்த்தைகளுக்கு எவ்வளவும் குறையாததல்லவோ?

மீதியான தேவ ஜனமே, தேவ சபை பாழாயிருக்கிறதையும், தேவ ஜனத்தின் ஆவிக்குரிய அலங்கங்களும், பரிசுத்த வாசல்களும், கிறிஸ்தவக் குடும்பங்களும், வாலிபரின் வாழ்க்கைகளும் பாழாகி, சத்துருவால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடப்பதையும், ஊழியர்களின் பரிதாப நிலைமைகளையும் பார்க்கிறீர்களே!

நம்முடைய ஜனம் துரோகம்பண்ணி, தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, அவருக்கு முதுகு காட்டியதே! அவர்கள் நம்முடைய பரிசுத்த ஸ்தலங்களில் ஜெபதூபம் காட்டாமலும், ஆவியிலும் உண்மையிலும் தேவனுக்குப் பிரியமான ஆராதனை செய்யாமலும், வேதவசன வெளிச்ச விளக்குகளை அணைத்துப்போட்டு, ஆலய மண்டபங்களின் கதவுகளைக் கர்த்தருக்குப் பூட்டிப்போட்டார்களே!

சபையின் நிலையைப் **“பார்க்கிறீர்களே!"**

- **சபையின் உள்ளான நிலையைப் “பார்க்கிறீர்களே!"**

- **விசுவாச வாலிபரின் நிலையைப் “பார்க்கிறீர்களே!"**

- **ஊழியர்களின் வாழ்க்கையைப் “பார்க்கிறீர்களே!"**

- **சபையின் ஆட்டபாட்டக் கொண்டாட்டங்களைப் “பார்க்கிறீர்களே!"**

- **சபை தேவனைவிட்டும், பூர்வ பாதைகளைவிட்டும் தூரம் போய் நிற்பதைப் “பார்க்கிறீர்களே!"**

• சபையின் பரிசுத்தவித்து ஜாதிகளோடே கலந்து போனதைப் “பார்க்கிறீர்களே!"

• செழுமை கொழுமை வளமை இளமை என்னும் செழிப்பு உபதேசங்களைப் “பார்க்கிறீர்களே!"

• பெருகி ஓடும் கள்ள உபதேச வெள்ளங்களைப் “பார்க்கிறீர்களே!"

• விசுவாசிகளை வழிவிலகச் செய்யும் கள்ளத் தீர்க்கதரிசிகளைப் “பார்க்கிறீர்களே!"

• சபைகளுக்குள்ளும் போதகர்களுக்குள்ளும் நடக்கும் சண்டைகளைப் “பார்க்கிறீர்களே!"

• ஸ்தாபனங்களுக்குள் காணப்படும் பிரிவினைகளையும் பிரச்சனைகளையும் “பார்க்கிறீர்களே!"

• சபையைக் கலக்கும் அரசியலையும், அரசியலுடன் கலக்கும் சபைகளையும் " பார்க்கிறீர்களே!"

• ஆடுகள் சூறையாடப்படுவதையும், எளியவர்கள் கைவிடப்படுவதையும் “பார்க்கிறீர்களே!"

• ஜெபமின்றி வறண்டு கிடக்கும் ஆவிக்குரிய வறட்சியைப் “பார்க்கிறீர்களே!"

• பிரசங்க பீடங்களில் ஆவியின் அக்கினி அணைந்துகிடப்பதைப் “பார்க்கிறீர்களே!"

● **ஆத்தும பாரமும் கண்ணீரும் காணாமல் போனதைப் “பார்க்கிறீர்களே!"**

● **சுவிசேஷ ஊழியம் சுத்தமாய் நின்று போனதைப் “பார்க்கிறீர்களே!"**

● **பண ஆசையிலும், ஜாதிப் பெருமையிலும், வெளிநாட்டு மோகத்திலும், உலக மயக்கங்களிலும், மாம்ச இச்சைகளிலும் விழுந்து கிடக்கும் விசுவாசிகளையும் ஊழியர்களையும் “பார்க்கிறீர்களே!"**

● **தாங்களும் வஞ்சிக்கப்பட்டு, மற்றவர்களையும் வஞ்சிக்கும் கூட்டங்கள் மலிந்துகிடப்பதைப் “பார்க்கிறீர்களே!"**

தேசத்தின் நிலையைப் **“பார்க்கிறீர்களே!"**

● **ஆணவமும் அகம்பாவமும் கொண்ட நாட்டின் தலைமையைப் பார்க்கிறீர்களே!**

● **சகலத்திலும் காணப்படும் சர்வாதிகாரத்தைப் பார்க்கிறீர்களே!**

● **தன் கட்சியல்லாத மாநிலங்களும் மக்களும் ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு, ஒடுக்கப்படுவதையும் பார்க்கிறீர்களே!**

● **தன் மதமல்லாத சிறுபான்மையினர் நசுக்கப்படுவதைப் பார்க்கிறீர்களே!**

● Stan Swamy **என்ற வயதான கத்தோலிக்க குருவானவரை வதைத்துச் சாகடித்ததைப் பார்த்தீர்களே!**

• மதர் தெரஸா அவர்களின் Missionaries of Charity ஸ்தாபனத்தின் கழுத்தை நெரித்ததைப் பார்த்தீர்களே!

• போதகர்களும், ஊழியர்களும், மிஷினரிகளும் மதமாற்றம் என்ற பெயரில் அடித்துத் துவைக்கப்படுவதைப் பார்க்கிறீர்களே!

• சாத்தான்குளத்தில் ஜெயராஜும் அவர் மகனும் ஒரே இரவில் போலீஸ் கஸ்டடியில் தொங்கவிட்டு அடித்தே கொல்லப்பட்டதைப் பார்த்தீர்களே!

• கர்நாடகத்தில் மதமாற்றத் தடைச்சட்டம் அமலாக்கப்பட்டதைக் கண்ணால் பார்த்தீர்களே!

• நாடு முழுவதிலும் அதே சட்டம் எப்போது வேண்டுமானாலும் நிறைவேற்றப்படலாம் என்ற கத்தி கிறிஸ்தவர்களின் தலைமேல் தொங்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறீர்களே!

• 2020 கொரோனா முதல் அலையின்போது நகரங்களில் வேலை செய்ய வந்த வேற்று மாநிலத் தொழிலாளிகள் வேலையும் உணவுமின்றி தங்கள் தங்கள் ஊர்களுக்குச் செல்ல அரசாங்கம் அவர்களுக்கு இரயில், பஸ் வசதி செய்து கொடுக்காத ஒரே காரணத்தால், தங்கள் குழந்தைகளை இடுப்பிலும் தலையிலும் சுமந்து ஆயிரக்கணக்கான மைல்கள் பாதங்கள் வெடிக்க நடந்தே சென்றதையும், வழியில் இறந்த எத்தனையோ பேரையும் பார்த்தீர்களே!

• 2021 கொரோனா அலை வாரிக்கொண்டுபோன சாவு எண்ணிக்கையை எதிலே எழுதுவது? உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி மருந்தை

வெளிநாடுகளுக்கெல்லாம் தானம் வார்க்கிறேன் பேர்வழி என்று பெருமைக்கு மாடு மேய்த்துவிட்டுத் தன் நாட்டு மக்களை மூச்சடைத்துத் துடிதுடித்துச் சாகவிட்ட கோரத்தை நேருக்குநேர் பார்த்தீர்களே!

● பஞ்சாப் மற்றும் வடஇந்திய விவசாயிகள் மட்டுமன்றி, தமிழக விவசாயிகளும் டெல்லி வரை வந்து எலிக்கறியும் மண்சோறும் தின்று அரை நிர்வாணப் போராட்டம் நடத்திய அவலத்தைப் பார்த்தீர்களே!

● தனக்குப் பிடிக்காத முதலமைச்சர் என்ற ஒரே காரணத்தால், மக்களின் வெறுப்பு அந்த முதல்வர் மேல் திரும்ப வேண்டுமென்ற சூதும் வஞ்சகத்தோடும், "ஆக்கிரமிப்பு அகற்றம்" என்ற பெயரில் டெல்லியில் 63 லட்சம் பேரை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்து நிறுத்தியதைப் பார்த்தீர்களோ?

● டெல்லி மாநகராட்சித் தேர்தலில் தங்களுக்கு நிச்சயமான தோல்வியென்று அறிந்தபின், கடைசி நேரத்தில் அந்தத் தேர்தலையே ரத்துசெய்து, இதைப் போலவே நாட்டில் பாராளுமன்றத் தேர்தலே இல்லாமல்போகும் சட்டமொன்றைக் கொண்டுவந்து, காலத்துக்கும் தாங்களே முடியாட்சி செய்தாலென்ன என்று இதை வைத்து ஒத்திகை பார்க்கப்பட்டதைப் பார்த்தீர்களோ?

● நேற்று பாபர் மசூதி.. இன்று க்யான்வியாபி..நாளை என்னவென்று பொறுத்திருந்து பார்ப்பீர்களோ?

● ஹோட்டலுக்குப் போய் 2 இட்லி சாப்பிட்டு, ஒரு காபி குடித்தாலும் அதற்கும் GST போட்டுக் கொல்லுவதைப் பார்க்கிறீர்களே !

• பெட்ரோல் விலையை விடுங்கள். அன்றாட ஆகாரம் சமைக்கும் சமையல் வாயு சிலிண்டர் ஒன்றின் விலையைப் பார்க்கிறீர்களே!

• பள்ளிகளில் பிள்ளைகளை ஆசிரியர்கள் கண்டித்து அடிக்கும் காலம் போய், கற்பிக்கும் ஆசிரியர்களை மாணவர்கள் அடிக்கத் துணியும் நாட்களைப் பார்க்கிறீர்களே!

• எத்தனை ஆணவக்கொலைகள்! எத்தனை சிசுக்கொலைகள்! எத்தனை சிறுமியர் பலாத்காரக் கொலைகள்! - நாடெங்கிலும் பார்க்கிறீர்களே!

• விக்கிரக ஆராதனையிலிருந்தும், அறியாமை இருளிலிருந்தும், பாவக்கட்டுகளிலிருந்தும், பாரம்பரியக் கட்டுகளிலிருந்தும் விடியலின்றித் தவிக்கும் தேசத்தின் ஜனத்தை நாலாபக்கமும் தவித்து நிற்கப் பார்க்கிறீர்களே!"

பார்க்கிறீர்களே! பார்க்கிறீர்களே! பார்க்கிறீர்களே!

தேசத்தையும் நகரத்தையும் அவைகள் இருக்கிறவண்ணமாகவும், தான் பார்த்தவண்ணமாகவுமே, "பார்க்கிறீர்களே!" என்று சொல்லித் தங்களோடு நின்றவர்களையும் பார்க்கவைத்ததே எசேக்கியாவின் 10 அம்சத்திட்டத்தின் மூன்றாவது படி.

அதையே இன்று தேவனின் பாரமாக மீதியான ஜனத்துக்குள் வைப்போம். "கர்த்தரின் பாரம்" என்ற, வேதத்தில் ஆங்காங்கே காணும் அந்த வார்த்தையையே தேவன் நமது உள்ளங்களில் பாரமாய் வைப்பாராக!

CHAPTER 02

எசேக்கியாவின் உடன்படிக்கை

PART-4

எசேக்கியத் திட்டத்தின் நான்காவது அம்சம் :

எசேக்கியாவின் உடன்படிக்கை :

“இப்போதும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பும்படிக்கு, அவரோடே உடன்படிக்கை பண்ண என் மனதிலே நிர்ணயித்துக்கொண்டேன்." (2 நாளா 29:10)

என் தேசமும், என் நகரமும் பாழாய்க்கிடந்தாலும், அவற்றை சரி செய்யுமுன், தேவனின் உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பும்படிக்கு நான் அவரோடே உடன்படிக்கை செய்ய என் மனதிலே நிர்ணயம் செய்து கொண்டேன் என்று சொல்லி, தானும் உடன்படிக்கை செய்து, தன்னோடே இருந்தவர்களையும் அந்த உடன்படிக்கைக்கு உட்படுத்தினான் எசேக்கியா.

இன்று...

- சபை தேவனை விட்டு தூரம் போயிருப்பது உண்மை.

- சபை கிறிஸ்துவையே வெளியேவிட்டுக் கதவை மூடியிருப்பது உண்மை.

- கர்த்தர் தமது பிள்ளைகளை வளர்த்து ஆதரித்து வந்தாலும் அவர்களோ, அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி நிற்பது உண்மை.

- மாடு தன் எஜமானனையும் கழுதை தன் ஆண்டவனின் முன்னணையும் அறிந்தாலும், தேவ ஜனமோ அறிவில்லாமலும் உணர்வில்லாமலும் இருப்பதும் உண்மை.

- சபை இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கி, பின்வாங்கிப்போனது உண்மை.

- சபையின் தலையான தலைவர்களும் போதகருமெல்லாம் ஆவியில் வியாதியிலும், இருதயமான மனசாட்சியெல்லாம் பலட்சயமாகிக் கிடப்பதும் உண்மை.

- சபையின் ஸ்திரத்தன்மையாய் அதைத் தாங்கும் ஆவிக்குரிய உள்ளங்கால் தொடங்கி, அபிஷேகத்தில் நிறைந்திருக்கவேண்டிய உச்சந்தலை முதல் அதிலே சுகமேயில்லாதிருப்பதும் உண்மை.

- சபையானது பாவ காயமும் வீக்கமும், நொதிக்கிற இரணமுமாய், அது வசனத்தால் சீழ்பிதுக்கப்படாமலும், அபிஷேக எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருப்பது உண்மை. (ஏசா 1: 3 - 6)

அந்தோ ! தேசத்தின் நிலையைத் திரும்பிப் பார்த்தால் வேதனையிலும் வேதனை!

ஆனாலும் இவைகளையெல்லாம் சரிசெய்ய வேண்டியது அவசியத்திலும் அவசியமென்றாலும், இவைகளை விட அத்தியாவசியம், நான் என் தேவனோடு உடன்படிக்கை செய்துகொண்டு, அவரோடு உள்ள என் உறவைப் புதுப்பித்துக்கொள்வதே என்றான் எசேக்கியா.

இன்று சபையின் நிலையும் தேசத்தின் நிலையும் பரிதாபத்திலும் பரிதாபமேயானாலும், இதிலே நாம் செய்யவேண்டிய வேலைகள் தலைக்கு மேல் இருந்தாலும், மீதியான ஜனம், ஜெபிக்கும் ஜனம், தேவனோடுள்ள தனது உடன்படிக்கைகளைப் புதுப்பித்துக்கொள்வது அத்தியாவசியமில்லையோ ?

தங்கள் பாவங்களுக்காகவும், தங்கள் ஜனத்தின் பாவத்துக்காகவும் தேவனுக்கு முன்பாகக் கெஞ்சி மன்றாடி நின்ற தானியேலைப் போலவும், நெகேமியாவைப் போலவும் தேவனுக்கு முன்பாகத் தலையில் சாம்பலை அள்ளிப் போட்டுக்கொண்டு இரட்டுடுத்தி, உபவாசத்தோடும், விண்ணப்பத்தோடும், ஓங்கிய குரலோடும் கண்ணீரோடும் மன்றாடி தேவனோடு ஒப்புரவாக வேண்டியதில்லையோ ?

தாங்கள் உடைத்துப்போட்ட உடன்படிக்கைகளைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டியதில்லையோ ?

தேவனோடு உடன்படிக்கை செய்ய தன் மனதிலே நிர்ணயித்துக்கொண்ட எசேக்கியா, தன்னோடு கூடிவந்த ஆசாரியரையும் லேவியரையும் நோக்கி, "என் குமாரரே, இப்பொழுது அசதியாயிராதேயுங்கள், நீங்கள் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படிக்கு அவருக்கு முன்பாக நிற்கவும், அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களாகவும், தூபங்காட்டுகிறவர்களாக இருக்கவும் அவர் உங்களைத் தெரிந்து கொண்டாரே !" (2 நாளா 29:11) என்று சொல்லி அவர்களையும் தேவனோடு உடன்படிக்கை செய்து கொள்ள அவர்களது அடிப்படை அழைப்பையே அவர்களுக்கு நினைவூட்டி அவர்களைப் பாரப்படுத்துகிறான்.

அப்படியே நாம் ஒருவரோடு ஒருவருக்குள்ள உறவுகளைப் புதுப்பித்து, ஒருவரையொருவர் மன்னித்து, ஒருவரையொருவர் தங்களிலும் மேலாக எண்ணி, ஒருவரோடொருவர் ஒப்புரவாகி, சமாதானம் பண்ணி, தேவனுக்கு முன்பாக ஒருவரோடொருவர் உடன்படிக்கை செய்து கொள்வோம்!

தேவன் இறங்கி தேசத்திலே தமது கிரியைகளைச் செய்வாராக !

CHAPTER 02

விரிவடையும் தரிசனம்.. பரவும் பாரம் !

PART-5

(எசேக்கியத் திட்டத்தின் ஐந்தாம் அம்சம்)

"அப்பொழுது அவர்கள்... தங்கள் சகோதரைக் கூடிவரச்செய்து, பரிசுத்தம் பண்ணிக்கொண்டு, கர்த்தருடைய வசனங்களுக்கொத்த ராஜாவினுடைய கற்பனைகளின்படியே கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்க வந்தார்கள்.." (2 நாளா 29:12 - 15)

தனிமனிதனாகிய எசேக்கியா, முதலாவது தன்னோடு ஒருமனப்பட்ட மீதியான சிலரைச் சேர்த்தான் - தன் பாரத்தையும் தரிசனத்தையும் தாங்களிருந்த நிலையையும் பகிர்ந்து கொண்டு அவர்களையும் தன்னோடு அந்த வேலையில் இணைத்து உடன்படிக்கையும் செய்தான்.

இப்போது அவனோடிருந்த அவர்கள், தங்களைச் சேர்ந்த, தங்களைப் போன்றவர்களையும் தங்களோடு இணைத்து, தங்களுக்குள்ளே தங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு, கர்த்தருடைய வசனங்களுக்கு ஒத்ததாயிருந்த ராஜாவின் கற்பனைகளின்படியே அடுத்த அடிக்குக் கடந்துசென்று ஆலயத்தை சுத்திகரிக்க வருகிறார்கள்..

ஒரு தனி மனிதன் சபைக்காகவும் தேசத்துக்காகவும் எழுந்து நிற்கும்போது அவனோடு இணையும் மீதியான கூட்டமொன்று பாரம்கொண்டு தன்னைப்போன்ற மற்றவர்களையும் தன்னோடு இணைத்து, முன்பு சபையையும், பின்பு தேசத்தையும் ஜெபத்தால் சுத்திகரிக்க ஒருமனப்பட்டு ஒன்றுகூடுகிறது.

“ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்கும்படி உட்புறத்திலே பிரவேசித்து, கர்த்தருடைய ஆலயத்தில் கண்ட சகல அசுத்தத்தையும் வெளியே கர்த்தருடைய ஆலயப்பிரகாரத்தில் கொண்டு வந்தார்கள். அப்பொழுது லேவியர் அதை எடுத்துக்கொண்டு வெளியே கீதரோன் ஆற்றிற்குக் கொண்டு போனார்கள்..

இப்படி ஒரு நாள் நிச்சயம் வருகிறது! போதகர்களும் உதவிப் போதகர்களும், தலைவர்களும் தேவ சமூகத்தில் தங்களைத் தாழ்த்தி, தங்கள் தங்கள் சபைகளுக்குள் பிரவேசித்து அங்கே உட்புறத்தில் காணப்படும் சகல அசுத்தங்களையும் வெளியே கொண்டுபோய்க் கொட்டித் தீர்ப்பார்கள். அங்கே கீதரோன் ஆற்றண்டையிலே உள்ள கெத்சமனே தோட்டத்திலே தேவகுமாரனின் கெஞ்சி மன்றாடும் சத்தம் கேட்கப்படுகிறதே!

ஓ! மீதியான பாரமுள்ள ஜனத்தோடு தேசத்து சபைகளின் போதகர்களும் கைகோர்ப்பார்களாக! தங்கள் தங்கள் சபைகளின் சகல அசுசிகளையும் வெளியே கொண்டுபோய்க் கொட்டித்தீர்ப்பார்களாக! ஓ! அவர்கள் தங்கள் சபைகளை இப்பொழுதே பரிசுத்தம் பண்ணத் தொடங்கி, 16 நாட்களுக்குள் அந்த வேலையை முடித்த எசேக்கியாவின் நாட்களின் ஆசாரிய லேவியரைப் போன்று ஜெபத்திற்கும் உபவாசத்திற்கும் நாட்களை நியமித்து சீக்கிரமே இதைச் செய்துமுடிப்பார்களாக!

ஓ! கர்த்தரின் ஆலயமாம் ஒவ்வொரு விசுவாசியும் சர்வாங்க தகனபலிபீடமான இருதயத்தில் தங்களை ஜீவபலியாய் அர்ப்பணித்து, ஆலயத்தின் சகல பணிமுட்டுகளாம் உபயோகமுள்ள சிறிய, பெரிய பாத்திரங்களான குழந்தைகள் பெரியோரோடும், சமுகத்து அப்பங்களின் மேஜையான

வசன நிலைப்பாட்டிலே தங்களைச் சுத்திகரிப்பார்களாக! அவர்கள் தங்களை முஸ்திப்பாக்கி பரிசுத்தம் பண்ணுவார்களாக! (2 நாளா 29:16 - 19)

ஒரு தனி மனிதனில் தொடங்கிய ஆரம்பம், மீதியான சிறு கூட்டமாய்ச் சேர்ந்து, ஒரு மனப்பட்டவர்களின் ஐக்கியமாய் எசேக்கியாவின் ஐந்தாவது அம்ச செயல்திட்டத்தைச் செய்து முடிப்பதில் முனைப்பாய் இறங்குகிறது.

தேவன் தமது வேதத்தின் மாதிரியின்படியே இன்னும் ஒரு முறை இந்த தேசத்தில் இதைச் செய்துமுடிக்கக் கிருபை செய்வாராக!

CHAPTER 02

தங்களுக்காகவும் தேசத்துக்காகவும் பிராயச்சித்தம்செய்தல்..

PART-6

எசேக்கியத் திட்டத்தின் ஆறாவது அம்சம் :

"அப்பொழுது ராஜாவாகிய எசேக்கியா காலமே எழுந்திருந்து, நகரத்தின் பிரபுக்களைக் கூட்டிக்கொண்டு கர்த்தருடைய ஆலயத்துக்குப் போனான்..." (2 நாளா 29:20)

தனி மனிதனாய் வேலையைத் தொடங்கிய எசேக்கியா, தன்னோடு மீதியான சிறுகூட்ட ஆசாரியரையும் லேவியரையும் சேர்த்து, " நாம் இருக்கும் நிலையையும் நிந்தையையும் பார்க்கிறீர்களே!" என்று அவர்களைத் தன்னோடு இணைக்க, பாரம் கொண்ட அவர்கள், தங்களைப் போன்ற தங்களோடு இருந்தவர்களையும் இணைத்து ஆலய சுத்திகரிப்பு செய்தனர். இப்போது இவைகளால் இன்னும் உற்சாகப்பட்டு பெலப்பட்ட அவன், காலமே எழுந்திருந்து நகரத்தின் முக்கியஸ்தர்களான பிரபுக்களையும் தன்னோடு சேர்த்து ஆலயத்துக்கு அழைத்துக் கொண்டு போகிறான்.

தேவனுக்காகவும் தேசத்துக்காவும் ஒரு தனிமனிதனோடு இணைந்த மீதியான சிறு ஜெபவீரர் குழு ஒன்று, போதகர்களையும், உதவிப்போதகர்களையும், சுவிசேஷகர்களையும், ஊழியர்களையும் ஒன்றிணைத்து, இப்போது பிரபுக்கள் போன்ற சபையின் மூப்பரையும், மூத்த விசுவாசிகளையும்,எதவிக்காரரையும் தன் தரிசனத்திட்டத்தில் இணைத்துக்கொள்கிறது. தேவன் இதை வாய்க்கச் செய்வார். தேவன் செய்வது எதுவோ அது நிலைக்குமே!

எசேக்கியா தன் ராஜ்யபாரத்துக்காகவும், பரிசுத்த ஸ்தலத்திற்காகவும், தேசம் அனைத்திற்காகவும் பிராயச்சித்தம் செய்ததுபோல, நாமும் நமக்காகவும் நமக்கு முன்னிருந்தவர்களுக்காகவும், நாமும் அவர்களும், தேவனுக்கும் தேவனுடைய ராஜ்யத்துக்கும், சபைக்கும், தேசத்துக்கும் செய்த எல்லா சேதங்களுக்காகவும் நஷ்டங்களுக்காகவும் பிராயச்சித்தம் செய்தே ஆக வேண்டுமே!

"ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு (அந்தச் சத்துரு) உத்தரவாதம் பண்ண முடியாது.." (எஸ்தர் 7:4) என்றாள் எஸ்தர்.

ராஜாதி ராஜாவாம் தேவனுக்கும், அவருடைய ராஜ்யத்துக்கும், மனித ஆத்துமாக்களுக்கும், ஏன், நம்முடைய சொந்த ஆவிக்குரிய வாழ்க்கைக்குமே கூட நம்மால் ஏற்பட்ட நஷ்டத்துக்கும் இழப்புக்கும் ஒரு அளவு உண்டோ? அதற்கு ஈடு செய்பவன் யார்? அதற்கு உத்தரவாதம் பண்ணுபவன் யார்? (தேவ ராஜ்யத்துக்கு சேதமும் நஷ்டமும் ஏற்படுத்துபவன் யாராயிருந்தாலும் அவன் சத்துருவாகவே கணக்கிடப்படுவானோ ???)

- **ஓ! நான் மாத்திரம் ஜெபிக்க வேண்டியபடி ஜெபித்திருப்பேனானால்...**

- **ஓ! நான் மாத்திரம் அவரோடு நடக்க வேண்டியபடி நடந்திருப்பேனானால்...**

- **ஓ! சகலமும் எனக்குப் பரிபூரணமாயிருக்கையில் மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் நான் மட்டும் அவரை சேவிக்கவேண்டிய பிரகாரம் சேவித்திருப்பேனானால்...**

• ஓ! ஆவியானவரின் அமர்ந்த மெல்லிய சத்தத்துக்கு நான் மட்டும் அவ்வப்போது கீழ்ப்படிந்திருப்பேனானால்...

• அவர் சொன்னபடியே நான் மட்டும் இந்த உலகத்துக்கு உப்பாகவும் ஒளியாகவும் வாழ்ந்திருப்பேனானால்...

• நான் மட்டும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காலத்தையும் நேரத்தையும் விலையேறப்பெற்றதாய்க் கருதி, பயனுள்ள வகையில் அவருக்காகவே செலவழித்திருப்பேனானால்...

• நான் மட்டும் பரிசுத்தமாய் வாழ்ந்து, என் சாட்சியை சரிவரக் காத்திருப்பேனானால்...

• என் ஆண்டவர் என் மேல் வைத்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் நான் மட்டும் அவர் மனதுக்கேற்றபடி நிறைவேற்றியிருந்தால்...

இவைகளால் என் சொந்த ஆவிக்குரிய வாழ்வில் ஏற்பட்ட விரயத்துக்கும் நஷ்டத்துக்கும், என் ஆவிக்குரிய ஜீவனுக்கும் எனக்கு நானே ஏற்படுத்திக்கொண்ட, சரி செய்யவே முடியாத பலத்த சேதத்துக்கும் நஷ்டத்துக்கும் நான் என்ன பிராயச்சித்தம் செய்வேன்? அதை எப்படி சரிக்கட்டுவேன்? ஐயோ! ஐயோ! ஐயோ !

• சபையானது இயேசுவை இவ்வுலகத்துக்குக் கொடுக்க வேண்டியபடி கொடுத்திருந்தால்...

• சபையானது இன்று போல் தன்னை உலகத்தோடு உலகமாய் சமரசம் செய்துகொள்ளாதிருந்தால்...

• சபையானது தன் ஆட்டபாட்டக் கொண்டாட்டங்களுக்கு முடிவுகட்டி, தன் முழங்காலுக்குத் திரும்பியிருந்தால்...

ஓ! இன்று என் கண்ணெதிரே எனக்குத் தெரிந்த, என் சொந்தங்கள் எத்தனை பேர் உயிரோடு அடியில்லா ஆழ நித்தியக் குழிக்குள்ளே இறங்க நான் காணவில்லையோ?

ஓ! நம் தெருக்களிலும் ஊரிலும், சபையைச் சுற்றிலும் கூட இருக்கும் கூட்டங்கூட்டமான ஜனம் ஒவ்வொரு நாளும் முடிவில்லா நித்தியத்துக்குத் தீவிரிக்கிறதை சபை காணவில்லையோ?

• அது அரசியல்வாதியோ அதிகாரவர்க்கமோ, சுகாதாரமோ பொருளாதாரமோ, மருத்துவ உலகமோ பொழுதுபோக்கு உலகமோ, விஞ்ஞானியோ அஞ்ஞானியோ, படித்தவனோ பாமரனோ, கிரேக்கனோ இந்தியனோ, ஏழையோ பணக்காரனோ, கறுப்போ சிவப்போ எப்படிப்பட்ட பிரிவைச் சேர்ந்தவனுக்கும் சுவிசேஷம் அளிக்க சபை இன்று கடனாளியில்லையோ? (ரோ 1:14)

"காலை முதல் மாலை வரை மடிந்து, கவனிப்பார் ஒருவருமில்லாமல் நித்திய அழிவடைகிறார்களே! அவர்களிலிருக்கிற அவர்களுடைய மேன்மையெல்லாம் போய்விடுமல்லவோ? ஞானமடையாமல் சாகிறார்களே!" (யோபு 4:20,21)

“மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் சபையானது விடுவிக்கவேண்டியதில்லையோ? அதை அறியோம் என்பார்களேயாகில் இருதயங்களை சோதித்தறிகிறவர்

அறியாரோ? சபையின் ஆத்துமாவைக் காக்கிறவர் அறியாரோ? (நீதி 24:11, 12)"

அப்படியானால் இந்த ஆத்துமாக்களின் நித்திய நித்தியமான நஷ்டத்துக்கு உத்தரவாதி யார்? இதுவரை நமது அலட்சியத்தினாலும் அக்கறையின்மையினாலும், அன்பில்லாமையினாலுமே நரகக் குழிக்குள் உயிரோடு இறங்கிய ஆத்துமாக்களின் நஷ்டத்துக்கும் இழப்புக்கும், அவர்களது முடிவில்லா வேதனைக்கும் அலறலுக்கும் பொறுப்பேற்பவன் யார்?

இவைகள் தவிர, விசுவாசிகளும், ஊழியரும், குடும்பங்களும் ஒருவருக்கொருவர் அறிந்தும் அறியாமலும், வார்த்தையினாலும், செய்கையினாலும், முதுகுக்குக்குப் பின்னால் செய்த காரியங்களினாலும் விளைவித்த சேதங்கள், மற்றும், விசுவாசிகள் போதகருக்கும், போதகர் விசுவாசிக்கும், கணவன்- மனைவிக்கும், மனைவி - கணவனுக்கும், பெற்றோர் - பிள்ளைகளுக்கும் விளைவித்த சேதங்கள், நஷ்டங்கள், பாதிப்புகளுக்குப் பிராயச்சித்தமும் ஈடுகட்டுதலும் செய்யப்பட வேண்டாமோ? ஒருவரால் ஒருவருக்கு உண்டான பாதிப்புகள், நஷ்டங்கள் அதிகபட்சம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சரி செய்யப்பட்டே ஆகவேண்டுமே!

தகர்க்கப்பட்ட நமது ஆவிக்குரிய பலிபீடங்கள், குடும்ப ஜெப பீடங்கள், செப்பனிடப்பட்டுச் சரி செய்யப்பட்டே ஆக வேண்டுமே! பிராயச்சித்தமும், சரிசெய்யப்படுதலும், ஈடுகட்டப்படுதலும் கட்டாயம் நடந்தே தீர வேண்டுமே!

பாவமன்னிப்பின் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட வேண்டுமே! ஒருவருக்கொருவர் ஒப்புரவாகுதலின் ஜெபங்களும், மன்னிப்புக்கோரப்படுதலும், மன்னித்து மறக்கப்படுதலும் மனப்பூர்வமாய்ச் செய்யப்பட வேண்டுமே! நமது பாவங்களுக்காகப் பாவநிவாரணபலியாகக் கிறிஸ்து தம்மையே தேவனுக்குப் பிரியமான சுகந்த வாசனையாகவும், பலியாகவும் செலுத்தியது போல மீண்டும் ஒரு முறை தேவனுக்கு முன்பாகப் போதகர்களும் மூப்பர்களும் தங்களையே பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமே!

எசேக்கியா, தன் ராஜ்யபாரத்துக்காக மட்டுமல்ல, பரிசுத்த ஸ்தலத்துக்காக மட்டுமல்ல, இஸ்ரவேல் அனைத்துக்காகவுமே பிராயச்சித்தம் செய்தது போல மூப்பர்களும் போதகர்களும் தலைவர்களும், மீதியானோர் யாவரும், தாங்கள் தங்களுக்கும், தேவனுக்கும் தேவராஜ்யத்துக்கும், தேசத்துக்கும் சபைக்கும், ஜனங்களின் விலையேறப்பெற்ற ஜீவனுக்கும் ஏற்படுத்தின நஷ்டங்களுக்குப் பிராயச்சித்தமாகத் தங்களையே மீண்டும் ஒரு முறை சமூலமாக ஒப்புக்கொடுத்து அர்ப்பணம் செய்தே ஆக வேண்டுமே!

இதைத்தான் தனது ஆறாவது அம்சத்திட்டமாகச் செய்தான் எசேக்கியா! அவனது பிராயச்சித்த பலிகள் தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்பட்டதே!

CHAPTER 02

புதுப்பிக்கப்பட்ட தேவ ஆராதனை

PART- 7

(எசேக்கியத் திட்டத்தின் ஏழாவது அம்சம்)

தன் தகப்பனாலே தேவனுடைய பரிசுத்த ஆலயத்துக்கும் பரிசுத்த நகரத்துக்கும், தேசத்துக்கும் ஏற்படுத்தப்பட்ட விலைமதிப்பற்ற சேதத்துக்கும் நஷ்டத்துக்கும் இழப்பிற்கும் பாவநிவாரண பலி செலுத்திப் பிராயச்சித்தம் செய்துமுடித்த எசேக்கியா, பிரபுக்களையும் லேவியரையும் நோக்கி, "நீங்கள் தாவீதும் ஞானதிருஷ்டிக்காரனாகிய ஆசாபும் பாடின வார்த்தைகளினால் கர்த்தரைத் துதியுங்கள்...கிட்ட வந்து கர்த்தருடைய ஆலயத்துக்குத் தகனபலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் கொண்டு வாருங்கள் என்றான்"
(2 நாளா 2:25 - 31)

தனது 10 அம்சத்திட்டத்தின் ஏழாவது பகுதியாக, பல வருடங்களாக தேவாலயத்தில் நின்றுபோயிருந்த ஸ்தோத்திரபலியும் துதி ஆராதனையும் அதின் ஸ்தானத்திலே நிலைநிறுத்தப்பட்டு கர்த்தருக்கு ஆராதனை தொடங்கப்பட்டது

ஓ! ஆராதனை என்ற பெயரில்தான் இன்று என்னென்ன கும்மாளங்கள்! குத்தாட்டங்கள்! குரங்காட்டங்கள்! ஐயோ! சபையின் துதி ஆராதனைகள் ஆவியோடும் உண்மையோடும் கூடிய ஆராதனைகளாய், பரலோகத்துக்கு ஒத்த ஆராதனைகளாய் நமது ஆலய ஆராதனைகள் பூர்வ நாட்களின் ஆராதனை நாட்களுக்குத் திரும்பாதோ?

ஒருவன் கிறிஸ்டியன் Rap என்கிறான்! ஒருவன் கிறிஸ்டியன் Pop என்கிறான்! இன்னொருவன் கிறிஸ்டியன் Remix என்கிறான்! மற்றவன் கிறிஸ்டியன் Beatbox என்கிறான்! வண்ண விளக்குகள் என்ன! கலர்க் கலர் கோட்சூட் என்ன! ஹேர் ஸ்டைல் என்ன! ஜெபதூபப் புகை போய், மிஷின் புகை மேலெழும்ப, தகப்பனே, எங்கள் வாலிபருக்கு இரங்க மாட்டீரோ? பாமாலையும் கீர்த்தனையும் ஒரு சாராரின் பாரம்பரியமாகிப் போய், மீதமெல்லாம் காமாலை கண்டு கண்சொருகிப் போகவேண்டுமோ?

இயேசு கிறிஸ்துவையும் அவரது அன்பையும் அவரது தியாக பலியையும் அறிந்திராத, ருசித்திராத ஆசாப் என்னும் சங்கீதத் தலைவனே, "கர்த்தாவே, நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்..என் வலது கையைப் பிடித்துத் தாங்குகிறீர்.. உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே மகிமையில் ஏற்றுக்கொள்வீர். பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறு விருப்பமில்லை.." (சங் 73:23 - 25) என்று சொல்லியிருக்க, இயேசுவின் அன்பையும் கிருபையையும், ஆசீர்வாதங்களையும் அள்ளி அள்ளி ருசித்திருக்கும் இன்றைய சபையின் பாடல்களில் வேத வசனங்கள் மறைந்து வேறு வசனங்கள் மலிந்து கிடப்பதை மன்னிக்கத்தான் முடியுமோ?

ஓ! தேவனே, எங்களை மன்னிக்கமாட்டீரோ? பூர்வ நாட்களின் பக்தியுள்ள ஆராதனைக்கு எங்கள் சபைகளையும் வாலிபரையும் இசைக்கலைஞர்களையும் திருப்பமாட்டீரோ ? எங்கள் நடுவிலே இப்படிப்பட்ட ஆசாபுக்கள் எழும்ப மாட்டார்களோ? எங்கள் சபைகளில் Fanny Crossby களையும், Ira D. Sanky களையும், பழங்காலப் பாமாலைக்

கீர்த்தனைப் பாடகர்களையும், சாது கொச்சு குஞ்சுகளையும், நௌரோஜிகளையும், சாஸ்திரிகளையும் திரும்ப எழுப்பமாட்டீரோ?

"உன் பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டு அகற்று.. உன் கித்தாரின் பைத்தியத்தையும், ட்ரம்ஸின் கொடுமையையும் நான் கேட்கமாட்டேன்" (ஆமோஸ் 5:23) என்று இன்றைய இளவட்டங்களின் காதுகளில் இரவெல்லாம் உம் சத்தம் இரைவதாக!

"இப்படித்தான் என் சிருஷ்டிப்பின் நாளிலே மேள வாத்தியங்களும் நாகசுரங்களும் வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தில் ஒருவனிலே ஆயத்தப்பட்டிருந்தது. ஆனாலும் அவனும் அவனுடைய ஆடம்பரமும் அவன் வாத்தியங்களின் முழக்கமும் பாதாளத்திலே தள்ளுண்டு போயின.." (எசே 28:13/ஏசா 14:11) என்று இவர்கள் காது கிழியச் சொல்லுவீராக!

எங்கள் ஆலயங்களில் தொலைந்துபோன, ஆவியோடும் உண்மையோடும் செய்யும் தேவ ஆராதனைகளும் ஸ்தோத்திர பலிகளும் மீண்டும் மீட்டெடுக்கப்படுவதாக! எங்கள் துதிகளின் மத்தியில் நீர் வாசம்பண்ண வருவீராக! "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர், பூமியனைத்தும் உம்முடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" என்று நாங்கள் ஏகோபித்து உம்மைத் துதிக்கும்போது எங்கள் தேவாலயங்கள் உமது வஸ்திரத் தொங்கலாலும், உமது மகிமையின் பிரசன்னத்தினாலும் நிறையப்பட்டு, தேவரீர் எங்கள் நடுவிலே உயரமும் உன்னதமுமான சிங்காசனத்திலே மகிமையின் மன்னராய் வீற்றிருப்பீராக!

ஆம் ஆண்டவரே, அப்படியே செய்வீராக! தேவனுக்கு ஏற்கும், பரலோகத்துக்கு ஒத்திருக்கும் மெய்யான துதி ஆராதனையின் எழுப்புதல் ஒன்றை எங்கள் சபைகள் மீண்டும் காண்பதாக!

எசேக்கியாவின் இந்த ஏழாம் அம்சத்திட்டம் எங்கள் நடுவிலே அப்படியே நிறைவேற்றப்படுவதாக! ஆமென்!

CHAPTER 02

கடைசி நபருக்கும் தரிசனம்

PART- 8

எசேக்கியத் திட்டத்தின் எட்டாவது அம்சம் :

தனிமனிதனாய் நின்று மீதியானோரை அறைகூவலிட்டு ஆசாரியரையும் லேவியருமான போதகர்களையும், உடன் ஊழியரையும் கூடிவரச்செய்து, பிரபுக்களான மூப்பர்களை எழுப்பி, ஆலயத்தை முந்தின சீருக்குக் கொண்டுவந்த எசேக்கியா, தேவன் தந்த பாரத்திலும் தரிசனத்திலும் இஸ்ரவேலின் கடை நிலையானவர்களையும் கூட இணைத்துக் கொள்கிறான்.

தேவனுடைய இதயத்தின் பாரமும் வேதனையும் கதறலும் சபையின் கடைசி விசுவாசி வரை கடத்தப்பட்டே ஆக வேண்டாமோ? சபையை சுத்திகரிப்பதிலும் பரிசுத்தப்படுத்துவதிலும், அசுத்தமானவைகளை வெளியே கொண்டு போய்க்கொட்டுவதிலும், நஷ்டங்களையும் இழப்புகளையும் ஈடுகட்டி, பிராயச்சித்தம் செய்து, தேவனுக்கு ஸ்தோத்திரபலி செலுத்துவதிலும் காட்டப்படும் தீவிரம் தலைவனில் தொடங்கிக் கடைசித் தொண்டன் வரை எடுத்துச் செல்லப்பட வேண்டுமே! தேசத்தைச் சந்திக்கவும், சபையை முந்தின சீருக்குக் கொண்டு வந்து நிறுத்தவும், பெரியோர் முதல் சிறியோர் வரை ஒவ்வொருவரின் பங்கும் இன்றியமையாததல்லேவோ?

"கீதத்தைப் பாடி பூரிகைகளை ஊதிக்கொண்டிருக்கையில்.....சபையார் எல்லாம் பணிந்து கொண்டிருந்தார்கள். பலியிட்டுத் தீர்ந்தபோது, ராஜாவும்

அவனோடிருந்த அனைவரும் தலைகுனிந்து பணிந்து கொண்டார்கள்." (2 நாளா 25: 28,29)

எசேக்கியாவின் எழுப்புதல் தீ எட்டுத்திக்கும் பரவ ஆரம்பித்ததுபோல, மிஷன் 2024க்காகப் பற்றவைக்கப்படும் இந்தச் சிறு முயற்சியான ஜெபப் பொறி, மீதியானவர்களில் தொடங்கி, போதகர்களையும் சுவிசேஷகர்கள், மிஷினரிகள், மூப்பர்கள் கடந்து ஒவ்வொரு விசுவாசியையும் பற்றிப்பிடிக்க தேவன் கிருபை செய்வாராக!

CHAPTER 02

கர்த்தருக்குப் பஸ்கா

PART- 9

(எசேக்கியத் திட்டத்தின் ஒன்பதாவது அம்சம்)

"அதன் பின்பு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்துக்கு வாருங்கள் என்று எசேக்கியா இஸ்ரவேல், யூதா எங்கும் ஆட்களை அனுப்பினதுமன்றி, எப்பிராயீம் மனாசே கோத்திரங்களுக்கும் நிருபங்களை எழுதியனுப்பினான்... (2 நாளா 30:1)

" தேசத்திற்காக தேவ சமூகத்தில் எழுந்து நிற்போம் வாருங்கள்" என்ற அறைகூவலை எருசலேமில் தொடங்கிய எசேக்கியா, தன் ராஜ்யத்தின் எல்லையான யூதாவெங்கும் பறைசாற்றுவிக்கிறான். அது தவிர தன் தரிசனத்தின் பாரத்தை, தேசத்தின் நிலைமையை தன் சகோதர தேசமான இஸ்ரவேலிலும் அறிவிக்கும்படி எப்பீராயீம், மனாசே, செபுலோன் கோத்திரங்களின் எல்லை வரைக்கும் நிருபங்களை அனுப்புகிறான்.

மிஷன் 2024 :

இன்று நமக்கு முன்னிருக்கும் பல காரியங்கள் ! சபைக்காகவும், ஸ்தாபனங்களுக்காகவும், கிறிஸ்தவ சமுதாயத்தின் அவலங்களுக்காகவும், தேசத்தின் பரிதாப நிலைக்காகவும், வரப்போகும் 2024 க்காகவும், அதற்குப் பிறகான வருடங்களின் தேச எதிர்காலத்துக்காகவும் ஒரு கூட்ட ஜனம் எழும்பவேண்டிய நாட்கள் அல்லவோ இது!

ஜெபம் ஜெபம்

ஜெபம்! முழங்கால் யுத்தமென்ற ஒரே ஒரு ஜெப ஆயுதம்! தேவன் தன் இருதயத்தின் பாரத்தை மீதியான ஒரு சிறுகூட்டத்தின் உள்ளத்தில் வைத்து, அதின் மூலம் தேச எல்லையெங்கிலும் உண்மையான ஜெபவீரர்களை, ஆவிக்குரிய யுத்த வீரர்களைத் தட்டி எழுப்பும் காலமல்லவோ இது! ஜெபவீரர்கள் தேசமங்கும் எழும்பினாலொழிய வேறு எதினாலும் ஜெயம் காணக்கூடாத இருளான காலமொன்றை நம் சொந்தக் கண்களால் இன்று காண்கிறோமே!

ஒவ்வொரு கிராமத்திலிருந்தும், பஞ்சாயத்துகளிலிருந்தும், சிற்றூர்களிலிருந்தும், நகர மாநகர, மாநிலங்களிலிருந்தும் ஜெபவீரர்கள் சாரை சாரையாய் எழும்புவார்களாக! விழிப்புணர்வு இல்லாத மாநிலங்களுக்காகவும் உண்மையாய் ஜெபிக்கக்கூடியவர்கள் இல்லாத இடங்களுக்காகவும், மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் எழுந்து கைகொடுப்பார்களாக! ஜெபம்! ஜெபம்! ஜெபம்! இது ஒன்றே முதலும் முடிவுமான அஸ்திரம் அல்லவோ? ஜெபவீரர்களுக்குத் தமது போராயுதவர்க்கங்களைத் தரிப்பிக்க தேவன் ஆவலுள்ளவராகவே இருக்கிறாரே!

எசேக்கியாவின் செய்தியைத் தாங்கி, எருசலேம் தொடங்கி, தாண் முதல் பெயர்செபா மட்டும், இஸ்ரவேலின் எல்லையெங்கும் எப்பிராயீம், மனாசே செபுலோன் மட்டும் ஊர் ஊராய்த் திரிந்த அவனது அஞ்சற்காரர் போன்று தேசம் முழுவதும் மிஷன் 2024க்கான ஜெபவீரர்களைத் திரட்டி அவர்களை ஒன்றுசேர்த்து ஒருங்கிணைக்கும்படியான செய்திகள் SMS தொடங்கி, வாட்ஸப், Telegram, phone call என்று தேசத்தின் நாலாபக்கமும் பரவுவதாக! பரப்பப்படுவதாக! ஆங்காங்கே சபைகளிலும்

ஐக்கியங்களிலும், வீடுகள்தோறும், ஆலயங்களிலும் Zoom meetings மற்றும் Google meet லும் ஜெபசேனை ஒன்று, ஒன்றுசேர்வதாக! நம்மிடமிருக்கிற எல்லா சோஷியல் மீடியா வசதிகளையும் இதற்காகவே உபயோகப்படுத்திக் கொள்வோமாக!

2 நாளா 30:10

எசேக்கியாவின் மனிதரைப் பார்த்து எப்பீராயீமரும், மனாசே கோத்திரத்தாரும், செபுலோன் புத்திரரும் நகைத்துப் பரியாசம் பண்ணினது போல, நமது மக்களே நம்மைப் பரியாசம் பண்ணினாலும் தான் என்ன? அதற்கு மத்தியிலும் ஆசேரிலும் மனாசேயில் சிலரும், செபுலோனின் சிறுகூட்டமொன்றும் மனத்தாழ்மையாகி எருசலேமுக்கு வந்தது போல நிச்சயமாகவே 2024க்கான ஜெப சேனையில் தேவ ஜனம் இணைவது நிச்சயம். எசேக்கியாவின் தேவன் நமது தேவனல்லவா?

2 நாளா 30:11

யூதாவிலும் கர்த்தருடைய வார்த்தையின்படியே ராஜாவும் பிரபுக்களும் கட்டளையிட்ட பிரகாரம் செய்கிறதற்கு *"தேவகரம் அவர்களை ஒருமனப்படுத்திற்று.."* என்பது போல, வரப்போகும் 2024க்காக இப்போதே தேவகரம் மீதியான ஒரு கூட்டத்தை எழுப்ப, அவர்களை நிச்சயம் ஒரு மனப்படுத்தியே தீரும்! அப்படியே வெகுஜனங்கள் எருசலேமில் மகாசபையாய்க் கூடினார்கள்" என்றபடியே இந்தக் காரியத்துக்காக மகா பெரிய சபை ஒன்றை ஜெபசேனையாய், யுத்த சேனையாய் தேவன் கூட்டுவாராக!

எசேக்கியா தேசமெங்கும் எழுதியனுப்பிய நிருபத்தின் சாராம்சம்: (2 நாளா 30:6-9)

- உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்புங்கள். அப்பொழுது அவர் உங்களிடத்துக்குத் திரும்புவார் !

- கர்த்தருக்குத் துரோகம் பண்ணின உங்கள் பிதாக்களைப் போலவும் உங்கள் சகோதரரைப் போலவும் இராதேயுங்கள்!

- உங்கள் பிதாக்களைப் போல உங்கள் கழுத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்!

- கர்த்தருக்கு உடன்பட்டு, அவர் பரிசுத்தம்பண்ணின அவரது சமூகத்துக்கு வந்து சேர்ந்து அவரையே சேவியுங்கள்!

- உங்கள் தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமும் உள்ளவர். நீங்கள் அவரிடத்துக் திரும்பினால் அவர் தம்முடைய முகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை.

- வாருங்கள்! பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய தேவகுமாரனின் சிலுவைக்குத் திரும்பிப் பஸ்காவை ஆசரிப்போம்!

எசேக்கியாவின் இந்தப் பத்து அம்சத்திட்டம் பழைய ஏற்பாட்டுக்கு மட்டும் தான் பொருந்துமோ? அப்படியானால் புதிய ஏற்பாட்டின் நிலைப்பாடு என்ன?

- **"எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும்.." (லூக் 24:47)**

- **"எருசலேம் துவக்கிச் சுற்றிலும் இல்லிரிக்கம் வரைக்கும்..."(ரோ 15:19)**

• **"எருசலேம் தொடங்கி பூமியின் கடைசிபரியந்தமும்..." (அப் 1:8)** என்பதே புதிய ஏற்பாட்டின் கட்டளை.

எருசலேமில் தொடங்கிய எசேக்கியாவின் எழுப்புதல் அலை தெற்கு முதல் வட எல்லைவரை ஜனத்தைக் கூட்டிச் சேர்த்ததுபோல, தேவனின் ஜெப அலை ஒன்று மையப்புள்ளியான ஒரு இடத்தில் துவங்கி, சுத்திகரிப்பும் பரிசுத்தமாகுதலும், ஜெப கூடுகையும், தேசத்திற்கான விண்ணப்பங்களும் மன்றாட்டுகளும் தேசத்தின் ஒரு முனை யிலிருந்து கடைமுனை வரை பரவியே ஆக வேண்டாமோ?

எசேக்கியாவின் ஜனம் யூதா, இஸ்ரவேல் என்ற பிரிவினையையும், பாகுபாடுகளையும் களைந்து ஒரே சகோதரராய் எருசலேமில் பஸ்காவை ஆசரிக்க ஒன்றுகூடியது போல இன்றைய சபை தன் சபைப்பிரிவுகளையும், சாதிப் பிரிவுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் பாகுபாடுகளையும் மறந்து நமக்காக பலியான நமது பஸ்காவாகிய இயேசுவின் பாடுகளின் ஐக்கியத்தில் பங்குபெற்று மகிழ்வதாக! அதற்காகக் கிறிஸ்துவின் அன்பு ஒன்றே நம்மை நெருக்கி ஏவுவதாக! சிலுவையினடியில் சபையானது ஏகோபித்து இன்னும் ஒரு முறை ஒன்றுகூடுவதாக!

பாவம் என்னும் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்! ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே! (1 கொரி 5:7,8)

அப்பொழுது, "அவர்களுடைய சத்தம் கேட்கப்பட்டு, அவர்களுடைய விண்ணப்பம் அவருடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்தில் வந்து எட்டினது.." (2 நாளா 30:27)

எசேக்கியாவின் பத்து அம்சத்திட்டத்தின் முதல் திட்டம் முதல் ஒன்பதாம் திட்டம் வரையிலான ஒவ்வொன்றும் ஒழுங்காய் செயல்வடிவிலே நம் மத்தியில் செய்யப்படுமானால், தேவசேனையின் சத்தம் கேட்கப்பட்டு, ஜெபவீரர்களுடைய விண்ணப்பம் தேவனுடைய பரிசுத்தவாசஸ்தலத்தில் வந்து எட்டி, அதினாலே தேசமெங்கிலுமிருந்து தேசத்துக்காக செய்யப்படும் வேண்டுதலைத் தேவன் கேட்டருளுவார். (2 சாமு 24:25)

CHAPTER 02

எசேக்கியத் திட்டத்தின் கடைசி அஸ்திரம்

PART- 10

போய் சுதந்தரிப்போம்

(10 அம்சத்திட்டத்தின் கடைசி அம்சம்)

"இவையெல்லாம் முடிந்த பின்பு, வந்திருந்த இஸ்ரவேலர் எல்லாரும் யூதாவின் பட்டணங்களுக்குப் புறப்பட்டுப் போய், யூதா பென்யமீன் எங்கும், எப்பிராயீமிலும் மனாசேயிலும் கூட உண்டான சிலைகளை உடைத்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மேடைகளையும் பீடங்களையும் இடித்து, அவைகளையெல்லாம் தகர்த்துப் போட்டார்கள். பின்பு இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் அவரவர் தங்கள் ஊர்களிலிருக்கிற தங்கள் காணியாட்சிகளுக்குத் திரும்பினார்கள்.(2 நாளா 31:1)

“இவையெல்லாம் முடிந்த பின்பு..."

எசேக்கியா தன்னுடைய 10 அம்சத்திட்டத்தின் முதல் திட்டத்திலிருந்து ஒன்பதாவது திட்டம் வரை திட்டமாய்ச் செய்து முடித்தபின்பு, தேவனுக்காகவும் தேசத்துக்காகவும் அவன் கொண்ட பாரமும் வைராக்கியமும், யூதாவிலும் இஸ்ரவேலிலுமுள்ள ஒவ்வொருவரையும் பற்றிப்பிடித்தது. தேசத்தின் நிர்ப்பாக்கிய நிலையின் யதார்த்தம் ஒவ்வொரு கண்களிலும் பற்றியெரிய, தலைவனின் தரிசனத்தையும் பாரத்தையும் தங்கள் இரத்தநாளங்களில் ஏற்றிக் கொண்டவர்களாய், ஊரெங்கிலும் தெருத்தெருவாய்ச் சென்று சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை

வெட்டி, மேடைகளையும் பீடங்களையும் இடித்துத் தகர்த்துப்போட்டனர் யூதாவும் இஸ்ரவேலும்..

ஒரு தரிசனத்தையோ பாரத்தையோ செயல்பாட்டுக்குக் கொண்டுவர ஜனங்களை ஒருமனப்படுத்துவது தேவகரம் மட்டுமே! குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காக தேவ ஜனம் ஒருமனப்பட்டு ஏகோபித்து நிற்கும்போது தேவன் அதை அவர்கள் மூலம் வாய்க்கச் செய்யவே செய்கிறார்.

எசேக்கியாவின் பாரமும் தரிசனமும் பூரணமாய் நிறைவேறிமுடியக் கடைசியாகக் கை கொடுத்தவர்கள், அதைச் செய்து நிறைவேற்றிய சாமான்ய ஜனங்களே! அவர்கள் செய்ததெல்லாம் தெருத்தெருவாய், வீதி வீதியாய் ஊர் ஊராய்ச் சென்று விக்கிரகங்களையும் தோப்புகளையும் உடைத்தெறிந்ததே!

இங்கே நம் தேசமெங்கும் விக்கிரகங்கள். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, இமயத்தின் முகடுகள் முதல் இந்தியப் பெருங்கடலின் வாசல்வரை தெருத்தெருவாய், வீடுவீடாய் விக்கிரகங்கள். அப்படியெனும்போது இதில் செய்யவேண்டியது என்ன?

ஊர் முழுவதும் நிறைந்திருக்கிறவனிலும் நம்மில் இருக்கிறவர் பெரியவர் அல்லவா? தேசத்தை ஆளுபவர்களையும் அதிகாரத்தில் வீற்றிருக்கிறவர்களைக் காட்டிலும், ராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை ஏற்படுத்தும் நம் ராஜாதி ராஜாவானவர் பெரியவரல்லவா? காலாகாலமாய் இந்தத் தேசத்தை இருளிலே வைத்திருப்பவனிலும், "வெளிச்சம் உண்டாகக்கடவது" என்று சொல்லி அநாதிகாலமாய் உலகங்களை உண்டாக்கிய உன்னதர் மகா பெரியவர் அல்லவா?

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொண்டவராய், "உன்னை அனுப்புகிறவர் நானல்லவா?" என்று சொல்லித் தமது அதிகாரம் அனைத்தையும் நமக்குத் தந்து நம்மைப் பார்த்து, "நீ தேசத்தில் பாய்ந்து போ, உனக்கு அணையில்லை.." (ஏசா 23:10) என்று சொல்லி அனுப்புகிற நம் தேவன் பெரியவரல்லவா?

எசேக்கியாவின் ஜனம் ஊர் ஊராய்ப் புகுந்து துவம்சம் செய்தது போல, தேவ ஜனம் இப்போது செய்ய வேண்டியது என்ன? இங்கே தான் சபையின் விசுவாசிகள் ஒவ்வொருவரின் செயலாற்றலும் தொடங்குகிறது. தேவன் தந்த விசுவாசத்தோடும் அபிஷேகத்தோடும், வல்லமையோடும் பாரத்தோடும், வைராக்கியத்தோடும் வீதி வீதியாய்ப் படைபடையாய்க் களமிறங்கி அந்தந்தத் தெருவிலும், நால் முக்குச்சந்திகளிலும், ஊரின் பிரதான வீதிகளிலும், விக்கிரகக் கோட்டையான நகரங்களிலும் உட்புகுந்து சகல அந்தகார சேனைகளையும், விதவிதமான அசுத்த ஆவிகளையும் வேதவசனத்தினாலும், இயேசுவின் இரத்தத்தின் வல்லமையினாலும், பரிசுத்தஆவியின் அபிஷேகத்தினாலும் கட்டும்போது அவைகள் கட்டப்பட்டு செயலிழந்துபோவது உறுதி! இதை ஒவ்வொரு கிராமத்திலும், சிற்றூரிலும் நகரங்களிலும், ஊரின் மூலைமுடுக்குகளிலும் செய்தாக வேண்டும். தவிர, அந்தந்த ஊர்களிலும் தெருக்களிலும் உள்ள விசுவாசிகளின் வீடுகளில் கூடுதலும், ஜெபித்தலும் துதித்தலும், அந்தந்தப் பகுதிகளுக்காக ஆவிக்குரிய யுத்தம் செய்து அந்தந்தப் பகுதிகளை கிறிஸ்துவின் ஆளுகைக்குள் கொண்டுவந்து அதை இயேசுவின் இரத்தத்தினாலே முத்திரையிடுவதுமே பத்து அம்சத்திட்டத்தின் க்ளைமாக்ஸ்!

ஏனெனில்..

● 7 பெரிய ஜாதிகளையும் 39 ராஜாக்களையும் ஒவ்வொருவராய்ச் சங்கரித்து வாக்குத்தத்த பூமியை சுதந்தரித்தது இப்படித்தான்!

● எருசலேமின் அலங்கம் 52 நாட்களில் கட்டிமுடிக்கப்பட்டதும் இப்படித்தான்!

● எருசலேம் தேவாலயம் இரண்டாம் முறை கட்டப்பட்டதும் இப்படித்தான்!

இந்தப் பத்தாவது அம்சத்தில் தான் சபையின் ஒவ்வொரு விசுவாசியின் பங்கும் இன்றியமையாததாகிறது. விசுவாசிகளுக்கு தரிசனமும் பாரமும் ஊட்டப்பட்டு, அவர்கள் அறைகூவலிட்டு அழைக்கப்பட்டு, அதினாலே ஒருங்கிணைந்து எழுந்து நின்று கட்ட வேண்டியவர்கள் அவர்களல்லவா?

இங்கே தான் சபையானது மிக முக்கியமான ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்!

● "நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ்செய்யப் புறப்பட்டுப்போகையில் குதிரைகளையும் இரதங்களையும், உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால் பயப்படாயாக! உங்கள் இருதயம் துவள வேண்டாம். நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம். உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம் பண்ணவும், உங்களை இரட்சிக்கவும் உங்களோடே கூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர்.." (உபா 20:1-4) என்னும் வார்த்தையை ஆவிக்குரிய யுத்தவீரர்கள் தங்கள் நெஞ்சில் பதித்துக்கொள்வார்களாக!

● காஷ்மீர் முதல் கன்னியாகுமாரி வரை காணப்படும் பழங்காலக் கோவில்களையும் விண்ணைத்தொடும் விக்கிரகக் கோபுரங்களையும், ஆயிரங்காலப் புராதன மடாலயங்களையும், ஆயிரங்கால் மண்டபங்களையும், மலைக்குகைக் கோயில்களையும், அதிலே காலாகாலமாய்க் குடியிருந்து ஆட்சி செய்துவரும் வித்தியாச வித்தியாசமும் விதவிதமுமான ஆவிகளையும் கண்டு கலங்காதபடி ஜெபவீரர்கள் எச்சரிக்கையாயிருக்கக்கடவர்கள் !

● பார்வோனையும் அவனது பலத்த சேனையையும் செங்கடலிலே கவிழ்த்துப்போட்டவரை அவர்கள் நினைத்துக்கொள்வார்களாக !

● வெறும் 300 பேரைக்கொண்டு கடற்கரை மணலத்தனையான மீதியானியர்களின் சேனையை முறியடித்தவரை மீண்டும் ஒருமுறை ஞாபகத்தில் இருத்திக்கொள்வார்களாக!

● பெலமுள்ளவனுக்காகிலும் பெலனற்றவனுக்காகிலும் உதவி செய்வது எனக்கு லேசான காரியம் என்று ஆசாவுக்குச் சொல்லிக்கொடுத்து, அவனுக்கு விரோதமாய்ப் பத்து லட்சம் பேர் கொண்ட சேனையோடு வந்த சேராவை முறியடித்த அவரேயே நினைத்துக்கொள்வார்களாக !

● மோவாபியரும் அம்மோனியருமான ஏராளமான கூட்டத்துக்கு முன்பாக நிற்கவும், தான் செய்யவேண்டியது இன்னதென்று தெரியாமலும் கலங்கி நின்ற யோசபாத்துக்கு முன்பாக, அவன் எதிரிகளே ஒருவருக்கொருவர் பட்டயத்தை உருவிக் கைகலக்கச் செய்து, ஒருவரும் தப்பக்கூடாமல் அவர்கள் பாளயத்தைச் சவக்கிடங்காகிப் போட்ட யுத்தத்தில் வல்லவராம் அவரையே ஆவிக்குரிய நமது யுத்தவீரர்கள்

நினைத்துக்கொள்வார்களாக ! (2 நாளா 20:1 - 25)

• எலிசா காலத்திலே இஸ்ரவேலுக்கு விரோதமாய் வந்த சீரிய ராஜா பெனாதாத்தின் இராணுவ வீரர்களின் காதுகளிலே இரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும், மகா இராணுவத்தின் இரைச்சலையும் கேட்கப்பண்ணி, அவர்களை இருட்டோடே எழுந்திருந்து தங்கள் கூடாரங்களையும், பாளயத்தின் வஸ்துக்கள் யாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு ஓட ஓட விரட்டியவரை நினைத்துக் கொள்ளக்கடவர்கள் ! (2 இரா 7: 5, 6, 7,14,15)

• இஸ்ரவேலருக்கும் யூதாவுக்கும் விரோதமாய் வந்த மோவாபியர் கண்களுக்கு முன்னால் காணப்பட்ட ஏதோமின் தண்ணீர்கள் மேல் சூரியனைப் பிரகாசிக்கப்பண்ணி, அதுவே அவர்கள் கண்களுக்கு இரத்தமாய்க் காணப்படச்செய்து, இஸ்ரவேலுக்கு முன்பாக மோவாபியரை முறிந்தோடப் பண்ணியவரை சபை இன்னொரு முறை நினைத்துக்கொள்ளக்கடவது! (2 இரா 3:20 - 24)

• இதே எசேக்கியாவுக்கு விரோதமாய் வந்த சனகெரிப்பின் பாளயத்திலே ஒரே இராத்திரியில் ஒரேயொரு தூதனை அனுப்பி 1,85,000 பேரைச் சங்கரித்து, அந்தச் சனகெரிப்பையும் அவன் பிள்ளைகளின் கைகளாலேயே பட்டயத்தால் வெட்டிச்சாய்த்தவரை சபை இன்னும் ஒருமுறை ஞாபகப்படுத்திக்கொள்ளக்கடவது! (ஏசா 37:35 - 38)

• எபேசியரின் மகா தேவியாகிய தியானாளே பெரியவள் என்று ஒரு கூட்டம் கூச்சலிட்டுக்கொண்டிருந்தாலும் தான் என்ன? அதே எபேசுவிலே தங்கள் புஸ்தகங்களை மலை மலையாய் குவித்துத் தீ வைத்துக் கொளுத்திய மாயவித்தைக்காரரின் செய்கையை ஜெபவீரர்கள் இன்னும்

ஒரு முறை நினைவூட்டிக்கொள்ளக்கடவர்கள் ! (அப் 19: 19, 27, 28)

பூமியைத் தத்தளிக்கப்பண்ண கர்த்தர் எழும்பும் அந்நாளிலே, அவருடைய பயங்கரத்திற்கும் அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி, கன்மலையின் வெடிப்புகளிலும் குன்றுகளின் சந்துகளிலும் புகுந்து கொள்ளும்படிக்கு மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும் மூஞ்சுருக்களுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான்.. விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்து போகும்..கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார்.. (ஏசா 2:17-21)

என்றும்..

"அந்நாளிலே விக்கிரகங்களின் பேரும் தேசத்தில் இராதபடிக்கு அழிப்பேன். அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை. தரிசனம் சொல்லுகிறவர்களையும் அசுத்த ஆவிகளையும் தேசத்திலிருந்து போய்விடவும் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" என்ற வார்த்தையை ஜெப வீரர்கள் தங்கள் இருதயத்திலே முத்திரைவெட்டாய்ப் பதித்துக்கொள்வார்களாக! (சக 13:2)

- ஆப்கானிஸ்தானின் பாமியான் மலைக்குகைகளிலிருந்த 1300 வருடப் புராதன பிரம்மாண்ட புத்தர் சிலைகளை ஓரிரு நாட்களிலேயே ஏர் ஸ்ட்ரைக் மூலம் தகர்த்தெறிய தறிகெட்ட தாலிபான்களாலேயே கூடுமானால்...

● இமய மலைச்சாரலின் உருகிய பனியினால் மந்தாகினி ஆற்றில் எழுந்த காட்டாற்று வெள்ளம் ஒன்று 7ம் நூற்றாண்டுப் புராதனப் புண்ணிய ஸ்தலமான கேதார்நாத்தைத் துவம்சம்பண்ணித் துவைத்தெடுத்துத் தரைமட்டமாக்கிப் போடக்கூடுமானால்...

● சுனாமி ஒன்று வந்து சகலத்தையும் கீழது மேலது ஆக்கிப்போடக்கூடுமானால்...

தேசத்தைத் தத்தளிக்கப்பண்ண கர்த்தரே எழும்பும்போது அவருடைய சத்தம் பூமியை அசையப் பண்ணாதோ ? இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தம் செய்திருக்கிறாரே! (எபி 11:26)

ஆகவே தேவன் தாமே நமது சேனை அதிபனாய் நிற்கும்போது, அவரது சேனையில் போர் வீரராய் நாம் அவரது கட்டளை ஒவ்வொன்றையும் அப்படியே நிறைவேற்றும்போது, மிஷன் 2024 என்ன, அதைத் தொடர்ந்து தேசமும் தேவனுடையதாகும் அந்த நாள் தூரமல்லவே!

CHAPTER 03

சிந்தை எனும் சிறை

"கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமா ? (2 இரா 7:2)"

"பிரதர்..போய் வேற ஏதாவது வேலை இருந்தா பாருங்க பிரதர்.."

"இதெல்லாம் நடக்கிற சமாச்சாரமா?

- மிஷன் '24 ஆம்...

- ஒரு மீதியான ஒருமனப்பட்ட ஜனம் கூடணுமாம்...

- பிறகு அவர்களைப் போலவே அவர்களோடே இன்னொரு சின்ன கூட்டம் ஒண்ணு சேருமாம்...

- அப்புறம் போதகர்களும் மூப்பர்களும் சேருவார்களாம்...

- பிறகு கடைசி விசுவாசி வரை இதில் பங்கேற்பார்களாம்...

- இப்படியே எல்லாரும் சேர்ந்து கைகோர்த்து காஷ்மீர்ல இருந்து கன்னியாகுமரி வரை ஜெபித்து ஜெபித்து விக்கிரகக் கோட்டைகளையெல்லாம் விழப்பண்ணி, அப்படியே தேசத்தைச் சொந்தமாக்கிவிடுவார்களாம்!"

“எசேக்கியா ராஜா செய்தானாம்... இவங்களும் செய்துருவாங்களாம்! என்ன பிரதர் கதை சொல்றீங்க?

இதெல்லாம் பைபிள் கதைக்கு வேணா ஒத்து வரலாம்...நடைமுறைக்கு ஒத்துவர்ற சமாச்சாரமா பிரதர் இதெல்லாம்..?"

இப்படி ஒரு எண்ணம் நம் ஒவ்வொருவரது மனதிலும் எழாமல் இருக்கப்போவதே இல்லை.

- அப்படித்தான், தாய் தகப்பனே பிள்ளைகளை ஆக்கித் தின்ன நேர்ந்ததொரு கொடும் பஞ்சத்திலே, "நாளை இந்நேரத்தில் கர்த்தர் ஒரு காரியத்தைச் செய்வார்" என்று எலிசா அடித்துச் சொன்னபோது, "கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமா?" என்று கேட்டான் ஒருவன்.. (2 இரா 6:24 - 33/ 7: 1- 20)

- அப்படித்தான் சொன்னார்கள், 12 வேவுகாரரில் பத்துப்பேர். " நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மால் கூடாது, அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள்..அந்த இராட்சதப்பிறவிகள் முன் நாங்கள் வெட்டுக்கிளிகளைப் போலிருந்தோம்" என்று..

- அப்படித்தான் கோலியாத்துக்கு விரோதமாய்ச் செல்ல எத்தனித்த தாவீதைப் பார்த்து சவுல் சொன்னான்.." நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னால் ஆகாது..நீ இளைஞன்.. அவனோ தன் சிறு வயது முதல் யுத்தவீரன்.." என்று. (1 சாமு 17:32)

- அப்படித்தான் சொன்னார்கள் சன்பல்லாத்தும் தொபியாவும்..."இந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன? இவர்களுக்கு இடம் கொடுக்கப்படுமோ? ஒரே நாளில் முடித்துப்போடுவார்களோ? சுட்டெரித்துப்போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர் கொடுப்பார்களோ?" என்று ..

- "ஜாதிகளின் தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்ததுண்டோ?" என்று எசேக்கியாவை அப்படித்தான் மிஞ்சி மிரட்டினான் சனகெரிப்பின் தளபதி ரப்சாக்கே..

- " எனக்குப் பின்செல்லுகிற ஜனங்கள் எல்லாரும் கைக்கு ஒரு பிடியாவது வாரிக்கொள்ள உன் சமாரியாவின் தூள் போதுமானதாயிருக்குமோ?" என்று அப்படித்தான் சவால்விட்டான் பெனாதாத்.. (1 இரா 20:10)

- "இதை மூன்று நாளில் எழுப்புவாயோ?" என்று அப்படித்தான் இயேசுவைக் கேட்டனர் பரிசேயரும் சதுசேயரும்..

அநேக நேரங்களில் சத்துரு, தான் சொல்வதையே நமது சிந்தையிலும் வைத்து, சிந்தையைச் சிறையாக்கி, நம்மை அப்படியே நினைக்கவும், ஏற்றுக்கொள்ளவும், சொல்லவும், கேள்வி கேட்கவுமே வைத்துவிடுகிறான்..

இது நடக்கிற காரியமா? நடக்குமா? நடக்குமா? நடக்குமா?

- **ஒரே குடும்பத்துக்குள்ளும், சகோதர சகோதரிகளுக்குள்ளும், சபைக்குள்ளேயுமே ஒற்றுமையும் சமாதானமும் இல்லாதிருக்கும்போது, தேசத்தில் இப்படியெல்லாம் நடப்பது சாத்தியமா?**

- **2000 வருடங்கள் நடக்காதது 2 வருடங்களில் நடந்து விடுமோ?**

- **சங்க காலம் என்னும் பழங்காலந்தொட்டுப் பாரம்பரியமுள்ள விக்கிரகக் கோட்டையான இந்த இந்து தேசம் அத்தனை எளிதில் தேவன் வசமாகிவிடுமோ?**

• காலாகாலமான விக்கிரகக் கோட்டைகள் அவ்வளவு எளிதில் விழுந்து விடுமோ ?

• இத்தனை காலங்கள் சுவிசேஷப்பணி நடந்தும் இந்த இந்திய மண்ணில் நாம் இன்னும் சிறுபான்மையினர் தானே?

• சிறுபான்மையினரை நசுக்கும் பெரும்பான்மை அரசாங்கத்துக்கு முன் நாம் என்ன செய்து விட முடியும்?

• சபைகள் ஒன்றுகூடிவருதல் எல்லாம் நடக்கிற காரியமா?

• இதற்கு முன் "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" என்று இப்படி அறைகூவலிட்டவர்களெல்லாம் இப்போது எங்கே? இப்படி ஆரம்பிச்சவங்க எத்தனை பேர் !

• இதெல்லாம் போக, இன்றைய லவோதேக்கிய சபைகளின் பரிதாப நிலையை சற்று உற்றுப்பாருங்கள்!

• "இந்த மிஷன் சமாச்சாரமெல்லாம் ஏட்டுச் சுரக்கா பிரதர்..கறிக்கு உதவப் போறதில்ல...ஏட்டுக்கும் எதார்த்தத்துக்கும் ஏணி வச்சாலும் எட்டுமா?

இதுதான் நம் மூளை அறிவும், சத்துருவுக்குச் சிறைப்பட்டுப்போன நம் சிந்தனையும் நமக்குச் சொல்வது. உண்மை நிலவரத்தைக் காணும்போது இதெல்லாம் உண்மையாகவே கூட காட்சியும் அளிக்கிறது.

ஆனால் வேதம் சொல்வது இதற்கு முற்றிலும் மாறுபட்டதல்லவா?

- எலிசா சொன்னது போலவே கர்த்தர் வானத்திலே மட்டுமல்ல, எதிரியின் பாளயத்திலேயும் மதகுகளை உண்டாக்கவில்லையோ ?

- வேவுகாரரில் 10 பேர் சொன்னது அல்ல, இரண்டு பேர் சொன்னதின்படியே அல்லவோ நடந்தது ?

- எசேக்கியா அல்ல, ஒரே ராத்திரியிலே செத்து சவமாகிப்போன 1,85,000 பேரில் ரப்சாக்கேயும் கூட அவர்களில் ஒருவனாய்க் கிடந்தானல்லவோ ?

- பெனாதாத் அல்ல, ஜெயித்தது யோசபாத் அல்லவோ ?

- சொன்னபடியே இயேசுவானவர் உயிரோடே எழவில்லையோ ?

- எனக்கு இந்த மலைநாட்டைத் தாரும்...நான் அவர்களைத் துரத்திவிடுவேன் என்று சொன்ன காலேபின் வசமல்லவோ காதேஸ்பர்னேயா வந்து சேர்ந்தது ?

இதற்காக நாம் முதலாவது வசமாக்க வேண்டியது நமது சிந்தை! எதிரியைக் களம் காணுமுன் ஜெயிக்கப்பட வேண்டியது நமது சிந்தையெனும் போர்க்களமே! " "பட்டணத்தைப் பிடிப்பவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குபவன் உத்தமன்" என்றான் சாலமோன் (நீதி 16:32)

Spiritual Strongholds எனப்படும் சிந்தையின் சிறையை உடைத்து நமது சிந்தையைச் சிறையாக்கினவனை முந்திக்கட்டினாலொழிய எத்தனை அம்சத்திட்டம் தீட்டினாலும் ஒன்றும் இங்கே பலிக்கப்போவதில்லை!

அப்படியானால் இந்த சிந்தைச் சிறை என்றால் என்ன? இந்தச் சிறையிலே நம்மைச் சிறையாக்கி வைத்திருக்கும் இராட்சசன் யார்?

“தேவ சித்தம் இதுவே" என்று நன்கு அறியப்பட்ட காரியங்களுக்கு விரோதமாய், நம் கண்களுக்கு முன் யதார்த்தத்தில் நாம் காணும் எதிர்மறையான சூழ்நிலைகளை அப்படியே நம்பி ஏற்றுக்கொண்டு, "இதெல்லாம் நடக்கவே நடக்காது" என்ற எண்ணத்தையே முழுவதும் உள்வாங்கிக்கொண்டு நாம் வாழும் நம்பிக்கையற்ற மனநிலையே சிந்தையின் சிறை.

சத்துருவாம் பெலவானால் சிறைப்படுத்தப்பட்ட நமது சிந்தையைக் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்துதலே சிந்தையின் போர்க்களத்தில் நாம் காணும் முதல் வெற்றி!

மிகவும் ஆபத்தான மூன்று சிந்தையின் சிறைகள் :

1. ஒற்றுமை என்பதெல்லாம் இங்கே சாத்தியமே இல்லாதது என்ற வலுவான எண்ணம் :

"விசுவாசிகள் மத்தியிலும் சபையின் நடுவிலும் ஒற்றுமை ஒருமைப்பாடெல்லாம் நடக்காத ஒன்று பிரதர்.." என்ற வலுவான எண்ணமே நமது மூளைக்குள் பல காலமாய்ப் பாய்போட்டுப் படுத்திருக்கும் முதல் இராட்சசன்.

அப்படியென்றால் இயேசு கிறிஸ்து நமது ஒற்றுமைக்காகவும் ஒருமனப்பாட்டிற்காகவும் ஜெபித்த யோவான் 17ன் ஜெபம் கேட்கப்படவில்லையோ?

தமது நேசகுமாரனாகிய இயேசுவின் ஜெபத்தைப் பிதாவானவர் கேட்டு பதில் அருளாதிருப்பது எப்படி? அப்படியானால் நமக்குள் வலுவாய் வேரூன்றியிருக்கும் "சத்தியமாய்ச் சாத்தியமாகாது" என்ற எண்ணம் கிறிஸ்துவினுடையது அல்ல, அது சத்துருவின் வஞ்சமே!

கிறிஸ்துவுக்காக செயலாற்ற நம்மைத் தடுத்து நிறுத்தும் முதல் எதிரியே இந்த எதிர்மறையின் வலுமையான எண்ணம் தான். யூதா இஸ்ரவேல் என்ற இரு சக உதிரங்களும் பல காலமாக ஒன்று வடக்குக்கும் ஒன்று தெற்குக்குமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு முறுக்கிக்கொண்டிருந்த அந்த நிலையிலும், "தேவகரம் அவர்களை ஒரு மனப்படுத்திற்று.." (2 நாளா 30: 12) என்ற ஒரே ஒரு வார்த்தையே இன்று நமது சிந்தைச் சிறையின் அஸ்திபாரத்தை ஆட்டம்காணச் செய்யவேண்டுமல்லவோ ?

2. Spiritual Apathy என்று சொல்லப்படும் ஆவிக்குரிய அக்கறையின்மை:

சந்திக்கப்படாத ஆத்துமாக்கள் மேல் நமக்கு அக்கறையே இல்லாமல் போவதற்குக் காரணம், நமது சிந்தையின் சிறையிலிருக்கும் "இவங்கல்லாம் இரட்சிக்கப்படமாட்டாங்க சிஸ்டர்..இதெல்லாம் எவ்வளவு கஷ்டமான ஏரியா தெரியுமா? இங்கயெல்லாம் சுவிசேஷம் அறிவிக்க சான்ஸே இல்ல பிரதர்.." என்ற பலமான எண்ணமே !

- **ஐயோ காஷ்மீரா ? ஏற்கனவே தீவிரவாதம்! அவ்வளவும் முசல்மான் ஏரியா பிரதர்.. வெளிய போய் ஒரு tract குடுத்துப் பாருங்க...அப்புறம் பாருங்க, சுன்னத்து தான்! கஷ்மீர் பிராமணப் பண்டிட்டுங்களே இருக்கிற இடம் தெரியாம இருக்கிறானுங்க.. இதுல நீங்க வேற "காஷ்மீர் கர்த்தருக்கே!" னு அங்கேயே போய் போஸ்டர் அடிச்சி ஒட்டணும்ங்கிறீங்க! போங்க பிரதர்..வேணா ஜாலியா போய் காஷ்மீரை நல்லா சுத்திப்பாத்துட்டு வாங்க!"**

- **ஐயோ உத்தராகண்டா? அங்க இருக்கிறவனுங்க ஏற்கனவே எங்கள் பூமி தேவர்கள் பூமின்னு கொடி**

உத்தராக்கண்டு மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், புடிச்சுட்டு நிக்கிறானுங்க..வேணா ஒண்ணு செய்ங்க..போய் அப்படியே ஒரு நடை Paudi Gadwal வரை போய் அந்த கடையாந்திர மலைக்கிராமங்களையும் பாத்துட்டு வாங்க..சுவிசேஷம் சொல்லப்போறீங்களா? உங்களை மட்டுமில்ல, உங்க டீமையும் சேத்து நீங்க போற வண்டியோட மலை உச்சியிலிருந்து அடிகாணாத ஆழத்தில உருட்டி உட்டானுங்கன்னு வச்சிக்குங்க, ஒரு எலும்புகூட தேறாது..இதெல்லாம் பாத்துட்டுதான் அங்க உள்ள டேராடூன்ல இருக்கற ஏகப்பட்ட பைபிள் காலேஜ்ல இருந்து ஒருத்தர் கூட இந்த மலை மேல ஏர்றதேயில்ல... நீங்க வேற போகப்போறீகளாக்கும்?

- ஐயையோ இமாச்சல் பிரதேஷா? ஷிம்லா, குல்லு, மணாலின்னு ஊர் சுத்த வேணா போகலாம்.. அங்க இருக்கிற சபைகளே படாதபாடு படுது.. காணாததுக்கு நம்ம மிஷினரிங்களைக் காப்பியடிச்சி, நம்மாளுங்க போக முடியாத இடங்கள்ளேல்லாம் அந்த உள்ளூர் ஆர் எஸ் எஸ்க்காரனுங்க "சரஸ்வதி வித்யா மந்திர்"னு அங்கங்க கிராமங்கள்ளேலாம் ஸ்கூல் வச்சி கவுண்ட்டர் குடுக்கிறானுங்க..போங்க பிரதர்.. சுவிசேஷம் சொல்லி அந்த ஊரையெல்லாம் ஆதாயமாக்குறதெல்லாம் நடக்கற கதையே இல்ல.."

- ஐயோ சாமி! உத்திரப்பிரதேசமா? மனுசனுக்கு ஆஸ்பத்திரியையும் ஆம்புலன்ஸையும் காணோம்..மாட்டுக்கு ஆம்புலன்ஸாம்! மாட்டுக்குப் பராமரிப்பு கூடங்களாம்! - கோடி கோடியா கொட்றானுங்க..

தாழ்ந்த சாதின்னு சொல்லி உயர்சாதிக்காரன் தன்னோட இடதுகால் சப்பாத்துல தண்ணிய ஊத்தி அதைத் தாழ்ந்த சாதிக்காரன்னு சொல்றவனுக்குக் குடிக்கக் குடுத்து, அந்த

ஷூவாலயே அவனை அடிக்கிறான்..ஆணவக்கொலை, கௌரவக் கொலைங்கிற trend ஐ நாட்டுக்கு அறிமுகப்படுத்தி ஆரம்பிச்சுவச்சவனுங்களே இந்த உபிக்காரனுங்க தானே! இருக்கிற சபைகள்லாம் ஏதோ இருக்கறத வச்சி காலம்தள்ளிட்டுப் போகுது! இதுல எங்க பிரதர் சுவிசேஷம் சொல்லி இந்தக் கொரங்காட்டிப் பயலுவள கொண்டு வர்றது..?

- **அரியானாவா? ஏற்கனவே அங்க அவுங்க ஆட்சி! ஓம் பிரகாஷ் சவுத்தாலா பாவம் 9 வருஷம் உள்ள இருந்திட்டு இப்பதான் வெளிய வந்தாரு..வந்த ஆளை மறுபடி 4 வருஷம் போட்டு உள்ள தள்ளிட்டானுங்க..**

கிரேஸ் பைபிள் காலேஜ்னு ஆசியாவிலேயே மிகப்பெரிய இடம் கொண்ட பைபிள் காலேஜ் இங்க தான்.. அதுவே இப்ப இங்க மூடிக்கெடக்கு...நீங்க வேற! அரியானா அல்லேலூயான்னு சொல்லிகிட்டு..."

இப்படிப்பட்ட "முடியவே முடியாது" என்ற பலமும் வலுமையுமான எண்ணங்களே சிந்தையின் இரண்டாவது பெலவான். நமது தலைக்குள்ளே குந்திக் குடியிருக்கும் இந்த இராட்சசனை முதலாவது கட்டி வெளியே தூக்கியெறிந்தாலொழிய காஷ்மீர் என்ன, கடம்பூர் கூட வசப்படாது!

3. ஆவிக்குரிய குருட்டாட்டம் என்னும் சத்துருவின் ஆயுதம் :

நமது சிந்தைச் சிறையிலே பதுங்கியிருக்கும் மூன்றாவது மிகப்பெரிய பெலவான், நம்மை ஆவிக்குரிய அறியாமையிலும், குருட்டாட்டத்திலுமே வைத்திருக்கும் "அறிவிலி" என்னும் இராட்சசன்.

“சாத்தானுடைய தந்திரங்கள் நாம் அறியாதவைகள் அல்லவே" என்றார் பவுல். பவுல் வேண்டுமானால் அவனது தந்திரங்களை நன்கு அறிந்து தெரிந்து புரிந்தவராய் இருந்திருக்கலாம். ஆனால் நம் மக்களுக்கு இந்த மாதிரி விஷயங்களின் ABCD கூட தெரியாமலே இருப்பது தான் உண்மை. " என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள் என்றும், என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப் போகிறார்கள்" (ஓசியா 4:6/ ஏசா 5:13) என்றுமல்லவா வேதம் சொல்கிறது?

இன்று விசுவாசிகளுக்குக் கர்த்தருக்குள் தாங்கள் யார் என்ற அறிவோ, தங்கள் அதிகாரம் என்ன என்ற அறிவோ, தாங்கள் ஆராதிக்கும் கர்த்தர் எப்படிப்பட்டவர் என்று தனிப்பட்ட முறையில் அவரை அறிந்துவைத்திருக்கும் அறிவோ, தங்கள் சத்துரு யார்? அவனுடைய யுக்திகள் என்ன? அவனுடைய தந்திரங்கள், போர் நுணுக்கங்கள் என்னென்ன, வஞ்சகங்கள் என்ன, அவனது பெலன் என்ன, ஆவிக்குரிய யுத்தமென்றால் என்ன? என்ற இப்படிப்பட்ட அடிப்படை ஆவிக்குரிய அறிவோ புரிந்துகொள்ளுதலோ கூட இல்லாமல் இருப்பது தான் இன்றைய ஆவிக்குரிய உலகின் வேதனையான உண்மை. நம் மக்களுக்குத் தெரிந்ததெல்லாம், "இயேசு நேசிக்கிறார், இயேசு விடுவிக்கிறார், இயேசு சுகமளிக்கிறார், இயேசு ஆசீர்வதிக்கிறார்.." அவ்வளவு தான்!

ஆக, விசுவாசிகளை இப்படிப்பட்ட ஆவிக்குரிய அறியாமையிலும் குருட்டாட்டத்திலும் வஞ்சகத்திலுமே அழுத்தி சிந்தைச் சிறைக்குள் அடைத்து வைத்திருப்பதே மூன்றாவது பெலவானின் தந்திரம்.

இந்தச் சிந்தைச் சிறையின் கதவுகள் உடைக்கப்பட்டு, அதிலுள்ள இந்த மூன்று வகையான கோலியாத்துகளையும் அடித்து வீழ்த்தினாலொழிய, மிஷன் '24 கைகூடுவது அரிது.

ஆகவே பயந்தாங்கொள்ளியும், திடனற்றவனுமாயிருக்கிற விசுவாசிகள், தேசத்துக்காக முன்செல்லும் மீதியான ஜெபவீரர்களான தங்கள் சகோதரரின் இருதயத்தைக் கரைந்துபோகப் பண்ணிவிடுவார்களாதலால், மோசே முன்சொன்னபடி, இப்படி ஆட்களெல்லாம் "தங்கள் வீட்டுக்குத் திரும்பிப்போகக்கடவர்கள் என்று நைஸாகச் சொல்லி அவர்களை ஸைலன்ட்டாக வீட்டுக்கு அனுப்பிவிடுவது நல்லது.(உபா 20:8)

இப்படிப்பட்ட சிந்தைச் சிறையில் சிக்கியிருக்கும் மிகப்பெரிய பட்டாளமொன்று இங்கே இருந்தாலும், உள்ளபடியே யதார்த்தத்திலும் தேசத்திலும் சபையிலும் கண்கூடாகக் காணப்படும் காரியங்கள் ஒரு வகையில் இவைகளைப் போல உண்மையாகவே காணப்பட்டாலும், இப்படிப்பட்ட வலுவான எண்ணங்களைத் தள்ளிவிட்டு, வேத வசனங்கள் திட்டமாய்ச் சொல்லுகிறதையே தங்களுக்கென்று எடுத்துக்கொண்டு, தங்கள் உள்ளறைகளிலே கண்ணீரோடு இரவும் பகலும் ஜெபத்தில் கதறும் மீதியான கூட்டமான அற்ப சொற்பங்களின் முழங்கால்களே இந்த இந்திய தேசத்தின் மேல் வரும் கோபாக்கினையைத் தடுத்து நிறுத்தி சபையைத் தேவ பாதுகாவலுக்குள் காத்து வைத்திருப்பவைகளாம்!

இவர்களைக் கொண்டுதான் தேசம் சந்திக்கப்படக் காத்திருக்கிறது. எனவே எழுந்து கட்டுவோம் வாருங்கள்! எசேக்கியாவின் தேவனும் நெகேமியாவின் தேவனுமான பரலோகத்தின் தேவனானவர் நமக்கும் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார். அது அப்படியே நடக்கும் ! ஆமென்!

CHAPTER 04

ஒரு ஜெபவீரனின் ஆவி ஆத்துமா சரீரத்துக்கு விரோதமான சத்துருவின் அக்கினி அஸ்திரங்கள்

(எசேக்கியா சந்தித்த சத்துருவின் சவால்கள் மூன்று)

1. மலம் தின்று நீர் குடிக்கச் சொன்ன ரப்சாக்கே !

2. நீ மரித்துப் போவாய் !

3. என்னைப் பார்! என் அழகைப் பார் !

ஒரு னி மனிதனோ, ஒரு சிறு கூட்டமோ, ஒரு சபையோ தேவனுக்காகவும் தேசத்துக்காகவும் வைராக்கியம் கொண்டு தங்கள் முழு பெலத்தோடும் தேவனுக்காகக் கிரியை செய்து ஒரு ஜனக்கூட்டத்தையோ, சமுதாயத்தையோ, ஊரையோ தேவனிடம் திருப்பும் முயற்சியில் ஈடுபடுவதும், ஆவிக்குரிய யுத்தம்பண்ணி அதிலே வெற்றி காண்பதும் அவ்வளவு எளிதான ஒன்றல்ல.

ஒரு குடும்பத்தைக் கர்த்தருக்குள் கொண்டுவருவது தேன்கூட்டைக் கலைப்பதற்கும், ஊரின் ஒரு பகுதியைத் தேவனிடம் திருப்புவது பாம்புப் புற்றுக்குள் கைவிடுவதற்கும், ஒரு ஊரையே தேவனை நோக்கித் திசைதிருப்புவது சிங்கக் குகைக்குள் இறங்குவதற்கும், ஒரு விக்கிரக ஆராதனை தேசத்தையே தேவன் வசமாக்கும் முயற்சியில் இறங்குவது, தலைவனின் தாகம் தீர்க்க எதிரியின் பாளயத்திற்குள் துணிந்து புகுந்து போய், தன் உயிரோடு தானே விளையாடுவதற்கும் சமம்.

- **430 வருடம், தான் அடிமையாக்கி வைத்திருந்த**

இஸ்ரவேல் ஜனத்தை பார்வோன் அவ்வளவு எளிதில் தன் கைவிட்டுப்போக விட்டுவிடுவானோ?

"தொடருவேன், பிடிப்பேன்,கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் பட்டயத்தை உருவுவேன்.. என் கை அவர்களைச் சங்கரிக்கும்..." (யாத் 15:9) என்று சொல்லி அவர்களைப் பின் தொடர்ந்த அதே பகைவன், இன்றும் ஜெபவீரர்களைத் தன் மிகுதியான சேனையோடும் படையோடும் பின்தொடராமல் விடுவானோ?

- **"மாடு வெளியின் புல்லை மேய்கிறது போல இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவற்றையும் மேய்ந்து போடும்" என்று இஸ்ரவேலின் ஜனக்கூட்டத்தைக் கண்டு பயந்த மோவாபின் ராஜா பாலாக், அவர்களை சபிக்க வீடு நிறைய வெள்ளியை அள்ளித்தந்து பிலேயாமை வரவழைத்த தன் முதல் முயற்சியிலே தோற்றுப்போனாலும், பின்வாசல் வழியாய்த் தன் மோவாபியப் பெண்களை இஸ்ரவேலருக்குள் அனுப்பி அவர்களை விபச்சாரத்திலும் விக்கிரக ஆராதனையிலும் விழவைத்து, அவர்கள் மேல் தேவகோபாக்கினை வரப்பண்ணி அவர்களை வாதையினால் அழியச் செய்த அதே வித்தையை பிசாசு இன்றும் கையாளவில்லையோ?**

- **ஏலா பள்ளத்தாக்கின் போர்க்களத்திலே கோலியாத்தை ஒரு கல்லாலே வெற்றி கண்ட தாவீதை உப்பரிகையிலிருந்து தலைகுப்புறத் தள்ளிவிட அவன், அவனுக்கு நாள் குறிக்கவில்லையோ?**

- **ஆவிக்குரிய மகாபெலன் கொண்ட சிம்சோன்களைக் கட்டிச் சிறுமையாக்கி, அவர்களது ஆவிக்குரிய கண்களைப் பிடுங்கி, அவர்கள் கதையையே முடிக்க, இதோ**

பெலிஸ்தரின் அதிபதிகள் நவீன தெலீலாக்களின் அறை வீடுகளுக்குள்ளே இன்றும் பதுங்கிப் பதிவிருக்கவில்லையோ?

ஒரு வேளை எசேக்கியா ஒரு வருடத்துக்குள்ளாகவே தேசத்தைத் தேவனிடம் திருப்பி விக்கிரகத் தோப்புகளையும், மேடைகளையும் ஒன்றுமில்லாமல் போகப்பண்ணியிருக்கலாம். ஆனால் அதின் மூலம் அந்த விக்கிரக ஆவிகளின் உலகத்திலே, தளத்திலே (Spirit realm) ஏற்பட்ட அடியும், சலசலப்பும், தாக்கமும் கொஞ்சநஞ்சமல்ல. இதோ அவைகள் அவன் கதையை முடிக்க நாள் குறிக்கத் தொடங்கிவிட்டன. முதல் அட்டாக் அவனது ஆவியில்...இரண்டாவது அவனது சரீரத்தில்.. மூன்றாவது அவனது ஆத்துமாவில் !

"இந்தக் காரியங்கள் நடந்தேறி வருகையில்" மூன்று மிகப்பெரிய தாக்குதல்களைத் தனது ஆவி, ஆத்துமா, சரீரத்துக்கு விரோதமாய்ச் சந்தித்தான் எசேக்கியா.

எப்பேர்ப்பட்ட மிகப்பெரிய தேவமனிதனானாலும், ஜெபவீரனானாலும், ஆத்தும ஆதாய ஜாம்பவானானாலும், சிறையாக்குபவன் கையிலிருந்து சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக்கொண்டுபோகும் பணியில் தப்புவிக்கப்படும் ஆத்துமாக்களின் கொள்ளைக்கு ஏற்ப பிசாசு அந்த ஊழியனுக்கு நாள் குறித்து, பதிவிருந்துகொண்டே தான் இருப்பான்.

யோவான் ஸ்நானகனின் தலையை வாங்க ஏரோதியாளுக்கு "சமயம் வாய்க்கும் வரை" (மாற் 6:21) **அவள் அவனது தலைக்குக் குறி வைத்துக்கொண்டேதான் இருந்தாள். போத்தியார் வீட்டில் யோசேப்பு ஓரளவு செட்டில்**

ஆகி" சில நாட்களுக்குள்ளாகவே" அவனது எஜமானின் மனைவி அவன் மேல் கண்போட்டுவிட்டாள் (ஆதி 39.7).

தேவ மனிதர்களின் ஒவ்வொரு அசைவையும் பிசாசு கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டேதான் இருக்கிறான் - அவர்கள் மரித்து சவப்பெட்டியில் வைக்கப்பட்டு, அதின் மேல் கடைசி ஆணி இறுக்கப்படும் வரை!

1. சனகெரிப் என்னும் அசீரியப் பேய் :

- **"இந்தக் காரியங்கள் நடந்தேறி வருகையில்.."** அசீரிய அரசன் சனகெரிப் தன் படையோடு வந்து எருசலேமை முற்றிகை போட்டான்.

- அவனது சேனாதிபதி ரப்சாக்கேயின் வார்த்தைகளைச் சற்று உற்றுக்கேளுங்கள் ! அவன் எசேக்கியாவைப் பார்த்துச் சொல்லுகிறான்.."நான் உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொடுப்பேன், நீ அவைகள் மேல் ஏறத்தக்கவர்களை சம்பாதிக்கக் கூடுமானால் அசீரிய ராஜாவாகிய என் ஆண்டவனோடே சபதங்கூறு. கூறாதே போனால், நீ என் ஆண்டவனுடைய ஊழியக்காரரில் ஒரே ஒரு சிறிய தலைவனுடைய முகத்தை எப்படித் திருப்புவாய் ?

யுத்தத்துக்கு மந்திராலோசனையும் வல்லமையும் உண்டென்று சொல்லுகிறாயே, அது உன் வாய்ப்பேச்சேயன்றி வேறல்ல... உன்னோடே கூடத் தங்கள் மலத்தைத் தின்று தங்கள் நீரைக் குடிக்கும் உன் ஜனத்தோடு நான் பேசுகிறேன்.." என்று ஆணவமும் அகங்காரமுமாய்க் கொக்கரித்தான் ரப்சாக்கே! (ஏசா 36:4 - 20)

தன் ராஜ்யத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதம், முதலாம்

நாளில் தொடங்கிய, தேசத்தை தேவன் பக்கம் திருப்பும் வேலையில் வெற்றி கண்ட எசேக்கியா எதிர்கொண்ட முதல் தாக்குதல் இது!

"இந்தக் காரியங்கள் நடந்தேறி வருகையில் ...." என்றே சனகெரிப்பின் சரித்திரம் துவங்குகிறது. (2 நாளா 32:1)

"எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலை வளர்ந்தேறுகிறது என்று சன்பல்லாத்தும் தொபியாவும் அரபியரும் அம்மோனியரும் அஸ்தோத்தியரும் கேட்டபோது..." என்றே அவர்கள் கதையும் விரிகிறது.

ஆக, ஜெபமும் ஐக்கியமும் Prayer Network ம் தேசத்தில் வளர்ந்தேறும்போதும், விரிவடையும்போதும் இன்றைய நவீன சனகெரிப் தன் பெருத்த படையுடன் வருவான்..தன் வார்த்தைகளின் மிகுதியால் மிரட்டுவான்.. நமது ஜனங்களுக்கு மத்தியிலும் அந்நிய ஜனத்துக்கு மத்தியிலும் நம்மை ஈனப்படுத்துவான்!

" நீ என் தலைவனாகிய ஆண்டவனோடே சபதங்கூறு.. அவனுடைய படைத்தலைவர்களில் மிகச்சிறிய ஒருவனைக் கூட வெல்ல உன்னால் ஆகுமோ?" என்று சவால்விடுகிறான் ரப்சாக்கே. அதாவது, என் ராஜாவின் சரித்திரத்தைக் கவனித்துப் பார்! அவன் கால்வைக்காத இடமும், வெல்லாத ஜாதி ஜனமும் இல்லாதிருக்க, எசேக்கியா என்ற தனியொரு மனிதனாகிய நீ என் ராஜாவுக்கு எம்மாத்திரம்?"

சாத்தானின் இதே கொக்கரிப்பு தான் இன்றும் கேட்கப்படுகிறது.

- **" இந்த தேசம் என் தேசம்! இந்த மண் என் சொந்த மண்!"**

● காலாகாலமாய் நானே இதை ஆண்டு வருகிறேன்..

● இதின் பழமைக் கலாச்சாரமென்றும், பாரம்பரியமென்றும் உன் தேச ஜனம் மார்தட்டிக்கொள்ளும் அத்தனை பாரம்பரியக் கட்டுகளிலும் தலைமுறை தலைமுறையாய், நூற்றாண்டு நூற்றாண்டுகளாய் நானல்லவோ அவர்களைக் கட்டி சிறைவைத்திருக்கிறேன்? காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வானளாவ நிமிர்ந்து நிற்கும் என் விக்கிரகக் கோயில்களையும், கோபுரக் கலசங்களையும் நிமிர்ந்து பார் !

● இத்தேசத்தின் வெளியிலுள்ள நாலாபக்கமிருந்தும் காலாகாலங்களில் பல வெளி தேசத்தினரை இவர்கள் மேல் படையெடுத்து வரச்செய்தது நானே !

● இந்த மண்ணில் வடக்கு முதல் தெற்கு வரை, கிழக்கு முதல் மேற்கு வரை இரத்தஞ்சிந்தப்படாத ஸ்தானமும் சமஸ்தானமும் ஒன்று உண்டோ?

● அந்நிய படையெடுப்புகளையும், ஆங்கிலேய ஆக்கிரமிப்புக்களையும் நானல்லவோ முன்னின்று அனுப்பினேன்?,"

● "இத்தேசத்தின் கிமு கிபி எல்லாம் என் பாக்கெட்டிலே !

● முகலாயர் கையிலிருந்தும் ஆங்கிலேயர் கையிலிருந்தும் விடுதலையான உன்னை என் கையிலிருந்து விடுவிப்பவன் யார்?

● அப்படியிருக்க, தோமா காலம் முதல் இன்று வரை 2000 வருடமாக நீ சாதித்துவிட்டது தான் என்ன?

• **இந்த நாட்டில் என் நெட்வொர்க்குக்கு முன்னால் உன் ஜெபமந்திரமும் ராஜதந்திரமும் பலித்துவிடுமோ?**

ரப்சாக்கேயின் வார்த்தைகளைக் கேட்ட எசேக்கியா தன் ஜனத்தைப் பார்த்து, "நீங்கள் திடன்கொண்டு தைரியமாயிருங்கள்..அசீரிய ராஜாவுக்கும் அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். அவனோடு இருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். அவனோடிருக்கிறது மாம்ச புயம். நமக்குத் துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய கர்த்தர் தாமே!" என்றான். (2 நாளா 32:7,8)

மிஷன் '24 போன்ற ஆவிக்குரிய வேலைகள் தேசத்தில் நடந்தேறி வருகையில் சிதறடிக்கிறவன் நமது முகத்துக்கு முன்பாக நிச்சயமாய் வருவான். ஆகவே அரணைக் காத்துக்கொண்டு, வழியைக் காவல்பண்ணி, அரையைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு நம் ஆவிக்குரிய பெலனை அபிஷேகத்திலும் தேவவார்த்தையிலும் ஸ்திரப்படுத்திக் கொண்டே செல்லுவோம். (நாகூம் 2:1)

தனி ஒருவனாய் சனகெரிப்பின் சேனையை எதிர்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்த எசேக்கியாவுக்கு ஏசாயா என்ற தீர்க்கனை தேவன் பக்கபலமாய்க் கொடுத்தார். தேவ வார்த்தையினால் அவன் இவனை அவ்வப்போது திடப்படுத்திக்கொண்டே இருந்தான். அவனுக்குக் கீழ்ப்பட்டிருந்த அவனது தேச ஜனமும் அவனது சொல்லை அப்படியே கேட்டது.

தேசத்துக்காக வைராக்கியம் கொண்டு திறப்பிலே நிற்கும் மீதியான கூட்டத்தை முகமுகமாய் எதிர்க்கும் சத்துருவின்

சேனைக்கு எதிர்நிற்க எசேக்கியாவின் தேவன் நமக்கு துணை நிற்பார். நூற்றாண்டுகள் பல கண்டு தேசத்தில் அவன் பலமாய்ப் பாதம் பதித்து நின்றாலும், அவனோடிருக்கிறது மாம்ச புயமே! சாத்தானோடு இருக்கும் அந்தகார சேனைகளைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிற பரலோக தூத சேனை மகாபெரியதல்லவா ?ஆகவே நாம் திடன்கொண்டு காரியத்தை நடப்பிப்போம். அவனுக்கும் அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் நாம் பயப்படவும் கலங்கவும் வேண்டிய அவசியமேயில்லை.

முதலாவது சனகெரிப் தன் படைத்தளபதி ரப்சாக்கேயை அனுப்பினான். அடுத்தது தன் மிரட்டல் கடிதத்தை அனுப்பினான். கடைசியாகத் தானே நேரடியாக யுத்தகளத்தில் வந்து இறங்கினான்!

இன்றும் சனகெரிப்பின் ஆவிகள் படைபடையாய், கூட்டங்கூட்டமாய் தனிமனித ஊழியனுக்கும், ஆவிக்குரிய குடும்பங்களுக்கும், சபைகளுக்கும் விரோதமாய் எழும்பி வரவில்லையோ? வெவ்வேறு ரூபங்களில் அவர்களை பயமுறுத்தி மிரட்டிப் பணியவைக்கும் மிரட்டல் கடிதங்களையும், மொட்டைக் கடுதாசிகளையும் அனுப்பிக் கொண்டேயிருக்கும் முயற்சிகளில் இன்றும் ஈடுபட்டிருக்கவில்லையோ? அவசியப்பட்டால் அவனே இறங்கி வரும் சம்பவங்களும் இங்கே அரங்கேறுவதில்லையோ?

இது எசேக்கியாவின் ஆவிக்கு எதிராக எழும்பி வந்த சத்துருவின் சவால். இது அவனது ஆவியைப் பயமுறுத்திக் கலங்கடிக்க சத்துருவால் எய்யப்பட்ட முதல் அக்கினியாஸ்திரம். இப்படிப்பட்ட காரியங்கள் இன்றும் ஜெபவீரர்களுக்கு விரோதமாய் சம்பவிக்க நேரிடும்போது,

அன்று எசேக்கியாவிடமிருந்த அதே மிகப்பெரிய ஆயுதமாகிய ஜெபம் என்னும் தண்டாயுதமும் அஸ்திராயுதமும் இன்றும் நம்மிடம் உண்டே!

அவனைப் போலவே தேவ சமூகத்துக்குச் செல்லுவோம். பயமுறுத்தல்களை தேவனுக்கு முன்பாகத் தெரியப்படுத்துவோம். உபவாசங்களை நியமிப்போம். விசேஷித்த ஆசரிப்பைக் கூறுவோம். ஜனத்தைக் கூட்டுவோம். சபையைப் பரிசுத்தப்படுத்தி முதியோரையும் பிள்ளைகளையும் கூட்டுவோம்..ஆசாரியர்களான ஊழியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது தேவ சமூகத்தில் இராத்தங்குவார்களாக !
(யோவேல் 2:15 - 17)

பின்னாட்களில் ஆதிசபை இதைப் போன்ற பயமுறுத்தல்களைச் சந்தித்தபோது ஜெபித்த ஜெபத்தால் அவர்கள் கூடியிருந்த இடமே அசைந்துவிட்டதை இன்னும் ஒரு முறை ஞாபகப்படுத்திக்கொள்வோம்!
(அப் 4:24 - 31)

சனகெரிப்பின் பாளயத்தில் ஒரே ஒரு தூதனையனுப்பி ஒரே இராத்திரியிலே இலட்சத்து எண்பத்தையாயிரம் பேரைச் சடலமாக்கிப் போட்டு, அந்தச் சனகெரிப்பின் மூக்கிலும் வாயிலும் துறடுபோட்டு அவன் வந்த வழியே அவன் தேசத்துக்கு அவனை இழுத்துச் சென்று, அவனது பிள்ளைகளின் கையாலேயே அவனைப் பட்டயத்தால் கொன்று சரித்த சேனைகளின் கர்த்தர் இன்றும், நம் மத்தியில் உயிரோடே இருக்கவே இருக்கிறாரே! ஆம். எசேக்கியாவின் தேவன் நம்முடைய தேவனல்லவா?

2. "நீ மரித்துப் போவாய் !"

(எசேக்கியா சந்தித்த புற்றுநோய் என்னும் இரண்டாவது சவால்)

இது அவனது **சரீரத்துக்கு** விரோதமான அடுத்த அஸ்திரம் !

"அந்நாட்களிலே... எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்குச் சமீபமாயிருந்தான். "உம் வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர்.." என்று அவனுக்குச் சொல்லப்பட்டது.

மிஷன் '24 மாதிரியான தேவனுடைய வேலைகள் தேவ சித்தப்படி தேசத்தில் நடந்தேறிவரும் நாட்களிலே நமது ஆவியைக் கலங்கப்பண்ண சத்துருவான சனகெரிப்புக்கள் தங்கள் சேனையோடு வருவார்கள். பலவிதமான எதிர்மறையான சம்பவங்களும் நிகழ்வுகளும் நிறையவே நமக்கு விரோதமாய் நடக்கும். ஆனாலும் அவர்களது முயற்சிகள் தோல்வியடைந்து, நமது ஆவி பெலப்பட்டு, உயிர்பெற்று எழும்பும்போது சத்துருவின் அடுத்த குறி நமது சரீரமாகவே இருக்கும்.

ஜெபவீரர்களின் ஆவியைக் கலங்கப்பண்ணி, அதிலே அவன் தோற்றுப்போகும்போது, அடுத்து அவர்கள் சரீரத்தை பெலவீனப்படுத்தி வியாதியில் விழவைக்கவோ அல்லது சரீர ரீதியான பாவத்தில் விழவைக்கவோ அவர்களது சரீரத்துக்கு விரோதமாகவே அவன் வருவான்.

ஜெபவீரனின் சரீரத்தில் அவன் கை வைக்கும்போது, தன்னிலே தானே எதுவும் செய்யத் திராணியற்ற

நிலைக்குத்தள்ளப்படும் அந்த ஜெபவீரன் சுவர்ப்புறமாய்த் திரும்பி தேவனை நோக்கி, " ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்.." என்று விண்ணப்பம்பண்ணி அழுவதைத் தவிர வேறு வழியின்றி நிற்கிறான். அப்போதும் அவனது விண்ணப்பத்தைக் கேட்டு அவனது கண்ணீரைக் காணும் தேவன், ஏசாயா போன்றவர்களைப் பக்கபலமாக அவனுக்குக் கொடுக்கவே செய்கிறார்.

தன் மரணப்படுக்கையிலிருந்து மீண்டு எழுந்து வருகிறான் எசேக்கியா. ஜெபவீரர்களுக்கும் எழுப்புதல் வீரர்களுக்கும் எதிரான பலத்த அஸ்திரமான சரீர நோயினால் பல வீரர்கள் பாதிக்கப்படும்போது, எசேக்கியாவுக்கு வாக்குத்தத்தம் பண்ணி அவனுக்கு ஒரு அற்புதத்தைக் கட்டளையிட்ட கர்த்தர், விசுவாசமுள்ள ஜெபத்தால் பிணியாளியான ஜெபவீரனை இரட்சித்து மீண்டும் எழுப்பி நிறுத்தி அவனது படுக்கையை மாற்றிப்போட்டு, தமது வசனத்தை அனுப்பி அவனைக் குணமாக்குகிறார்.

3. "என்னைப் பார்! என் அழகைப் பார்!"

(எசேக்கியா சந்தித்த மூன்றாவது சவால்)

முதலாவது எய்யப்பட்டது அவனது ஆவிக்கு எதிராக !

இரண்டாவது தாக்குதல் அவனது சரீரத்துக்கு விரோதமாக !

மூன்றாவதோ அவனது ஆத்துமாவைக் குறி வைத்தது !

“அக்காலத்திலே"* (ஏசா 39:1,2)

“அக்காலத்திலே" பலாதானின் குமாரனாகிய மெரோக்பலாதான் என்னும் பாபிலோனின் ராஜா, எசேக்கியா வியாதிப்பட்டிருந்து ஆரோக்கியமானதைக் கேள்விப்பட்டு, அவனிடத்திற்கு நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்பினான்.."

இங்கே வேதம் சொல்கிறது...
“ எசேக்கியா மனமேட்டிமையாகி..." (2 நாளா 32: 25, 26)
அவர்களைக் கண்டு சந்தோஷப்பட்டு தன் பொக்கிஷசாலையையும், வெள்ளியையும் பொன்னையும், கந்தவர்க்கங்களையும், நல்ல பரிமள தைலத்தையும், தன் ஆயுதசாலை அனைத்தையும் தன் பொக்கிஷசாலைகளில் உள்ளது எல்லாவற்றையும் அவர்களுக்குக் காண்பித்தான். எசேக்கியா தன் அரண்மனையிலும், தன் ராஜ்யத்தில் எங்கும் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றுமில்லை..”
(ஏசா 39:1, 2)

ஜெபவீரர்களுக்கு விரோதமாக அவர்களது ஆவியைக் கலங்கடித்து மனமடியப்பண்ண அவர்களது ஆவிக்கு விரோதமாய் வரும் எதிரியின் முதல் ஆயுதம் தோற்றுப்போகவே, அடுத்து அவர்கள் சரீரத்துக்கு விரோதமாய் அவன் வந்து அதை நோயினால் வாதிக்கவும், பாவ நோயினாலும் இச்சைகளினாலும் சாகடிக்கவும் தனது அடுத்த அஸ்திரத்தை அவர்களது சரீரத்துக்கு விரோதமாய்த் எய்கிறான்.

எசேக்கியாவின் விஷயத்திலே இந்த இரண்டும் வாய்க்காமல் போகவே, அவனது ஆத்துமாவுக்கு விரோதமான தனது கடைசி ஆயுதத்தை எடுக்கிறான் பிசாசு. எசேக்கியா பிசகிப்போனது இங்கே தான்!

தேவன் ஒரு மனிதனை வல்லமையாய் உபயோகிக்கும்போது அவனுடைய மனதின் ஏதோ ஒரு மூலையில் தன் ஊழியத்தின் வெற்றியைக் குறித்த ஒருவிதப் பெருமிதமும் இதமியமும் எழுந்து, அது அவனைக் கொஞ்சங்கொஞ்சமாய் மேட்டிமையான எண்ணங்களுக்குள் இட்டுச்சென்று, கடைசியாக ஆவிக்குரிய பெருமையிலும் மனமேட்டிமையிலும் அவனை வஞ்சித்து வீழ்த்துகிறது.

அவன் தன்னுடைய சொந்த ஆவிக்குரிய வரங்களின் பொக்கிஷசாலையைத் தானே மனதாரக்கண்டு பூரிக்கிறான். பொன்னைப் போன்ற தனது பரிசுத்த வாழ்க்கையையும், களிம்பு நீக்கப்பட்ட வெள்ளியைப் போன்ற பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கையையும், மற்றவர்கள் முன் தன்னை நறுமணம் வீசச்செய்யும் கந்தவர்க்கமான பேர் புகழையும், நல்ல பரிமளதைலமான அபிஷேகத்தையும், தன் ஜெப அறையான ஆயுதசாலையிலுள்ள சகல ஆவிக்குரிய போராயுதவர்க்கங்களையும், கர்த்தர் தன்னைப் பயன்படுத்தி வரும் சகல சாட்சியின் செய்திகளையும் அறிந்தோ அறியாமலோ தனக்குத்தானே மனதின் மறைவில் கண்டு குதூகலித்துக்கொள்வது மட்டுமல்லாமல், "என்னைப்பார், என் அழகைப்பார்!" என்று தன்னைக் காண வருபவர்களுக்கெல்லாம் அவற்றை மனந்திறந்து வெளிப்படுத்தியும் காட்டுகிறான் - "மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறது போல..." (நீதி 29: 11).

அதுவே அவனுக்கு விரோதமாக வன்கண்களின் ஆவிகளுக்கும், பொறாமையின் ஆவிகளுக்கும், வயிற்றெரிச்சலும் ஏக்கப் பெருமூச்சுகளுமான ஆவிகளுக்கும், ஆச்சரியப் பிரமிப்பின் ஆவிகளுக்கும் இடங்கொடுத்து, அவைகள் உடனடியாகவோ அல்லது

நாளொன்று வரும்போதோ, அவனுக்கு விரோதமாய்ப் படையெடுத்து வந்து, பொக்கிஷமாய் அவனுக்கு அருளப்பட்ட அனைத்தையும் ஒன்றுமில்லாமல் வாரிக்கொண்டு போய்விடுகிறது - எசேக்கியாவுக்குப் பின் பாபிலோனியர் படையெடுத்து வந்து யூதாவிலே கண்ட சகலத்தையும் வாரிக்கொண்டு போனது போல!

இவைகளெல்லாம் திருஷ்டாங்களாக எசேக்கியாவுக்குச் சம்பவிக்க, உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கோ இவைகள் எச்சரிப்புண்டாகும்படியாகவே எழுதப்பட்டிருக்கிறது.

உண்மையான ஆவிக்குரிய யுத்தத்தில் மும்முரமாய் நிற்கும் எந்தத் தலைவனும் ஜெபவீரனும் தன் ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் விரோதமான சாத்தானின் கொடூரத் தாக்குதலை எப்போது வேண்டுமானாலும், யார் மூலமாக வேண்டுமானாலும், எந்தத் திசையிலிருந்து வேண்டுமானாலும் வருமென்று கட்டாயம் எதிர்பார்த்தே ஆக வேண்டும். அந்த எதிர்பார்ப்போடு எச்சரிப்பையும் சேர்த்துக்கொண்டு அவன் மிக மிக மிகக் கவனமாய் நின்றே ஆக வேண்டும்..!

யோபுவுக்கு நேர்ந்ததும் அதுவே! அவனது சகல சம்பத்துகளையும் பத்து பிள்ளைகளையும் ஒன்றுமில்லாமல் போகச்செய்து அவனது ஆவிக்கு விரோதமாய்ப் போர்தொடுத்த சாத்தானின் இரண்டாவது அஸ்திரம் அவனது சரீரத்துக்கு விரோதமாய் இருந்ததே! அதிலும் தோற்ற அவன், தனது மூன்றாவது ஆயுதமாக யோபுவின் ஆத்துமாவையும் இருதயத்தையும் சுக்குநூறாக்க அவனது மனைவியையும் நண்பர்களையுமே கணைகளாய் உபயோகிக்கிறான். ஆனால் இம்மூன்றிலும் கொடூரமாய்த்

தாக்கப்பட்டு சோதிக்கப்பட்ட யோபு பசும்பொன்னாகவே வெளிவந்தானே!

ஒரு ஜெபவீரன் எப்படிப்பட்ட தாக்குதல்களுக்கு உள்ளானாலும், இவை எல்லாவற்றிலும் அவனில் அன்புகூருகிற அவராலே அவன் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவனாகவே தன் தேவனுக்கு முன்பாக நிற்பான்!

"என் சத்துருவே, எனக்கு விரோதமாய் சந்தோஷப்படாதே! நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்..நான் இருளிலே உட்கார்ந்தால், என் தேவன் எனக்கு வெளிச்சமாயிருப்பார்.." (மீகா 7.8).

அல்லேலூயா !!!

CHAPTER 05

சிதைந்து கிடக்கும் இந்திய மண்ணின் சிதிலங்களை எழுந்து கட்டுவோம் வாருங்கள்

PART- 1

ஆட்டு வாசல்
[Sheep Gate]

இந்திய மண்ணின் சுட்டெரிக்கப்பட்ட வாசல்களுக்கு உயிர்கொடுப்போம் வாருங்கள்!

(தேசத்தின் நாலாபக்க வாசல்களையும் கட்டியெழுப்ப வேதத்தின் மாதிரி)

நிஜவாழ்க்கைக்கும் யதார்த்தங்களின் நடைமுறைக்கும் எக்காலத்துக்கும் நமக்குக் கையேடாகத் திகழ்வது வேத புத்தகம் மாத்திரமே!

பாழான எருசலேமின் அலங்கத்தையும் சுட்டெரிக்கப்பட்ட அதின் வாசல்களையும் பழுதுபார்த்து, வெறும் ஐம்பத்திரண்டே நாட்களில் ஒரு மனிதனின் தலைமையில் ஒன்றுபட்ட மீதியான பாரப்பட்ட ஜனம் கட்டி முடித்தது சாத்தியமானால், இன்றைக்கும் இதோ சுட்டெரிக்கப்பட்டுக்கிடக்கும் இந்த இந்திய மண்ணின் நாலாபக்க வாசல்களுக்கும் அதின் மண்மேடுகளான கற்களுக்கும் உயிர்கொடுக்க அதே நெகேமியா மிஷனே இன்றைக்கும் நமக்கு வழிகாட்டி நிற்கிறது.

எருசலேமுக்கு பன்னிரண்டு வாசல்கள் உண்டானால் நமது இந்திய தேசத்திற்கும் அதே வாசல்களும் அதன் அர்த்தங்களும் பொருந்துமே! அப்படியே நம் தேசத்தில் இடிந்து கிடக்கும் இந்தப் பன்னிரண்டு வகையான வாசல்களை எழுந்து கட்டுவோம் வாருங்கள்!

ஆட்டுவாசல்

அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து ஆட்டுவாசலைக் கட்டினார்கள்; அதைக் கட்டி, அவர்கள் பிரதிஷ்டைபண்ணி, அதின் கதவுகளை வைத்து, மேயா என்கிற கொம்மை முதல் அனானெயேலின் கொம்மைமட்டும் கட்டிப் பிரதிஷ்டைபண்ணினார்கள். (நெகே 3:1)

"நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்..நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான்" என்றார் இயேசு. (யோ 10:7, 9)

எருசலேமின் இந்த ஆட்டுவாசல் ஆடுகளை மேய்ச்சல்களுக்கு வெளியே இட்டுச்செல்வதற்கும், மாலையில் உள்ளே கொண்டுவருவதற்குமாக உபயோகப்படுத்தப்பட்டது.

ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசிக்காமல் வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான் என்ற வார்த்தையின்படி இந்திய தேச இரட்சிப்புக்கும், தேசத்தின் ஜனமாகிய ஆடுகளுக்கும் இரட்சிப்பின் வாசலாயிருப்பவர் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமல்லவோ? அவர் வழியான இரட்சிப்பைக் கண்டடையாமல், முக்திக்கு வழியென்று எதையெதையோ கண்டுபிடித்து, இயேசு என்னும் வாசல் வழியாய்ப் பரலோக மந்தைக்குள் சேராமல், வெவ்வேறு வழியில் ஏறிவரும் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிற சத்துருவுக்கு பலியாகிப்போன ஆடுகள் தான் எத்தனை எத்தனை

கோடிகள் ! இந்தத் தேசத்தின் ஆடுகளைத் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வந்த திருடர்கள்தான் எத்தனை எத்தனை! ஆடுகளைப் பீறி அவைகளைச் சிதறடிக்கும் ஓநாய்கள் தான் இம்மண்ணில் எத்தனை எத்தனை!

தேசத்திலே ஆட்டு வாசலாம் இயேசுவின் மெய்யான இரட்சிப்பின் வாசல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடப்பதாலேயே நாலாபக்க வழியிலும் சத்துருவின் உட்புகுதலும் குடியோடிப் போகுதலும் இங்கே இல்லையோ? சிதறி அலையும் காணாமல் போன ஆடுகளைத் தேடி இயேசு என்னும் இரட்சிப்பின் வாசலாம் ஆட்டுவாசல் வழியே உள்ளே கொண்டுவர நமது தேசத்தின் ஆட்டுவாசலைப் பழுதுபார்த்துக் கட்டுவோம் வாருங்கள்!

முதல் தேவை தேசத்து ஜனங்களுக்கு இரட்சிப்பு ! அது இயேசுவினால் மாத்திரமே! இங்கே உள்நுழைந்து ஆடுகளைப் பட்சிக்கும், சிதறப் பண்ணும் கொள்ளைக்காரரும் திருடரும் கொலைகாரருமான தேசத்துப் பூசாரிகளையும், மந்திரவாதிகளையும், குறிசொல்லுகிறவர்களையும், மதவாதிகளையும், நவீன பாபாக்களையும், சடங்காச்சாரம் செய்பவர்களையும் அவர்களைப் பின்னிருந்து இயக்கும் ஆவிகளையும் ஜெபத்திலே கட்டி, ஆட்டுவாசலாம் இரட்சிப்பின் வாசலைப் பழுதுபார்த்துக்கட்டி உயர்ந்து நிற்கச் செய்வோம்!

ஜெபம்:

ஆடுகளுக்காக :
- காணாமல் போன ஆடுகள்
- சிதறுண்டு அலையும் ஆடுகள்
- பீறிப்போடப்பட்ட ஆடுகள்
- கொலையுண்ணப்போகிற ஆடுகள்
- மேய்ப்பனில்லாத ஆடுகள்
- அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படும் ஆடுகள்
- குழியிலே விழுந்த ஆடுகள்

வாசல்களுக்காக :

கிரியைகளினாலே அல்ல, கிருபையினாலேயே இரட்சிப்பு என்கிறது பரிசுத்த வேதாகமம். ஆனால் கிரியைகளினாலேயே முக்தி என்கிறது இந்திய மதம். இந்தக் கிரியைகளினாலே மாத்திரமே முக்தியையும் சமாதானத்தையும் அடையும்படி இந்திய ஜனம் ஈடுபட்டிருக்கும் கணக்கற்ற காரியங்கள்தான் எத்தனை எத்தனை!

திறந்து கிடக்கும் இப்படிப்பட்ட வாசல்கள் மூலம் உள் நுழைந்து ஆடுகளைக் கொள்ளை கொண்டுபோகும் பிசாசின் வஞ்சகங்களைக் கட்டி, இப்படிப்பட்ட வாசல்களை மூடிப்போட்டு, மெய்யான ஆட்டுவாசலைப் பழுதுபார்த்து மறுபடி திறக்கும்படியாக ஜெபிப்போம்.

CHAPTER 05

மீன் வாசல்
Fish Gate

PART- 2

மீன்வாசலை அசெனாவின் குமாரர் கட்டினார்கள்; அதற்கு உத்தரம்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டார்கள். (நெகே 3:3)

எருசலேமின் அலங்கத்தில் நெகேமியா இரண்டாவதாகப் பழுதுபார்த்துக் கட்டியது மீன்வாசல். கலிலேயா கடலிலிருந்தும் யோர்தான் நதியிலிருந்தும் பிடித்து வந்த மீன்களை நகரத்துக்குள் கொண்டுவர இந்த வாசல் தான் பயன்படுத்தப்பட்டது.

“என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார் இயேசு..

வேதத்தின்படி மீன்பிடித்தல் என்பது சுவிசேஷம் அறிவித்து ஆத்தும ஆதாயம் செய்வதைக் குறிப்பது என்பது நாம் அறிந்ததே! இன்று நம் தேசத்தில் அரசாங்க ஆணையின்படி இல்லாவிட்டாலும், ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலுமே சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் இல்லை என்பதும், முன்போல சுதந்திரமாக சுவிசேஷம் அறிவிக்க இயலாமல் இந்த சுவிசேஷ மீன்வாசல் சுட்டெரிக்கப்பட்டதாகக் கிடப்பதையும் காண்கிறோம்.

"இதோ நான் உனக்கு முன்பாகத் திறந்த வாசலை வைத்திருக்கிறேன். ஒருவனும் அதைப் பூட்டமுடியாது" என்பதே கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தம்.

தேசத்தின் ஆத்தும ஆதாய சுவிசேஷ மீன்வாசலை ஜெபத்தால் எழுந்து கட்டுவோம் வாருங்கள்!

ஜெபம் :

- மதமாற்றத் தடைச்சட்டம் அமலாக்கப்பட்டு ஏற்கனவே சுவிசேஷ வாசல்கள் மூடப்பட்டுவிட்ட மாநிலங்களின் வாசல்களைத் தேவன் திறக்கும்படியாக ஜெபிப்போம்..

- வாசல்கள் மூடப்பட்டுக் கொண்டிருக்கிற மாநிலங்களுக்காக ஜெபிப்போம்.

- சுவிசேஷ எதிர்ப்பாளர்களுக்காக ஜெபிப்போம்.

- சுவிசேஷ எதிர்ப்பு அலை காணப்பட்டாலும், சுவிசேஷம் அறிவிக்கும் முறைகளில் சபைகள் மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டு, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் சுவிசேஷப்பணியை வெளிப்படையாய்ச் செய்ய முடியாவிட்டாலும், வேறு வகைகளில் செய்துகொண்டே இருக்க தேவன் சபைகளுக்குத் தைரியம் அளிக்கும்படி ஜெபிப்போம்.

- ஆத்தும ஆதாயமே சபைகளின் உயிர்மூச்சாய் இருக்கும்படி ஜெபிப்போம்.

- சுவிசேஷ வாசல்கள் பழுதுபட்ட நிலையிலும்கூட, ஆட்சியில் உள்ளவர்களுக்கும் அதிகாரமட்டத்தில் உள்ளவர்களுக்கும், தேசத்தின் எல்லாத்துறை அதிகாரிகளுக்கும் சுவிசேஷம் சென்றடையும்படியாகவும், கர்த்தர் தமது அடையாள அற்புதங்களினால் வசனத்தை உறுதிப்படுத்தும்படியாய் ஜெபிப்போம்.

- தேசம் அடைக்கப்பட்டிருந்தபோதிலும் "கர்த்தரே தேவன்" என்று ஆட்சியாளர்களுக்கும்

அடக்குமுறையாளர்களுக்கும் நிரூபித்து நின்ற எலியாக்களை தேவன் இன்று எழுப்பும்படியாய் ஜெபிப்போம்.

- சுவிசேஷப்பணியின் போர்முனையில் மலைகளிலும் காடுகளிலும் கிராமங்களிலும், ஆபத்தான இடங்களிலும் ஊழியம் செய்யும் முன்னணி மிஷினரிகளை நினைத்துக்கொள்வோம்.

- இந்தியாவின் சுட்டெரிக்கப்பட்டுக்கிடக்கும் சுவிசேஷ மீன்வாசலை ஜெபத்தில் எழுந்து பழுதுபார்த்துக் கட்டுவோம் வாருங்கள்!

CHAPTER 05

பழைய வாசல்
Old Gate

PART- 3

“பழைய வாசலைப் பசெயாசின் குமாரனாகிய யோய்தாவும், பேசோதியாவின் குமாரனாகிய மெசுல்லாமும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்; அவர்கள் அதற்கு உத்தரம்பாவி, அதற்குக் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டார்கள்." (நெகே 3:6)

எருசலேமின் பழைய வாசல், பழங்கால எருசலேமின் முக்கியமானதொரு நுழைவாயிலாகக் கருதப்பட்டு வந்ததால் எருசலேமின் வடமேற்குப் பகுதியிலிருந்த இது, பழையவாசல் என்று அழைக்கப்பட்டது. சிதிலமடைந்த இதையே மூன்றாவது வாசலாகப் பழுதுபார்த்துக் கட்டினார் நெகேமியா.

"இந்து தேசம்" என்ற பெயர் வேதத்தில் இருப்பதினால் நமது இந்தியாவின் பழமையை நாம் அறியலாம். உலக வரலாற்றிலிருந்தும் நமது தேசத்தின் பல நூற்றாண்டுகாலப் பழமையையும் பாரம்பரியங்களையும் நாம் அறிகிறோம்.

என்ன தான் விக்கிரக ஆராதனை நிறைந்த தேசமாயிருந்தாலும், இந்திய மண்ணுக்கென்று தொன்றுதொட்டு வழங்கிவரும் அதின் கலாச்சாரங்களும், சன்மார்க்க ஒழுக்க நெறிகளும், மனிதாபிமானங்களும், பரஸ்பர அன்பும், சகிப்புத்தன்மையும், ஒழுங்குகளும் இங்கே நிறையவே உண்டு. நற்பண்புகளும், குடும்பக் கட்டமைப்பும், மரியாதை மதிப்புகளும், நற்குணசீலங்களும், கற்பும் வீரமும் நிறையவே நிறைந்த தேசமிது.

ஆனால் இந்த ஒழுக்க நற்சீலங்கள் என்ற "பழைய வாசல்" இன்று மேற்கத்தியப் படையெடுப்பால் பாழாகியிருப்பது உண்மை. தாராளமயமாக்கல் என்ற கொள்கை உட்புகுந்த நாள் முதல் இந்தப் "பழைய வாசல்" நாகரீக மோகம் என்ற நெருப்பினால் இங்கே சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கவில்லையோ?

- ஆங்கில மோகம் தாய்மொழியைத் தள்ளிவிட்டுத் தரைமட்டமாக்கவில்லையோ?

- தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் தாக்கம், நமது மேலான மதிப்பீடுகளையும், குடும்ப உறவுகளையும் ஒன்றுமில்லாமல் போகச் செய்துவிடவில்லையோ?

- பன்னாட்டுக் கம்பெனிகளின் வருகையும், மேற்கத்தியத் தாக்கமும் நமது வாலிபர்களின் நடைஉடை பாவனை, உரையாடல்களை அடியோடு மாற்றி, நவீன கலாச்சாரம் ஒன்றையே இன்றைய இளைஞர்களுக்குள் உருவாக்கி விடவில்லையோ?

- வளர்ந்த நாடுகளில் குடியேறத் துடிக்கும் இன்றைய இந்திய இளைஞர் பட்டாளத்தின் நோக்கம் பணமும் அந்தஸ்தும் தானோ?

- நாடு முழுவதுமே கிராமப்புற எல்லைகள் வரை கூடப் பரவலாகக் காணப்படும் கலாச்சாரப் புரட்சியினால் காணக்கிடக்கும் சுட்டெரிக்கப்பட்ட பழைய வாசல்களைப் பார்க்கிறீர்களே!

- ஒற்றுமை, அன்பு, ஐக்கியம் என்பவைகள் எல்லாம் காற்றோடு கலந்து தீவிரவாதம் ஒன்றே தலைதூக்கி நிற்பதைப் பார்க்கிறீர்களே!

- சினிமா, இசை மற்றும் சமூக வலைதளங்களினால் சின்னாபின்னமாகிக் கிடக்கும் தேசத்தின் பாரம்பரிய பழைய வாசல்களின் பரிதாப நிலையைப் பார்க்கிறீர்களே!

- சபை எவ்வழியோ, தேசம் அவ்வழி என்றார் Rev. லியோனார்ட் ரேவன்ஹில் அவர்கள். சபை என்று தன் பூர்வ பாதைகளை விட்டு விலகியதோ, அன்றே தேசத்தின் நற்குண அஸ்திபாரங்களும் ஆட்டம்காண ஆரம்பித்ததே! சபையிலே நமது பிள்ளைகளின் Dress code ம், நடவடிக்கைகளுமே உலகத்தோடு உலகமாகியிருக்க, தேசத்தின் பழையவாசல்களாம் பாரம்பரியக் குணநலன்களைக் குறைசொல்வது எப்படி?

- முதலாவது, சபை தன் மூல அஸ்திபார உபதேசங்களுக்கும், பூர்வ பாதைகளுக்கும், முற்பிதாக்களின் வாழ்க்கைக்கும், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளுக்கும் திரும்பட்டும்! தேசத்தின் பழைய வாசல்கள் தானாகவே கட்டப்படும்!

ஜெபம்

- இன்றைய வாலிப சமுதாயத்துக்காக ஜெபிப்போம்..

- தகவல் தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்தி, சமூக வலை தளங்களில் சிக்கிச் சீரழியும் இந்தத் தலைமுறைக்காக ஜெபிப்போம்..

- வெளிநாட்டு மோகத்தினால் தாய்மொழியையும், சொந்த மண்ணின் அடையாளத்தையுமே தொலைத்து நிற்கும் இந்தத் தலைமுறைக்காய் ஜெபிப்போம்..

• சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கும் தேசத்தின் பழைய வாசல்களாம் மரியாதை மதிப்பு என்ற மதிப்பீடுகள், பரஸ்பர அன்பு, மனிதாபிமானம், உதவி, சகிப்பு, ஐக்கியம் - இவைகளை ஜெபத்திலே கட்டியெழுப்புவோம்!

• குடும்ப உறவுகள் சீர்குலைந்து சின்னாபின்னமாகி, கணவன் மனைவிக்கு வெளியேயான தவறான உறவுகள், Live-in-partners என்ற திருமணமாகாமலே ஒரே கூரையின் கீழ் கணவன் மனைவியாக ஒன்றாய் பல வருடங்கள் வாழும் கலாச்சாரம், துணைகளையும் நண்ப நண்பிகளையும் நோக்கத்துக்கேற்ப மாற்றிக்கொள்ளும் மேலை நாட்டுச் சரக்குகள், மலிவான விவாகரத்துகள், குடும்பப்பிரிவுகள் என்று ஆகிப்போன சமுதாயச் சீர்குலைவுகளுக்கு மத்தியில் பூர்வீக வாசல்களை பரிசுத்தமான ஜெபத்தால் புதுப்பித்துக் கட்டுவோம்!

• சொந்த தேசத்தின் பரிதாப நிலையைக் குறித்த பாரத்தை தேவன் நமது வாலிபர்களுக்குத் தரும்படியாய் ஜெபிப்போம்..

• இவைகள் யாவும் முதலாவது சபையிலிருந்தே துவங்கும்படியாகவும், சபையின் இந்தத் தலைமுறை தன் அஸ்திபார உபதேசத்துக்கும் பூர்வ பாதைகளுக்கும், பழைய வாசலுக்கும் திரும்பும்படியாய் ஜெபிப்போம்...

• ஆராதனை என்ற பெயரில் தேவ வசனத்துக்கு இன்று ஏற்பட்டிருக்கும் கொடிய பஞ்சம் நீங்கி, நமது சபைகள் மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல கர்த்தருக்காகவும் அவரது வசனத்துக்காகவும், அவரது மகிமைப் பிரசன்னத்துக்காகவுமே தாகத்தோடு கதறி, சபை தன் பழைய வாசல்களை எழுந்து கட்டும்படியாய் ஜெபிப்போம்..

- ஆரம்ப நாட்களின் பெந்தேகொஸ்தே சபைகளில் அடிக்கடியாய்க் கேட்கப்படும் "பிரதிஷ்டை" என்ற வார்த்தையே இன்று காணவும் கேட்கவும் கிடைக்காமல் போன நமது சபைகளில் பிரதிஷ்டை, வேறு பிரிந்த வாழ்க்கை என்ற பழைய வாசல்களைப் பழுதுபார்த்துக் கட்டுவோம்!

- வாழ்க்கையின் நோக்கம், சபையின் நோக்கம் (Purpose of life, Purpose of Church) இரண்டையும் சபை மீண்டும் கண்டுபிடித்து, தன் பழுதுபட்ட பழைய வாசல்களைக் கட்டியெழுப்புவதாக!

- இன்றைய நாட்களில் சபைகளில் மிக அதிகமாகக் காணப்படும் குடும்ப விவாகரத்துகள், ஆத்துமப் பிணைப்புகள், முறையற்ற உறவுகள் - இவைகள் நீங்கி பரிசுத்த உறவுகளாம் பழைய வாசல்களை ஜெபத்தால் திரும்பக் கட்டுவோம் வாருங்கள்!

CHAPTER 05

எப்பிராயீம் வாசல்
Ephraim Gate

PART- 4

"துதிசெய்கிற இரண்டாம் கூட்டத்தார் எதிரேயிருக்கிற வழியாய் நடந்துபோனார்கள், அவர்கள் பிறகாலே நான் போனேன்; ஜனத்தில் பாதிப்பேர் அலங்கத்தின்மேல் சூளைகளின் கொம்மையைக்கடந்து, அகழ் மதில்மட்டும் நெடுகப்போய், எப்பிராயீம் வாசலையும் பழையவாசலையும், மீன் வாசலையும், அனானெயேலின் கொம்மையையும், மேயா என்கிற கொம்மையையும் கடந்து, ஆட்டுவாசல்மட்டும் புறப்பட்டுக் காவல்வீட்டுவாசலிலே நின்றார்கள்."
(நெகே 12:38,39)

(சிறுமையைத் தொடரும் உயர்வு)

"நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்திலே தேவன் என்னைப் பலுகப்பண்ணினார்.." (ஆதி 41:52)

நெகேமியா பழுதுபார்த்துக் கட்டின எருசலேமின் நான்காவது வாசல் இது. எருசலேமிலிருந்து எப்பிராயீமின் எல்லைகளுக்குப் போகும் வழியாகப் பயன்படுத்தப்பட்டதால் இது "எப்பிராயீம் வாசல்" என்று அழைக்கப்பட்டது. யோசேப்பு எப்பிராயீமுக்கு "நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்திலே தேவன் என்னைப் பலுகப்பண்ணினார்" என்று அவனுக்கு இந்தப் பெயரை இட்டிருந்தான்.

"நாம் இருக்கும் சிறுமையைப் பார்க்கிறீர்களே!" (நெகே 2:17) என்று எருசலேமிலுள்ள மீதியானவர்களைப் பார்த்துக் கேட்டார் நெகேமியா.

ஜெபம்

- இந்தத் தேசத்தில் நாமிருக்கும் சிறுமையைப் பார்க்கிறோமே! தேவன் இந்தச் சிறுமையை நீக்கி, நம்மைப் பெருகப்பண்ண வேண்டி, தேசத்தின் எப்பிராயீம் வாசலை ஜெபத்தில் கட்டியெழுப்புவோம்!

- "தேசத்திலே நாம் பலுகும்படி தேவன் நமக்கு இடமுண்டாக்கினார்" என்று சொல்லி ரெகொபோத் என்று பேரிட்டான் ஈசாக்கு (ஆதி 26:22). தேவ மகிமை நம்மைவிட்டு விலகியிருக்கும் "இக்கபோத்" என்ற இன்றைய இழிநிலை நமது சபைகளை விட்டு மாறி, "ரெகோபோத்" என்னும் ஆவிக்குரிய பெருக்கம் சபைகளிலும் தேசத்திலும் உண்டாக ஜெபிப்போம்.

- சபையின் சிறுமையான நிலையையும், தேசத்தின் சிறுமையான நிலையையும், "சிறுபான்மை" என்ற நிலையையும் மாற்றி, தேவன் சபைக்கும் தேசத்துக்கும் பெருக்கம் தந்து ஆசிர்வதிக்கும்படியாய் இந்த எப்பிராயீம் வாசலை ஜெபத்திலே கட்டியெழுப்புவோம்..

- தேசத்திலே பல வகைகளில் அரசியல்வாதிகளாலும், அதிகாரவர்க்கத்தாலும், ஜமீன்தார்களாலும், முதலாளிகளாலும், உயர்ஜாதிகளாலும் அடிமைப்படுத்தப்பட்டு சிறுமைப்படுத்தப்பட்டுள்ள ஜனங்களின் வாழ்க்கையின் வாசல்களை ஜெபத்தால் கட்டியெழுப்புவோம்!

- இந்திய சிறைச்சாலைகளிலே இன்று யோசேப்பைப் போல குற்றமற்று சிறுமையோடு நாட்களைக் கழிப்பவர்களுக்காகவும், குற்றமற்றவர்களின் சிறைச்சாலை

மரணங்களுக்காகவும், நீதிமன்றத்தில் நீதி கிடைக்காமல் வேதனையோடும் கண்ணீரோடும் வாழ்பவர்களுக்காகவும் ஜெபிப்போம்..

- யோசேப்பைப் போல விற்றுப்போடப்படுபவர்களுக்காகவும் (Human Trafikking), பெண்களையும் குழந்தைகளையும் விபச்சாரத்திற்காகவும் பிச்சையெடுக்கும் தொழிலுக்காகவும் விற்றுப்போட்டு அதிலே தள்ளிவிடப்படும் அபலைகளுக்காகவும், அரவாணிகளுக்காகவும் ஜெபிப்போம்..

- சிறுமைப்பட்ட குடும்பங்களிலிருந்து படித்து முன்னேறப் போராடும் மாணவர்களுக்காக ஜெபிப்போம். அரசாங்கத்தின் மக்கள் நலத்திட்டங்கள் சமூகத்தின் இப்படிப்பட்டவர்களைச் சரியாய்ச் சென்றடைய ஜெபிப்போம்...

- யோசேப்பைப் போல PIT - PRISON - PALACE என்ற பாதையையே தேவன் சபைகளையும் விசுவாசிகளையும் முன்னேற்றத்துக்கு நடத்தும் பாதையாய் நியமித்திருப்பதால், இன்றைய சபை இந்த அடிப்படை உண்மையை அறிந்து கொண்டு சிலுவையின் பாதையையே தெரிந்தெடுத்து முன் செல்ல ஜெபிப்போம்..

யோசேப்பின் தேவன் நம்முடைய தேவனாயிருக்கிறாரே!

CHAPTER 05

பள்ளத்தாக்கின் வாசல்
Valley Gate

PART- 5

பள்ளத்தாக்கின் வாசலை ஆனூனும், சானோவாகின் குடிகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.. (நெகே 3:13)

எருசலேமின் தாழ்வான பள்ளத்தாக்குப் பகுதியில் இது இருந்ததால், பள்ளத்தாக்கின் வாசல் என்று இது அழைக்கப்பட்டது. சுட்டெரிக்கப்பட்டுக் கிடந்த இதையும் பழுதுபார்த்துக் கட்டினார் நெகேமியா.

இது தாழ்ந்த நிலையைக் குறிக்கிறது. "இந்தியா ஒளிர்கிறது.." "இந்தியா மிளிர்கிறது.." என்று என்னதான் தேசபக்திக்காரர்கள் கோஷம்போட்டு மார்தட்டிக் கொண்டாலும், நாட்டின் உண்மைநிலையை வைத்துப் பார்த்தால் இன்னும் இது இருப்பது Third world country என்னும் தாழ்நிலையில் தானே? இரண்டாம் உலகப்போரின் காலத்திற்கும் இன்றைய நாளுக்கும் ஒப்பிட்டால், படிப்பறிவு சதவிகிதத்திலும், விஞ்ஞான முன்னேற்றத்தில், பொருளாதாரத்திலும், இராணுவத் தரத்திலும் நாம் முன்னேறியிருந்தாலும், மேல்மட்டம் முதல் அடிமட்டம் வரை எல்லாத்துறையிலும் காணப்படும் ஊழல், ஏழ்மை, கிராமப்புறக் கல்வி, போதிய சுய மருத்துவ வசதி வளர்ச்சி பெறாத மாநிலங்கள், பாலியல் வன்முறைகள், வரதட்சணைக் கொடுமைகள், கொலைகள், கொள்ளைகள், கடத்தல், விவசாயிகளின் தற்கொலை மரணங்கள், தீவிரவாதம், வட இந்தியப் பகுதிகளில் பெருமளவில் காணப்படும் கொடூரமான குற்றங்கள், சாதியியல், மதக்கலவரங்கள், விலைபோய்விட்ட ஊடகங்கள் என்று இன்னும் எத்தனை எத்தனையோ

காரியங்களைக் கண்கூடாகக் காணும் போது ஏழ்மையும் தாழ்மையுமான அதல பாதாளமான பள்ளத்தாக்கில் அல்லவோ நாம் இன்னும் கிடக்கிறோம்?

எல்லாவற்றைப் பார்க்கிலும் நாட்டின் சமுதாயத்தில் தாழ்நிலையையும் கீழ்நிலையையும் ஏழ்நிலையையும் அன்றாடம் நம் கண்களாலே காண்கிறோமே!

- நகரங்களுக்கும் கிராமங்களுக்குமான மிகப்பெரிய பாகுபாடும் வேறுபாடுமான நிலை !

- கல்வியறிவில் தாழ்நிலை!

- மருத்துவ வசதியில் கீழ்நிலை!

- பொருளாதாரத்தில் ஏழ்நிலை !

- சாதியத்தின் இழிநிலை!

- சமூக முன்னேற்றத்தில் தாழ்நிலை!

- பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பில் கீழ்நிலை!

- நீதிமன்றங்களின் இழிநிலை!

- காவல் நிலையங்களின் கொடும்நிலை!

இன்னும் எத்தனை எத்தனை எத்தனை!

- **இந்த "எலும்புப் பள்ளத்தாக்கின்" உலர்ந்த எலும்புகள் உயிரடையுமோ? (எசே 37:1) - உயிரைடையும் என்ற விசுவாசத்தோடு ஜெபிப்போம்!**

• சமீபித்திருக்கும் கர்த்தரின் நியாயத்தீர்ப்புக்கென்று இந்த இந்திய "நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே" திரள்திரளாய் நிற்கும் ஜனத்துக்காய்த் திறப்பிலே நிற்போமோ? ஐயோ, பயிர் முதிர்ந்து, ஆலை நிரம்பி வழிகிறதே! இந்த ஜனத்தின் பாதகங்களுக்காய் இதோ இந்தப் "பள்ளத்தாக்கின் வாசலைப்" பழுதுபார்க்க எழுந்து நிற்போம் வாருங்கள்!" (யோவேல் 3:13, 14),

• சாத்தானின் இந்த "சங்காரப் பள்ளத்தாக்கை", (எரே 19:6) நீர் ஜீவனின் பள்ளத்தாக்காய் (சங் 104:10) மாற்ற மாட்டீரோ என்று ஜெபிப்போம்.

• இது "மரணப்பள்ளத்தாக்கு" தான் (சங் 23:4). ஆனாலும் இந்த " அழுகையின் பள்ளத்தாக்கை" உருவ நடக்கும் நமக்கு தேவன் இதை நீரூற்றாக்கும்படியாய் ஜெபிப்போம்.

• வாருங்கள்! தேசமென்னும் இந்தப் "பள்ளத்தாக்கு" எங்கும் ஜெபமாகிய வாய்க்காலை இன்று வெட்டுவோம் (2 இரா 3:16). தேவன் தமது எழுப்புதல் நதியை நாளை நம் மத்தியிலே வெள்ளமாய் அனுப்புவார்! ஆமென்!

CHAPTER 05

குப்பைமேட்டு வாசல்
Dung Gate

PART- 6

“குப்பைமேட்டு வாசலை பெத்கேரேமின் மாகாணத்துப் பிரபுவாகிய ரெக்காவின் குமாரன் மல்கியா பழுதுபார்த்துக் கட்டி...(நெகே 3:14)

இது எருசலேம் அலங்கத்தின் தென்கோடியில், சீலோவாம் குளத்தருகே இன்னோம் பள்ளத்தாக்கிற்குச் செல்லும் வழியிலே இருந்தது. நகரத்தின் குப்பை இன்னோம் பள்ளத்தாக்கிற்கு இந்த வாசல் வழியாகவே வண்டிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டது. இது "சாம்பல் குவியலின் வாசல்" என்றும் அழைக்கப்பட்டது.

வளர்ந்த மேலை நாடுகளை ஒப்பிடும்போது நம் தேசம் சுத்த சுகாதாரமற்ற தேசம் தானே!

- நகர்ப்புறங்களிலே காணப்படும் சுத்த சுகாதாரமும் காற்றோட்டமும் அற்ற நெருக்கம் நெருக்கமான சேரிப் பகுதிகளைப் பாருங்கள்!

- ஆசியாவிலேயே மிகப்பெரிய குடிசைக் குடியிருப்புகளின் அணிவகுப்பு இங்கு தானே!

- எத்தனை குடிசை மாற்று வாரியங்கள் வந்தாலும் புற்றீசலாய்ப் பெருகிக்கொண்டே போகும் குப்பைமேட்டுக் குடியிருப்புகள்!

இங்கே...

- சுவாசிக்கும் காற்றிலே மாசுக் கழிவுக் குப்பை!

- குடிக்கும் நீரிலே அசுத்தக் கழிவுக் குப்பை !

- நதியிலே கலக்கும் தொழிற்சாலைக் கழிவுக் குப்பை !

- மருத்துவக் கழிவுகள்!

- இரசாயனக் கழிவுகள்!

- அணுமின் உலைக் கழிவுகள்!

- வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டு கொட்டப்படும் கழிவுகள்!

- உள்நாட்டில் மலை போல் தேங்கி நிற்கும் கழிவுகள்!

- மென்பொருள் கம்ப்யூட்டர் கழிவுகள்!

- அரசியல் குப்பைகள்!
- ஊழல் குப்பைகள்!
- சினிமாக் குப்பைகள்!
- பாவக் குப்பைகள்!
- சபையின் கள்ள உபதேசக் குப்பைகள்!

- நமக்கு லாபமாயிருக்கும் படிப்பு, பணம், புகழ்,பெருமை மேன்மைகளை நஷ்டமும் குப்பையுமாக எண்ணிக் கழித்துப்போடாமல், சேர்த்துக்கூட்டி, இச்சையும் நாற்றமுமாய், குப்பையும் கூளமுமாய் நமக்குள்ளே மண்டிக்கிடக்கும் தேவன் அருவருக்கும் குப்பைகள்!

அன்று எருசலேமின் இந்தப் பள்ளத்தாக்கின் வாசல் தகர்க்கப்பட்டுப் போனதினாலேயே நகரத்தின் வெளியே கொண்டுபோய்க் கொட்டப்படவேண்டிய குப்பைகள் உள்ளேயே மலையாய்க் குவிந்து பரிசுத்த நகரமே தீட்டுப்பட்டுப்போயிருந்தது. இன்று நம் தேசத்திலும் சபையிலும் ஆங்காங்கே குவியல் குவியலாய் மலைபோல் குவிந்து கிடக்கும் சகலவிதக் குப்பைகளையும் காண்கிறோமே! நமது தேவன் பரிசுத்தத்தில் வாசம் செய்கிறவரல்லவா?

நாம் உட்கொள்வதற்கும் வெளியேற்றுவதற்கும் பிரத்தியேக வாசல்களை தேவன் உண்டாக்கி வைத்திருப்பதுபோலவே, தேசத்திலிருந்தும் நம் வாழ்விலிருந்தும் வேண்டாத குப்பைகளையும் கழிவுகளையும் வெளியேற்றி ஜெபிக்க வேண்டிய காலமல்லவோ இது? ஆகவே வெளியேற்ற வேண்டியவைகளை தேசத்திலிருந்தும் சபையிலிருந்தும் வெளியேற்றி சிதைந்துபோன இந்தக் குப்பைமேட்டு வாசலை ஜெபத்தால் எழுந்து கட்டுவோம் வாருங்கள்!

CHAPTER 05

ஊருணி வாசல்
Fountain Gate

PART- 7

"ஊருணி வாசலை மிஸ்பாவின் மாகாணத்துப் பிரபுவாகிய கொல்லோசேயின் குமாரன் சல்லூம் பழுதுபார்த்துக் கட்டினான்..."(நெகே 3: 15).

ஊருணி வாசல் எருசலேம் அலங்கத்தின் தென்கிழக்குப் பகுதியில் தாவீதின் நகரத்தின் கீழ்முனையிலிருந்த ஒரு வாசல். எருசலேம் மதிலுக்கு வெளியே என்ரொகேல் (En-rogel) என்னும் ஊற்று இருந்தது. நகரத்து ஜனங்கள் இந்த வாசல் வழியாகவே தண்ணீர் கொண்டு வரும்படி அவ்வூற்றுக்குச் சென்றுவந்தபடியால் இது ஊருணிவாசல் என்று அழைக்கப்பட்டது.

ஊருணி வாசல் என்பது தேசத்தின் ஊற்றுக்கண்களையும் வளங்களையும் (Resources) குறிக்கிறது.

"எந்த வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ?
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் ?" என்று பாடினார் கவிஞர் ஒருவர்.

இந்த நாட்டில் இல்லாத வளங்களென்ன? நீர் வளமா? நில வளமா? நதி வளமா? கடல் வளமா? கனிமவளமா? மலை வளமா? மனித வளமா?

அறிவுக்குப் பஞ்சமா ?அனுபவத்துக்குப் பஞ்சமா? திறமைக்குப் பஞ்சமா? புலமைக்குப் பஞ்சமா ? வளமைக்குப் பஞ்சமா? கலைக்குப் பஞ்சமா? வீரத்துக்குப் பஞ்சமா?

• ஒரு காலத்தில் முகலாயப் படையெடுப்புகளால் கொள்ளையடிக்கப்பட்டது இந்நாட்டின் பெருமளவு வளம்!

• ஆங்கிலேய ஆக்கிரமிப்பால் கிழக்கிந்தியக் கம்பெனியால் சூரையாடப்பட்டது வேண்டியமட்டும் தேவையான வளம் !

• ராஜா மகாராஜாக்களும், குறுநில மன்னர்களும், ஜமீன்தார்களும், நிலக்கிழார்களும், உயர்ஜாதியினரும் சுரண்டித் தின்றது மீதியான வளம்!

• மிச்சமீதியைக் கொள்ளையடிக்கிறது தனியார்மயமென்கிற இன்றைய கார்ப்பரேட் கும்பல்!

• இந்நாட்டு அறிவு வளத்தைக் கொள்ளை கொண்டுபோய், தன்னாட்டு வளத்தை வளர்த்து, வாழ்ந்து செழிக்கிறது வெளிநாடு !

• உள்நாட்டு அரசாங்கமோ வரிபோட்டுப் பகல்கொள்ளையில் தன் ஜனத்தைத் தானே தரித்திரமாக்குகிறது!

• NRI என்றழைக்கப்படும் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு நல்ல ஊதியமும் மதிப்பும் கௌரவமும் பொறுப்பும் அளிக்கப்பட்டு, அரசியலும் ஊழலும் இல்லாத சூழல் உருவாக்கிக் கொடுக்கப்படுமானால் அவர்களது திறமையும் அறிவாற்றலுமான வளங்கள் தாய்நாட்டுக்கு உதவாதோ? - ஜெபிப்போம் !

• ஒரு மாநிலம் தன் அண்டை மாநிலத்துக்குத் தன் நதி நீரைத் தரத் தயாரில்லாத சகோதரச் சண்டை நீங்காதோ? - ஜெபிப்போம்!

- நிலக்கரிச் சுரங்க வளங்களும், விவசாய நில வளங்களும், கனிம நில வளங்களும், இரும்புத்தாது வளங்களும், கடலின் மீன்பிடி வளங்களும், மலைகளின் இயற்கை வளங்களும் யாரோ ஒரு தனியாருக்குத் தாரைவார்க்கப்படும் அவலங்கள் நீங்காதோ? - ஜெபிப்போம்!

- எங்கெங்கே இயற்கை வளங்கள் காணப்படுகிறதோ அங்கே வாய்திறந்து விழுங்கக் காத்திருக்கும் கார்ப்பரேட் முதலைகள்... அவைகளுக்குப் பக்கபலமான அதிகாரவர்க்கங்கள் ! - ஜெபிப்போம்!

- உள்நாட்டு வளங்கள், உள்நாட்டுக்குப் போக மீதியானவைகளாய் அந்நியச்செலாவணியாகி, உள்நாட்டுக்கே வளங்கொண்டு திரும்புமானால் இந்நாட்டில் வளமும் செல்வமும் கொழிக்காதோ? - ஜெபிப்போம்!

- ஆபிரகாம் காலத்தில் தோண்டப்பட்டு எதிரிகளால் தூர்த்துப் போடப்பட்ட கிணறுகளைத் தூர்வார்த்துத் தோண்டினான் ஈசாக்கு. தேசத்திலே இன்று தூர்த்துப் போடப்பட்ட நீரூற்றுக்களை ஜெபத்தில் ஆவியில் தூர்வார்த்துத் தோண்டி ஊருணி வாசல்களைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுவோம் வாருங்கள்! தேசத்துக்குச் க்ஷேமத்தைக் கொடுப்பேன் என்றவர், இன்றைய அரசியல் வனாந்தரத்திலே ஆசீர்வாத ஆறுகளையும், வளங்கள் வறண்ட அவாந்தர பூமியிலே நீரூற்றுகளையும் திரும்பவும் வரவிடமாட்டாரோ? - ஜெபிப்போம்!

- எங்கள் தேசத்தின் ஊற்றுக்கண்கள் அயல்நாட்டு அந்நியருக்கும் உள்நாட்டுக் கொள்ளையருக்கும் உரியவைகளாயிராமல், தேச ஜனமாகிய எங்களுக்கே

உரியவைகளாய் இருப்பதாக! எங்கள் தேசத்து வளமான எங்கள் கிணற்றின் தண்ணீரையும் , உள்நாட்டுத் துரவில் ஊறுகிற ஜலத்தையுமே நாங்கள் பானம் பண்ணட்டும்! (நீதி 5:15, 17)

வெளிநாட்டுச் சந்தையின் சீனச் சீமைச்சரக்குகளில் அல்ல, உள்நாட்டு விலைமதிப்பற்ற பொக்கிஷ வளங்களிலேயே தேசம் மகிழ்ந்து களிப்பதாக! தேசத்திலே ஆசீர்வாத மழை பெய்வதாக! ஆமென்!

- இவைகள் போக, இந்தியத் திருச்சபைகளிலே ஆவிக்குரிய வளங்களுக்கும், வரங்களுக்கும், வெளிப்பாட்டு வசனங்களுக்கும் பஞ்சமுண்டோ? குழந்தைச் செல்வங்களுக்கும் வாலிபச் செல்வங்களுக்கும், தேவன் அவர்கள் மேல் பொழிந்தருளியிருக்கும் இயற்கை வரங்களுக்கும் ஆவியின் வரங்களுக்கும் குறைவுண்டோ? மேய்ப்பர்களென்ன? போதகர்களென்ன? சுவிசேஷகர்களென்ன? தீர்க்கதரிசிகளென்ன? அப்போஸ்தலர்களென்ன? சபைக்கு உண்டானவைகளில் நாம் பெற்றுக்கொள்ளாதது இன்னும் யாது?

- அப்படியிருக்க, உலக மனிதன் தன் திறமையைப் பணமாக்கத் துடிக்க, இன்றைய ஆவிக்குரியவனும் தன் ஆவிக்குரிய வரங்களையும்,வளங்களையும், வல்லமையையும் காசாக்கப் பறப்பதென்ன? இன்றைய சபையின் ஊற்றுக்கண்கள் அடைபட்டு, ஊருணி வாசல்கள் சுட்டெரிக்கப்பட்டுக் கிடப்பதென்ன?

- ஊற்றுத்தண்ணீரே, எங்கள் தேவ ஆவியே, ஜீவநதியே எங்கள் தேசத்திலும் சபையிலும் பொங்கிப் பொங்கி வாரீரோ?

எங்கள் ஊற்றுக் கண்களையும் மனக்கண்களையும் திறக்கமாட்டீரோ? தூர்த்துப்போடப்பட்ட எங்கள் ஊற்றுக்கண்கள் தூர்வாரப்பட்டு, சிதிலமடைந்த எங்கள் ஊருணிவாசல்கள் திரும்பக் கட்டப்படுவதாக! ஆவிக்குரிய தேவ ஆசீர்வாத நீரூற்றுகள் வறண்டுபோன எங்கள் சபைகளில் கரைபுரண்டு ஓடுவதாக! தேசம் தண்ணீரால் நிரம்பட்டும் ஐயா! சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல தேசம் தேவனை அறியும் அறிவினாலே நிரம்புவதாக! எங்கள் தேசத்தையும் சபைகளையும் தேவரீர் ஆசீர்வதிப்பீராக! ஆமென் !

CHAPTER 05

தண்ணீர் வாசல்
(Water Gate)

PART- 8

ஓபேலிலே குடியிருக்கிற நிதனீமியரைச் சேர்ந்த மனிதரும்...தண்ணீர் வாசலுக்கு...எதிரேயிருக்கிற இடமட்டும் கட்டினார்கள்.. (நெகே 3.26)

தண்ணீர் வாசல், எருசலேம் அலங்கத்தின் கிழக்குப் பகுதியில் சீகோன் ஊற்றுக்கு எதிர்ப்புறத்தில் அமைந்திருந்தது. எருசலேம் நகரத்தின் தண்ணீர் விநியோகத்திற்காக இவ்வூற்று முக்கியமாகப் பயன்பட்டு வந்ததால் அதற்கு எதிரே இருந்த வாசல் "தண்ணீர் வாசல்" என்று அழைக்கப்பட்டது. எருசலேமின் முற்றுகையின்போது இவ்வூற்று அடைக்கப்பட்டு இந்தத் தண்ணீர் வாசல் தீக்கிரையாக்கப்பட்டது.

தேசத்தின் வாழ்வாதாரம் தண்ணீர்.. தேசத்தின் தாகம் தீர்ப்பது தண்ணீர்.. தேசத்தைப் பசுமையாக்குவது தண்ணீர்.. தேசத்தை வளமையாக்குவது தண்ணீர்..இதோடு, நமது நாட்டைப் பொறுத்தவரை ஜனத்தின் பாவம் போக்குவதும் தேசத்தின் புண்ணிய நதிகளின் தண்ணீரே ! மரணிக்கப் போகிறவனின் வாயிலே ஊற்றப்படும் பாலோடு கடைசியாக ஊற்றப்படுவதும் கங்கையின் புனித நீர் எனப்படும் தண்ணீரே !

"தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும் வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்.." (ஏசா 44:3) என்றும், "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்...(யோ 4:14) என்றும் வாக்குத்தத்தம்

செய்து,மனுஷனுடைய தாகம் தீர்க்கவும், ஏதேன் என்னும் கிழக்கு தேசத் தோட்டத்தை வளமாக்கவும் நாலு பெரிய ஆறுகளாய் பைசோனையும், சீகோனையும், இதெக்கேலையும், ஐப்பிராத்தையும் அதின் நாலு திசைகளிலிருந்தும் அன்று அதனுள் பாய்ந்தோடச் செய்த தேவனாகிய கர்த்தர் (ஆதி 2:10 - 14), நான்கு மிகப்பெரிய ஆசீர்வாத நதிகளாய் அவைகளையே நமது தேசத்தின் நடுவிலும் பாய்ந்தோடச் செய்யாரோ?

1. முதல் நதி :

"சமாதான நதி"
(அமைதியின் நதி)

"உன் சமாதானம் நதியைப் போலிருக்கும்.." (ஏசா 48:18)

ஏதேனிலே பாய்ந்த நதிகள், நான்கு வகை நதிகளாய் நம் தேசத்திலும் பாய்ந்து செல்லவேண்டும் என்பதே நமது ஜெபமாகட்டுமே ! "சமாதானம்" என்னும் நதி இத்தேசத்திலே பாய்ந்து செல்ல வேண்டுமே!

ஆனால் தேசத்திலோ சமாதானமும் அமைதியும் இல்லையே!

- ஜனங்களில், தனிமனங்களில் சமாதானம் இல்லையே?
- குடும்பங்களில் சமாதானம் இல்லையே?
- ஊரிலே சமாதானம் இல்லையே?
- மாநிலங்களிலும், மாநிலங்களுக்கிடையிலும் சமாதானம் இல்லையே?

- மக்களுக்குள் சமாதானம் இல்லையே?
- ஆளுபவர்களாலும் சமாதானம் இல்லையே?
- சபைகளுக்குக்குள் சமாதானம் இல்லையே?
- விசுவாசிகள் மனங்களிலும், ஊழியர்களிலும் சமாதானம் இல்லையே?

ஓ! சமாதான நதி வற்றி வறண்டுபோய், தேசத்திலே அது பாயும் தண்ணீர் வாசல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதே!

"உங்களுக்கு சமாதானம்" என்று சொல்லி, "என் சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்.." என்ற சமாதான கர்த்தர், சமாதான காரணராய் தேசத்தைச் சந்தித்து, தேசத்திலே தேவ சமாதான நதியொன்று பெருக்கெடுத்து ஓடும்படியாய், ஜெபத்திலே இந்தத் தண்ணீர் வாசலை எடுப்பித்துக் கட்டுவோம் வாருங்கள்!

2. இரண்டாம் நதி :

"ஆசீர்வாத நதி"

"கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதி போல ஓடி வந்தது..." (யோபு 29:6) என்றார் யோபு.

“தண்ணீர் நிறைந்த தேவ நதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்..."(சங் 65: 9,10) என்றார் தாவீது.

இந்த நதி தேசத்தின் ஆசீர்வாதத்தைக் குறிக்கிறதல்லவோ?

தேவன் தேசத்தை ஆசீர்வதிப்பவர் அல்லவோ? தேசம் தன் பலனைத் தரும் என்றாரே ? தேசத்தின் ஆசீர்வாதங்களைக் குறித்த வாக்குத்தத்தங்கள் தான் எத்தனை எத்தனை!

ஆனால் தேசத்தின் இன்றைய நிலைதான் என்ன?

- வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் வாழ்வாதார நிலை எங்கே !

- தேசத்து கிராம மக்களின் நிலை எங்கே !

- விவசாயிகளின் வறுமை எங்கே!

- கடன்பட்டவர்களின் தற்கொலைப் புள்ளிவிபரங்களின் ஏறுநிலை எங்கே!

- அடிமட்டத் தொழிலாளர்களின் பரிதாபநிலை எங்கே!

- பொருளாதாரக் குறைவினால் மருத்துவ வசதியின்றி மாள்பவர்களின் அவலங்கள் எங்கே!

- வறுமையினால் கூலித்தொழிலுக்குத் தள்ளப்படும் குழந்தைகளின் நிலை எங்கே!

ஆசீர்வாத நதியும் ஆசீர்வாதத்தின் ஊற்றும் அவரே அல்லவோ? தேவன் இந்த தேசத்தைத் தமது சகல ஆசீர்வாதங்களாலும் கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கும்படியாகவும், ஆசீர்வாத மழையினால் அவரது ஆசீர்வாத நதி தேசமெங்கும் பெருக்கெடுத்து ஓடும்படியாகவும் ஜெபிப்போம்..

உலகப்பிரகாரமானதும், பொருளாதார ரீதியிலுமான ஆசீர்வாதங்களையே மையமாக வைத்துச் செய்யப்படும் தவறான செழிப்பு உபதேசங்களால் வஞ்சிக்கப்பட்டு வழிவிலகும் சபைகளுக்காய் ஜெபிப்போம். இம்மைக்குரிய ஆசீர்வாதங்கள் அல்ல, அந்த ஆசீர்வாதங்களை அள்ளித்தரும் ஆண்டவரே நமது முதலும் முழுமையுமான இன்றியமையாத தேவை என்று சபைகள் உணரத்தக்கதாய் ஜெபிப்போம். தண்ணீர் வாசல் கட்டப்படட்டும்!

3. மூன்றாவது நதி :

"ஆரோக்கிய நதி"

"இந்த நதி போகும் இடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும்..." (எசே 47: 8,9)

- ஓ! இந்த தேசம் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்காதோ?

- பாவம், அறியாமை என்னும் வியாதியினால் மட்டுமல்ல, அரசியல் அக்கிரம நோயினாலும், சரீர நோயினாலும், இத்தேசத்தின் தலையெல்லாம் வியாதியும், அதின் இருதயமாம் மனசாட்சியும் பலட்சயமாய் இருக்கிறதே!

- தேசத்தின் தென்முனை என்னும் உள்ளங்கால் தொடங்கி, வடமுனை என்னும் உச்சந்தலை மட்டுமுள்ள இதன் ஜனக்கூட்டத்திலே சுகமே இல்லையே? அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமாய் இருக்கிறதே! அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினாலும் மருந்தினாலும் ஆற்றப்படாமலும் இருக்கிறதே!

- தேசத்தின் ஆரோக்கிய நிலை பாழாய்க்கிடக்கிறதைப் பார்க்கிறீர்களே!

- அரசு மருத்துவமனைகளின் அவல நிலைகளைப் பார்க்கிறீர்களே!

- மருத்துவமனைகளே இல்லாத இடங்களையும், மருத்துவ வசதிகளே இல்லாத மலைப்பிரதேச மாநிலங்களையும் பார்க்கிறீர்களே!

- ஆஸ்பத்திரிகளின் வெளியே கவனிப்பாரின்றிக் கிடப்பவர்களைப் பார்க்கிறீர்களே!

- சாலை ஓரங்களிலே வியாதியின் காரணத்தினால் கைவிடப்பட்டுக் கிடப்பவர்களைப் பார்க்கிறீர்களே!

- மருத்துவத் துறையே வியாபாரமாகிப்போனதைப் பார்க்கிறீர்களே!

- ஆஸ்பத்திரிகளில் நடக்கும் பகல் கொள்ளையைப் பார்க்கிறீர்களே!

- மருந்துகளை உள்நாட்டு மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்யாமல், ஃபார்மச்சூட்டிக்கல் கம்பெனிகள் அவைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து, கொள்ளை லாபம் பார்ப்பதைப் பார்க்கிறீர்களே!

- **தகப்பனே, உம்முடைய ஆரோக்கிய நதி எங்கள் தேசத்தின் நாலாபக்கமும் ஆறுகளாய்ப் புரண்டோடாதோ?**

- **புண்ணிய நதிகளின் தண்ணீர்கள் அல்ல, கொல்கொதா எனும் கன்மலையிலிருந்து பாய்ந்து வரும் பரிசுத்த இரத்த நதியே பாவம் தீர்க்கும் நதியென்று தேசம் அறியவும், அறியப்படுத்தவும் செய்யாதோ?**

- **கீலேயாத் எனும் கல்வாரி மலையிலே தேசத்தின் இரணத்தை ஆற்றும் பிசின் தைலம் உண்டென்றும், அங்கே வைத்தியருக்கெல்லாம் வைத்தியரான இயேசு என்னும் இரணவைத்தியர் ஒருவர் உண்டென்றும் அறிந்து, தேசம் அவரிடத்துக்கு ஓடி வந்து ஆரோக்கியம் அடையாதோ?**

தேசத்திலே சமாதானம் மட்டுமல்ல, ஆசீர்வாதங்கள் மட்டுமல்ல, ஆரோக்கியமும் நதியாய்ப் பெருக்கெடுத்து ஓட, தண்ணீர் வாசலை எழுந்து கட்டுவோம் வாருங்கள்!

4. நான்காவது நதி :

"பேரின்ப நதி"
(ஆனந்த நதி)

"உமது பேரின்ப நதியினால் அதின் தாகத்தைத் தீர்க்கிறீர்...."
(சங் 36:8)

ஏதேனின் நான்கு நதிகளைப் போலவே, தேசத்தின் நான்கு முனைகளிலிருந்தும் அதற்குள் பாயவேண்டிய நான்கு நதிகளிலே நான்காவது நதி "பேரின்ப நதி." இது ஆனந்த நதியென்னும் மூழ்கி மகிழும் நதியல்லவோ?

தேச ஜனத்திலே..

- குடிப்பவனுக்குக் குடியிலே சிற்றின்பம்!

- விபச்சாரனுக்கு விபச்சாரத்திலே சிற்றின்பம்!

- பெருந்திண்டிக்காரனுக்குப் பெருந்திண்டியிலே சிற்றின்பம்!

- சினிமாக்காரனுக்கும், அதிலே லயிப்பவனுக்கும் களியாட்டத்திலே சிற்றின்பம்!

- கிரிக்கெட் ரசிகனுக்கு கிரிக்கெட்டே சிற்றின்பம்!

- ஊர் சுற்றுபவனுக்கு சுற்றுலாவே சிற்றின்பம்!

- பணப்பித்தனுக்குப் பண ஆசையே சிற்றின்பம்!

- அரசியலாளனுக்கு அவனது அரசியலே சிற்றின்பம் !

- தங்க வெள்ளியும், பிளாட்டினமும், அணிபவருக்குச் சிற்றின்பம்!

- நவநாகரீகமும் ஃபேஷனும் வாலிப நங்கையருக்குச் சிற்றின்பம்!

- வைபவங்களும் கொண்டாட்டங்களும் கொண்டாடுவோருக்குச் சிற்றின்பம்!

இந்தச் சிற்றின்பத் தண்ணீரைக் குடிப்பவனுக்கோ மீண்டும் தாகம் உண்டாகுமே! அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பானே! (யோ 4:13/ நீதி 23:35)

ஆனால் பரம ஏதேனின் பேரின்ப நதி ஒன்று உண்டே!
மெய்யான, தாகம் தீர்க்கும் ஜீவநதி ஒன்று உண்டே!
இரட்சிப்பின் சந்தோஷ நதியொன்று உண்டே?

- தேச ஜனம் தேவன் அருளும் பேரின்ப நதியினாலே தாகம் தீர்க்கப்படாதோ?

- இரட்சிப்பின் ஆனந்த ஊற்றுகளிலே மொண்டு கொள்ளாதோ?

தேசமெங்கும் எழுப்புதலின் பேரின்ப நதியொன்று பாய்ந்து செல்லும்படி ஜெபிப்போம் !

வரலாறு காணா எழுப்புதல் ஒன்றே சிற்றின்பப் பாவக் கசடுகளை அடித்துச்சென்று தேசத்தைச் சுத்தமாக்க, பரிசுத்தமாக்க வல்லது என்று கெஞ்சுவோம்!

அன்று ஏதேனில் பாய்ந்த நதிகள், இன்று நம் தேசத்தில் தேவ நதியாய்ப் புரண்டு பாயும்படி "தண்ணீர் வாசலை" ஜெபத்திலே எழுந்து கட்டுவோம் வாருங்கள்!

CHAPTER 05

குதிரை வாசல் (Horse Gate)

PART- 9

"குதிரைவாசல் முதற்கொண்டு ஆசாரியர்கள் அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிரே இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.." (நெகே 3: 28)

குதிரைவாசல், அலங்கத்தின் கிழக்குப் பகுதியில், தேவாலயத்துக்குச் சற்று அருகாமையில் அமைந்திருந்தது. அலங்கத்திலிருந்த இவ்வாசல் வழியாகவே குதிரைகள் ராஜாவின் அரண்மனை வளாகத்திற்குள் கொண்டுவரப்படுவதற்காகவும், வெளியே கொண்டு செல்லப்படுவதற்காகவும் பயன்பட்டுவந்ததால் இது குதிரை வாசல் என்று அழைக்கப்பட்டது.

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் நம்மை வெற்றிசிறக்கப்பண்ணுகிறவரும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிறவருமான தேவன், தமது ஜனமாகிய இஸ்ரவேலருக்கு எப்போதும் வெற்றியையே வாக்குப்பண்ணியிருந்தாலும், அவர்களது பாவங்களினிமித்தம் அவர்களைப் புறஜாதி ராஜாக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்ததினாலே ஜெயகெம்பீரமாய் எருசலேமுக்குள்ளும் வெளியிலும் சென்று வந்த இஸ்ரவேலரின் குதிரைப்படை தோற்கடிக்கப்பட்டு அவைகளின் மேலிருந்தவர்கள் வெறுங்காலாய் பாபிலோனுக்கு இழுத்துச் செல்லப்பட்டபோது, அலங்கத்தின் இந்தக் குதிரைவாசல் இடிக்கப்பட்டு, சுட்டெரிக்கப்பட்ட நிலையில் எழுபது வருடங்களாய் இது பாழாய்க் கிடந்தது.

எருசலேமின் வாசல்களை நமது தேசத்தின் நிலைக்கு ஒப்பிட்டு, ஜெபத்தினாலே அவைகளைக் கட்டியெழுப்ப எழும்பும் நமக்கு, இந்தக் குதிரைவாசல் கற்றுத்தரும் மூன்று காரியங்கள் இங்கே உண்டு. வேதத்தில் குதிரைகளைக் குறித்துப் பல காரியங்கள் காணப்பட்டாலும் முக்கியமான மூன்று குறிப்புகள் நம்மை உணர்த்துவித்து ஜெபிக்கத் தூண்டுகின்றன.

1. யுத்தத்துக்கு ஆயத்தமாக்கப்படும் குதிரைகள் : (நீதி 21:31)

தேவன் தமது ஜனமாகிய சபையை சத்துருக்களுக்கு எதிரான ஆவிக்குரிய யுத்தத்தில் வீரியம் கொண்டு, தரையிலே தாளடித்து, ஆவியின் பெலத்திலே களிக்கும், யுத்தத்தில் சிறந்த குதிரையாய், ஆயுதங்களைத் தரித்த சத்துருவின் சேனைக்கு எதிராக அது புறப்படும்போது அதைக் கண்டு கலங்காமலும், பட்டயத்துக்குப் பின்வாங்காமலுமிருந்து, பயப்படுதலை அலட்சியம் பண்ணி, அம்பறாத்தூணியும், மின்னுகிற ஈட்டியும் கேடகமும் அதின்மேல் கலகலக்கும்போது கர்த்தருக்குள் கர்வமும் மூர்க்கமும் கொண்டு தரையை விழுங்கிவிடுகிறது போல அனுமானித்து, எக்காளத்தின் தொனிக்கு அஞ்சாமல் யுத்தத்தையும், படைத்தலைவரின் ஆர்ப்பரிப்பையும், சேனைகளின் ஆரவாரத்தையும் தூரத்திலிருந்து தீர்க்கதரிசனமாய் அறிந்து பாயும் ஆயத்தமாக்கப்பட்ட குதிரையாகவே நிறுத்த நினைக்கிறார். (நீதி 21:31/ யோபு 39: 19-25/ சக 10:3)

சத்துருவுக்கு எதிரான யுத்தத்தில் மட்டுமல்ல, தேசத்திலும் தமது சபை அப்படியாகவே இருக்கவேண்டுமென்று விரும்புகிறார் தேவன். ஆனால் கிறிஸ்துவின் சபையோ குதிகால் நரம்பு அறுபட்ட குதிரைகளாய் அல்லவோ குந்திக்குந்தி நொண்டிக்கொண்டிருக்கிறது?

2. குதிகால் நரம்பு அறுபட்ட குதிரைகள் : (யோசு 11:6)

"அப்பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி...நீ அவர்கள் குதிரைகளின் குதிகால் நரம்புகளை அறுத்து, அவர்கள் இரதங்களை அக்கினியால் சுட்டெரிக்கக்கடவாய் என்றார்." (யோசு 11:6)

யுத்தத்தில் சிறந்த குதிரையாய் நிற்க வேண்டிய இன்றைய தேவசபை, குதிகால் நரம்பு அறுபட்ட குதிரைகளாய்க் குந்திக்குந்தி நடந்துகொண்டிருக்கவில்லையோ? போருக்குப் பயன்படவேண்டிய குதிரைகள் அற்ப வேலைகளில் அல்லவோ அலைந்து திரிகின்றன ?

குதிகால் நரம்பு அறுக்கப்பட்ட குதிரையை எண்ணிப்பாருங்கள். போர்ப்பறை ஒலித்தவுடன் அதின் சீறியெழும் வீரியம் எங்கே? பின்னங்கால்களை ஊன்றி முன்னங்கால்களைத் தூக்கி, அனல் பறக்கும் மூச்சுகளுடன் ஆரவாரிக்கும் அதின் ஆவேசம் எங்கே? இதோ கால் நரம்பு அறுபட்ட அது, ஒரு கழுதையைப் போல அடிமை வேலை செய்யும் அவல நிலையைப் பாருங்கள்!

இன்று, பறக்கப் பிறந்த விசுவாசிகளின் நிலையும் இதைப்போலவே இல்லையோ? அனலுடன் வாழத் தீர்மானித்த அந்தக் குதிரைத்தனம் எங்கே? பணம், காமம், அசட்டைத்தனம், வித்தைகள், ஏமாற்றுவேலைகள், ஜெபமின்மை, வேதவாசிப்பு இன்மை, ஆர்வக்குறைவு போன்றவற்றால் உலக மாயைகளின் பொதி சுமந்து கிடக்கும் கோர நிலை! சாத்தானின் மாயக் கத்திகள் குதிகால் நரம்புகளை அறுத்துவிட்டதால் தானோ அவனுக்குப் பின்னே அங்கலாய்த்து நடக்கும் இந்த அவல நிலை!

வசன முரசு அறையப்படும்போது ஆர்ப்பரித்து எழும் ஆட்கள் எங்கே? எல்லாம் குதிகால் நரம்பு வெட்டப்பட்ட குதிரைகளாக, நிலம் பார்க்கவும், ஏர் பூட்டவும், துயில் அறைக்கும் சென்றுகொண்டிருக்கின்றனவே! (லூக் 14:18-20)

ஒரு காலத்தில் நேபுகாத்நேச்சாரின் படையால் இஸ்ரவேலரின் குதிரைப்படைக் குதிகால் நரம்பு அறுக்கப்பட்டு, அலங்கத்தின் குதிரைவாசல் சுட்டெரிக்கப்பட்டதும் இப்படித்தானே!

இன்று தேவனின் போர்க்குதிரைகள் எங்கே? குதிரை வாசலைக் கட்டியெழுப்ப நம்பிக்கை ஏதாகிலும் இங்கே உண்டோ? அதையும் நெகேமியா கட்டியெழுப்பத்தான் செய்தார். சபை தனது பழைய வீரியத்துக்குத் திரும்பும்படியாய் ஜெபத்தில் எழுந்து நிற்போம் வாருங்கள்!

3. அழிவுக்கு அடையாளமான குதிரைகள் : (வெளி 6:1-8)

வேதம், குதிரைகளை யுத்தத்துக்கு ஆயத்தமாகவும், வெற்றிக்கு அடையாளமாகவும் மட்டுமல்ல, கீழ்ப்படியாமையினால் தோற்றுப்போகும்போது, நரம்பு அறுபட்டு போருக்குப் பயன்படுத்த இயலாதவைகளான எச்சரிப்பின் அடையாளங்களாகவும் மட்டுமல்ல, அவைகளை முக்கியமாக, தேசத்தில் மிகச்சீக்கிரம் சம்பவிக்கப்போகும் அழிவுக்கு அடையாளமாகவுமே மிகத்தெளிவாய்ச் சித்தரித்துக் காட்டுகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் ஆறாம் அதிகாரத்தில் காணப்படும் நான்கு வெவ்வேறு நிறமான குதிரைகள், உலகத்தின் கடைசி நாட்களில் நடக்கப்போகும் பேரழிவுக்கு

அடையாளங்களாகக் காணப்பட்டாலும், அதே நான்கு குதிரைகளின் தரிசனங்களும் இன்றைய இந்தியாவின் நிகழ்வுகளுக்கும், தேசத்திலே மிகச்சீக்கிரம் நடக்கப்போகும் சம்பவங்களுக்கும் அடையாளங்களாகவே காணப்பட்டு நம்மைத் திறப்பிலே நிற்க எச்சரித்து ஏவுகின்றன.

(A) வெள்ளைக் குதிரை :

"இதோ ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின் மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான். (வெளி 6.2)

வெளிப்படுத்தின விசேஷத்தின்படி, இந்த வெள்ளைக்குதிரையில் ஏறியிருப்பவன் அந்திக்கிறிஸ்துவுக்கு அடையாளமாகவும், வெள்ளைக்குதிரையோ சமாதானத்துக்கும், சமாதான ஒப்பந்தங்களுக்கும் அடையாளமாகவே இருக்கிறதென்பது பல வேதவல்லுநர்களின் கருத்து. உபத்திரவக்காலத் துவக்கத்திலே அந்திக்கிறிஸ்து உலகின் பல நாடுகளோடு சமாதான உடன்படிக்கை செய்து, தன்னை ஒரு சமாதானத் தூதுவனாகவே காட்டிக்கொண்டு, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நல்ல உலகத்தலைவனாகவே வலம் வருவான் என்பது நாம் அறிந்ததே!

- **அந்திக்கிறிஸ்து - அதாவது Anti-Christ - அதாவது, இவன் கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிரான ஒருவன்!**

- **இதோ இங்கே, கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவ மதத்துக்கும், கிறிஸ்தவ சிறுபான்மையினருக்கும் எதிரான ஒரு தேசத் தலைவர் ! இவர் Anti-Conversion Law கொண்டுவரப்போகும் Anti-Christ ன் இந்திய முன்னோடி!**

• தன்னை ஒரு சமாதானத் தூதுவராகவே காட்டிக்கொண்டு, உலக நாடுகளின் உறவையும் இணக்கத்தையும் சம்பாதித்தவராய், வணிக ரீதியிலும் ஒப்பந்தங்கள் பல செய்து, ஏறக்குறைய உலக நாடுகள் அனைத்தையுமே பறந்து பறந்து சென்று பார்த்து வந்தவர் இவர் !

• உள்நாட்டிலும் "நல்லகாலம் பொறக்குது...நல்லகாலம் பொறக்குது...(Achche Dhin Aanewale hain) என்று சொல்லிச் சொல்லியே உடுக்கு அடித்து வருபவர் இவர் !

• உள்நாட்டில் இரண்டாம் முறையாக ஜெயித்து, ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலுமே ஜெயிக்கிறவராகவும், ஜெயிப்பவராகவுமே தன் வெள்ளைக்காரில் வலம்வந்து கொண்டிருக்கிறவர் இவர் !

• என்ன தான் தன்னை மக்களின் (மன் கீ பாத்) மனங்கவர் நண்பனாகவும், சமாதானப்புறாவாகவும் காட்டிக்கொண்டாலும், இவரது கையில் இருப்பதென்னவோ அயோத்தி ராமரின் வில் தான் அல்லவோ ? "அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப் போல மெதுவானவைகள், அவன் இருதயமோ யுத்தம்; அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவைகள், ஆனாலும் அவைகள் உருவின பட்டயங்கள்..." (சங் 55:21)

(B) சிவப்புக்குதிரை :

"அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாகச் சமாதானத்தை பூமியிலிருந்து எடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. (வெளி 6:4)

• சிவப்பு, இரத்தத்தைக் குறிப்பதல்லவோ?

• இவர் கை வைக்கும் காஷ்மீரின் ஹஜுரிபாகோ, டெல்லியின் ஷாஹீன்பாகோ, இவர் கால் வைக்கும் ஸ்ரீ நகரின் செஞ்சதுக்கமோ, டெல்லியின் செங்கோட்டையோ, அங்கே குருதி உறுதி!

• ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடோ, தெலுங்கானா பிளவோ, குஜராத் ஃபைல்களோ, மாலே காங்வ் இரயில் எரிப்போ, மேற்குவங்கத் தேர்தல் கலவரமோ, காஷ்மீரின் மண்டை உடைப்போ, டெல்லியின் CAA தீவைப்புகளோ, உபியின் புல்டோசர் அரசியலோ, இவர் திரும்பும் திக்கெங்கும் இரத்தம் உறையும் !

• இப்போது என்னவாம்? 17 வயதிலேயே இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பாம் ! நாலு வருட வேலையும் 11 லட்ச டெபாசிட்டும் உத்தரவாதமாம்! இது, ஹிட்லர் யூத்தின் SS மற்றும் ஹிட்லர் பாய்ஸின் SA படைகள், இரண்டாம் உலகப்போரின் முடிவிலே சிறுவர்களை Human Shield ஆகப் பயன்படுத்திய நாட்களை நினைவூட்டும் நாட்களோ? இப்போது 17 வயதுப் பையன்களில் தொடங்கும் இது, இன்னும் சில வருடங்களில் 13,14 வயதிலேயே இராணுவத்தின் கட்டாய ஆள்சேர்ப்பாய் மாறும் ! பொறுத்திருந்து பாருங்கள் ! ஏற்கனவே இதனால் வட இந்தியா பற்றியெரியத் தொடங்கிவிட்டது!

• எத்தனை இரத்தக்களறியானாலும் அவைகளெல்லாம் அவருக்குத் தற்செயலாய், தவறுதலாய்க் காருக்கு அடியில் மாட்டி அடிபட்டு செத்துப்போகும் நாய்க்குட்டி தானாம்! "இதற்கெல்லாம் கவலைப்படலாமா ?" என்பார்!

இரத்தம்! இரத்தம்! , தேசத்தின் நிலமெங்கும் இரத்தம்! இதோ, சிவப்புக்குதிரையில் உலா வருகிறார்!

கறுப்புக்குதிரை :

"இதோ ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின் மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைக் கையில் பிடித்திருந்தான். அப்பொழுது ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும் உண்டான சத்தத்தைக் கேட்டேன்.."(வெளி 6:5, 6)

- இந்தக் கறுப்புக்குதிரை தேசத்தில் பஞ்சத்தைக் குறிக்கிறதல்லவோ? மேற்சொன்ன வசனத்தின்படி, வழக்கமான அன்றாட விலைக்கு இது பத்து மடங்கு அதிகமாம்!

- இவர் வரி மேல் வரி போட்டு வறுத்தெடுப்பார்!

- சமையல் வாயுவிலிருந்து, பெட்ரோல் டீசலிலிருந்து டீக்கடை பிஸ்கட் முதல் காய்கறி வரை விலை தலையிலிருந்து மலைக்கு ஏறும்!

- அரிசி முதல் அரைக்கோதுமை வரை காண்ட்ராக்ட் என்னவோ அதானிகளுக்கும் அம்பானிகளுக்குமே !

- அரைலிட்டர் தண்ணீர் பாட்டில் "அக்குவா ஜெயின்" பெயரில் தாம்பரத்தில் அமோக விற்பனையாக, "அம்பானி வாட்டர் சப்ளையர்ஸ்" என்று தமிழில் பெயரெழுதப்பட்ட தண்ணீர் லாரிக்குத் தண்டையார் பேட்டையில் என்ன வேலையென்று தலையில் இடிக்கிறது!

- விமானக் கட்டணம் தான் நாளுக்கு நாள், நிமிஷத்துக்கு நிமிஷம் விஷமாய் ஏறுகிறதென்றால், குறிப்பிட்ட

இரயில்களின் பயணக் கட்டணமும் மனம் போல் மாறிமாறி, இப்போது அந்தந்த இரயில்களைக் கண்டாலே அவைகளை விட வேகமாய் ஓட்டம் எடுப்பதாய் உள்ளது. பாக்கெட்டிலுள்ள கடைசிப் பத்து ரூபாயையும் பிடுங்குவார்களாம் ! இதற்குப் பெயர் Dynamic firing ஆம்! கடைசியாக இரயில் சேவையும் தனியார் வசமாகிறது!

- இவ்வளவு விலையேற்றத்துக்கும் தட்டுப்பாடுகளுக்கும் பித்தலாட்டங்களுக்கும் மத்தியிலும், "எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே!" என்று, "வளமையான ஐட்டங்களெல்லாம் வறியவர்களுக்கல்ல" என்று சொல்லி, அவைகளை வளமான கைகளுக்கு ஒதுக்கிவிட்டு, கடனான பெருந்தொகைகளை அவர்களுக்குத் தள்ளுபடியும் செய்து, அந்தத் தொகைகளைப் பொதுஜனத் தலையிலே பொதியாய்க் கட்டிவிட்டு, இவர் இமயமலையின் பத்ரிநாத் கேதார்நாத் குகைகளுக்குச் சென்று தவம் பூண்டுவிடுவார்! (பாவம் போக்கிப் பரிகாரம் தேடவோ???) இவர் போய் வந்தபின், " இன்னார் தவமிருந்த தெய்வீகக்குகை" என்று போர்டு போடப்பட்டு, அதின் கட்டண வசூல் எவரெஸ்ட்டைத் தொட்டுவரும்!

- இவைகளெல்லாம் வரப்போகும் பஞ்சங்களுக்கு ஆரம்பமே!

(D) மங்கின நிறமுள்ள குதிரை :

“இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்..அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன் பின்சென்றது. பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட

மிருகங்களினாலும் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.." (வெளி 6:8)

இவைகள் தான் வரப்போகும் நாட்களில் சர்வசாதாரணமாக தேசத்தில் நடக்கப்போகிறவை. இப்போது மங்கலாகத் தெரியும் இந்த மங்கின நிறக்குதிரை, வரும் நாட்களில் தெளிவாகவே தெரிய ஆரம்பிக்கும். பட்டயமும் பஞ்சமும் சாவும், கொல்லும் கொடிய மனித மிருகங்களும் நிறைந்த மரண மண்ணாய், இந்த இந்திய மண்ணில் மரணநெடி நெடுகவே வீசும்!

தேசத்தின் பாழும் சுட்டெரிக்கப்பட்டதுமான இந்தக் குதிரைவாசல் வழியே இந்நால்வகைக் குதிரைகளும் ஏற்கனவே நுழைய ஆரம்பித்துவிட்டனவே!

தேவன் தேசத்துக்கு இரங்கும்படியாய் எழுந்து நிற்போம்! திறப்பிலே நிற்போம்! கைகோர்த்து நிற்போம்!

CHAPTER 05

கிழக்கு வாசல்
(East Gate)

PART- 10

"அவனுக்குப் பின்னாகக் கிழக்கு வாசலைக் காக்கிற செக்கனியாவின் குமாரன் செமாயா பழுதுபார்த்துக் கட்டினான்." (நெகே 3:29)

எருசலேமின் வாசல்களில் கிழக்கு வாசல், அலங்கத்தின் வடகிழக்குப் பகுதியில் அமைந்திருந்தது. எருசலேமிலே தாம் நிறைவேற்றப்போகிற சிலுவை மரணத்துக்கு முன்பாக, இயேசு பவனியாக நகரத்துக்குள் பிரவேசித்தது இந்தக் கிழக்கு வாசல் வழியாகவே என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

வேதம் சொல்கிறது..அவர் பவனியாய் வந்து நகரத்துக்குச் சமீபமாய்ச் சேர்ந்த போது, "நகரத்தைப் பார்த்து அதற்காகக் கண்ணீர்விட்டழுது, "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்; இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாய் இருக்கிறது..

உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில் போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி உன்னையும் உன் பிள்ளைகளையும் தரையாக்கிப் போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும்.." என்றார். (லூக் 19: 41-44)

எருசலேமுக்குள் இயேசு பிரவேசித்த வாசலான கிழக்கு

வாசல், அவரது மரணத்துக்குப்பின் சரியாக எழுபது வருடம் சென்று தீத்துராயனால் தீக்கிரையாக்கப்பட்டது. எருசலேமின் சுட்டெரிக்கப்பட்ட வாசல்களோடு இந்திய தேசத்தை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இயேசு சொன்ன மேற்கண்ட இதே வார்த்தைகள் இன்று நமது தேசத்திற்கும் தீர்க்கதரிசனமாய்ப் பொருந்தாதோ? இதோ அவைகள் நிறைவேறும் நாட்கள் வருகிறது!

அன்று எருசலேமைப் பார்த்துக் கண்ணீர்விட்டு அழுதவர், இன்று நமது தேசத்தின் ஒவ்வொரு பகுதியையும், அது கிராமமோ நகரமோ, அதைப் பார்த்துக் கண்ணீர்விட்டு அழவில்லையோ? தேசத்தின் மேல் வரப்போகும் அழிவைக் கண்டு மட்டுல்ல, சபையின் மேல் வரப்போகும் தீர்ப்பைக் கண்டும் கூட இராப்பகலாய்ப் புலம்பி அழுகிறாரே!

அன்றொருநாள் ஆசகேலைக் கண்ட எலிசா, தன் முகத்தை அவனைவிட்டுத் திருப்பாமல், அவன் சலித்துப்போகுமட்டும் அவனை நோக்கி அழுதுகொண்டே இருந்தான். அப்பொழுது ஆசகேல்: "என் ஆண்டவன் அழுகிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவன் : நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் செய்யும் தீங்கை நான் அறிந்திருக்கிறபடியினால் அழுகிறேன்; நீ அவர்கள் கோட்டைகளை அக்கினிக்கு இரையாக்கி, அவர்கள் வாலிபரைப் பட்டயத்தால் கொன்று, அவர்கள் குழந்தைகளைத் தரையோடே மோதி, அவர்கள் கர்ப்பவதிகளைக் கீறிப்போடுவாய்" என்றான்.
(2 இரா 8:11, 12)

பழைய ஏற்பாட்டு எலிசாவின் தீர்க்கதரிசனமோ, புதிய ஏற்பாட்டு இயேசுவின் தீர்க்கதரிசனமோ அப்படியே வந்து பலித்தது போலவே, இன்றைய நமது தேசத்தைக் கண்டும், சபையைக் கண்டும் கலங்கி அழுது சொல்லும் இயேசுவின் வார்த்தைகள், வரும் நாட்களில் தேசத்தின் மேலும், சபையின்

மேலும் நிறைவேற அப்படியொரு வாய்ப்பே இல்லை என்று சொல்லக்கூடியவர் யாரும் இங்கே உண்டோ?

"உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் உனக்கு நலமாயிருக்கும்; இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.."

- **இந்த தேசத்துக்குத் தேவன் தந்திராத வாய்ப்புகள் தான் உண்டோ?**

- **தோமா காலம் முதல் தேவனால் வெளிநாட்டிலிருந்து இங்கு அனுப்பப்பட்ட மிஷினரிகளுக்குதான் குறைவுண்டோ?**

- **வெளிநாட்டு மிஷினரிகளின் காலத்துக்குப்பின் தேசத்தின் எல்லையெங்கும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சுவிசேஷம் சுமந்து சென்றவர்களின் எண்ணிக்கை தான் எத்தனை எத்தனை !**

- **1905-06ல் புனேயில் பண்டித ரமாபாயின் முக்தி மிஷனில் ஏற்பட்ட எழுப்புதலையும், வடகிழக்குப் பிராந்தியங்களான குறுநில மாநிலங்களில் ஆதிவாசிகள் மத்தியில் எழும்பிய மிகப்பெரிய எழுப்புதலின் சமுதாயப்புரட்சியையும் தேசமே திரும்பிப்பார்த்தது என்கிறது இந்திய தேச எழுப்புதல் வரலாறு! மேலும் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தெற்கே எழுந்த எழுப்புதல் அலை வடக்கு மட்டும் அடித்ததே !**

- **மட்டுமல்ல, ஏறக்குறைய தேசத்தின் மூலைமுடுக்குகள் எல்லாமே ஓரளவு சுவிசேஷ சத்தத்தைக் கேட்டாகி**விட்டது என்றே சொல்லவேண்டியுள்ளதே !

● ஆனாலும் கோரோசினே உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே உனக்கு ஐயோ, கப்பர்நகூமே உன்னில் செய்யப்பட்ட பலத்த கிரியைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால்... இந்நேரம் இரட்டுடுத்தி மனந்திரும்பியிருப்பார்கள் என்ற நியாயத்தீர்ப்பின் எதிரொலி இங்கேயும் கேட்கப்படுமோ?

● தேசத்தின் விசுவாசியாத பெருங்கூட்டத்தைக் கண்டு மட்டுமல்ல, சபையின் நிர்ப்பாக்கிய நிலையையும் கண்டும் என் ஆண்டவர் கண்ணீர்விட்டுக் கலங்கி அழவில்லையோ? "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும்..." என்ற இருதயத்தை உடைக்கும் நேச கர்த்தரின் வார்த்தைகள் இன்றைய சபையின் மேலும் வருகிறதல்லவோ?

● ஓ! தேசமே ! சபையே! இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாய் இருக்கிறதே!

● ஓ தேசமே ! ஜீவனுள்ள தேவன் உன்னைத் தன் கரங்களை நீட்டி அழைக்கும் இந்தக் காலத்தை அறியாமல் போனாயே!. உனக்குக் கொடுக்கப்பட்ட விலையேறப்பெற்ற சந்தர்ப்பங்களை அல்லத்தட்டினாயே! ஓ தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிந்தாயே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக தேவன் உன் பிள்ளைகளைத் தம்மிடம் எத்தனைதரமோ கூட்டிச்சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தும், உனக்கோ மனதில்லாமல் போயிற்றே! ஐயோ! உன் தேசம் பாழாக்கிவிடப்படும் நாட்கள் இதோ உனக்கு வருகிறதே!" (லூக் 13:34,35)

- ஓ சபையே ! தேவன் உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாமல் போனாயே! உன்னிடத்தில் செய்யப்பட்ட அடையாளங்களும் அற்புதங்களும், உனக்குக் கொடுக்கப்பட்ட மேன்மையான அபிஷேகமும் தேவ வார்த்தைகளும், தீர்க்கதரிசனங்களும் சோதோம் கொமோராவுக்குக் கொடுக்கப்பட்டு, உன்னிலே அனுப்பப்பட்ட போதகர்களும் மேய்ப்பர்களும் அங்கே அனுப்பப்பட்டு, உனக்குக் கிடைத்த இத்தனை வெகு மேலான ஆவிக்குரிய உபகரணங்களில் கொஞ்சமேனும் அந்த நகரங்களுக்குக் கிடைத்திருக்குமானால், அவர்கள் அன்றே மனந்திரும்பியிருக்க மாட்டார்களோ? ஓ! தேவன் உன்னை வைத்த மேன்மையின் மதிப்பினையும், உனக்குக் கொடுத்த சந்தர்ப்பங்களையும் எச்சரிப்புக்களையும் நீ அறியாமல் போனாயே!

- ஓ! தேசமே ! சபையே! இதோ உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, நாலாபக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, தேசத்திலும் சபையிலும் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு உனக்குச் செய்யும் நாட்கள் வருமோ ! (லூக் 19:44)

ஓ! கிழக்கு வாசலிலே நின்று கண்ணீர்விட்ட என் ஆண்டவரின் அழுகுரல் கேட்கப்படுகிறதோ?

சீயோன் குமாரத்தி..
சீயோன் குமாரத்தி..
களிகூரு! கெம்பீரி! உன் ராஜா வருகின்றார்..

கண்டடைவாய் சமாதானமே
இன்றைய நாளில் என் ஜனமே!
கண்ணீர்விட்டு அழுதபடி
கர்த்தர் பவனி வருகின்றார் ! - சீயோன்

சாந்தம் தாழ்மை உள்ளவராய்
மாந்தர் வாழ்வினை வளமாக்க
உள்ளத்தில் ஓசன்னா!
மகிமையின் ராஜா வருகின்றார் - சீயோன்

கழுதைக்குட்டி மறியின் மேல்
கர்த்தர் பவனி வருகின்றார்..
ஓசன்னா ஓசன்னா
என்ற கீதம் கேட்குதே! - சீயோன்

CHAPTER 05

காவல்வீட்டு வாசல் (Prison Gate)

PART- 11

“ஊசியின் குமாரன் பாலால்... காவல் வீட்டின் முற்றத்துக்கடுத்த ராஜாவின் உயரமான அரமனைக்கு வெளிப்புறமாயிருக்கிற கொம்மைக்கு எதிரேயிருக்கிறதைக் கட்டினான்...

துதி செய்கிற இரண்டாம் கூட்டத்தார்... காவல் வீட்டுவாசலிலே நின்றார்கள்." (நெகே 3:25 / 12:38, 39)

அக்காலத்திலே எருசலேமிலிருந்த ராஜாவின் அரமனைக்கு அருகாமையில் காவல்வீடு என்று அழைக்கப்பட்ட சிறைச்சாலை இருந்தது. இந்தச் சிறைச்சாலைக்கு அலங்கத்தின் வழியே, கைதிகளை அழைத்துச் செல்லும் வாசலே காவல் வீட்டுவாசல் என்று அழைக்கப்பட்டது. "எரேமியா தீர்க்கதரிசியோ, யூதா ராஜாவின் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருந்தான்.(எரே 32:2)" என்று குறிப்பிடப்பட்ட காவல்வீடு இதுவே. பின்னாட்களில் யோவான் ஸ்நானகனும், பேதுருவும், பவுலும் எருசலேம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இடமும் இதுவே! நேபுகாத்நேச்சார் வந்து எருசலேமில் இருந்தவர்களோடேகூட, இந்தக் காவல் கிடங்கிலிருந்தவர்களையும் சிறையாக்கிக் கொண்டுபோனபோது இடித்துப்போட்ட அலங்க வாசல்களில் இந்தக் காவல்வீட்டு வாசலும் ஒன்று.

எருசலேமில் சுட்டெரிக்கப்பட்ட வாசல்களோடு நமது தேசத்தின் அதைப் போன்ற வாசல்களை ஒப்புமையாய்

ஒப்பிட்டு ஜெபத்திலே அவைகளைக் கட்டியெழுப்ப முற்படும்போது, இந்தக் காவல் வீட்டுவாசலின் இந்தியக் கண்ணோட்டம் மூன்று காரியங்களைக் கட்டியெழுப்பும்படி நம்மை நெருக்கி ஏவுகிறது.

1. அநியாயமாய்ச் சிறைப்பட்டுப் போனவர்கள் :

- **சுவிசேஷத்தினிமித்தமும் தங்கள் சாட்சியினிமித்தமுமே இந்தியச் சிறைகளில் கைதாகியிருப்பவர்கள்**

- **தாங்கள் செய்யாத குற்றத்துக்காகப் பல வருடங்களாய் இங்கே சிறையிலிருப்பவர்கள்.**

- **தங்களுக்காக வழக்காட யாருமின்றி சிறையில் வாடுபவர்கள்.**

- **தங்கள் மேல் அநியாயமாய்ப் பொய் வழக்கு போடப்பட்டு சிறையில் வருடங்களைக் கழிப்பவர்கள்.**

- **சிறையில் வன்கொடுமையாய்ச் சித்ரவதைப்படுத்தப்படுபவர்கள்.**

- **சிறையினுள் அடித்தே கொல்லப்படுபவர்கள்.**

இவர்களோடு ஜெயில் மாஃபியா மற்றும் சிறை ஊழல்களும் சேர்ந்து நமது தேசத்தின் காவல் வீட்டுவாசல்கள் சுட்டெரிக்கப்பட்டுக் கிடப்பதைப் பார்க்கிறீர்களே!"கட்டப்பட்டவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள் போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்களும் சரீரத்தோடு இருக்கிறவர்களென்று அறிந்து, தீங்கனுபவிப்பவர்களை

நினைத்துக்கொள்ளுங்கள்..(எபி 13:3)" என்று வேதம் வலியுறுத்தும்போது,

"பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களையும், அநியாயமாய் சிறைப்பட்டுப்போனவர்களையும், பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டவர்களையும், ஜெபத்தால் விடுவித்து, அநியாயத்தினாலும், அக்கிரமத்தினாலும், ஊழலினாலும் கொடுமையினாலும் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கும் இந்திய தேச சிறைச்சாலைகளிலும், நீதிமன்றங்களிலும் நீதி கிடைக்கும்படியாகக் காவல்வீட்டு வாசல்களை ஜெபத்தினால் எழுந்து கட்டுவோம் வாருங்கள்!

2. உறங்கி விழும் ஜாமக்காரர்கள் :

எருசலேமின் அலங்கத்திலிருந்த காவல்வீட்டு வாசல், ராஜாவின் உயரமான அரமனையை ஒட்டியே இருந்தது என்பதால், அந்தக் காவல்வீட்டு வாசல், அரண்மனையைக் காக்கும் பாதுகாவலின் வாசலாகவும், காவல் கோபுரமாகவுமே இருந்தது (நெகே 3: 25).

"மனுபுத்திரனே, நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்.." (எசே 2:17) என்று எசேக்கியேலுக்குச் சொன்னவர், "நீ போய்க் காண்பதைத் தெரிவிக்கும்படி ஜாமக்காரனை வை.." என்று ஏசாயாவுக்குச் சொன்னபோது, அந்த ஜாமக்காரனோ, "ஆண்டவரே நான் பகல் முழுவதும் என் காவலிலே நின்று இராமுழுவதும் என் காவலிடத்திலே தரித்திருக்கிறேன்.." என்று சத்தமிட்டுக் கூப்பிட்டு, "விடியற்காலமும் வருகிறது, இராக்காலமும் வருகிறது.. நீங்கள் கேட்க மனதானால் கேளுங்கள்.." என்று ஜனத்தையும் எச்சரித்தான். (ஏசா 21: 6-12)

• ஓ! தேசம் காக்கும் ஜாமக்காரர்கள் எங்கே?

• பகல் முழுவதும் தன் காவலிலே நின்று, இராமுழுவதும் தேசத்துக்காகத் தன் காவலிடத்திலே தரித்திருக்கும் ஜாமக்காரர்கள் எங்கே?

• இரவும் பகலும் தேசத்துக்கு விரோதமாகவும், சபைக்கு விரோதமாகவும் படைசூழ்ந்து வரும் சத்துருவின் இரதங்களையும், அவனது படையின் ஜோடு ஜோடான குதிரை வீரரையும், ஜோடு ஜோடாகக் கழுதைகளின் மேலும், ஒட்டகங்களின் மேலும் ஏறிவரும் எண்ணிறந்த ஆவிகளின் சேனைகளையும் கண்டு, மிகுந்த கவனமாய்க் கவனித்துக் கொண்டேயிருந்து, சிங்கத்தைப் போல சத்தமிட்டுக் கூப்பிட்டு எச்சரிக்கும் ஜாமக்காரர்கள் எங்கே?

• ராஜாவின் அரண்மனையாம் சபையைக் காக்கும் ஜாமக்காரர்கள் எங்கே?

• ஆவிக்குரிய யுத்தம் என்னும் போர்முனையிலே ஜெபவீரர்களாம் ஜாமக்காரர்களை மாற்றி மாற்றி வைக்கும் கிதியோன்கள் எங்கே? (நியா 7:9)

• சுட்டெரிக்கப்பட்ட அலங்கம் கட்டப்படும் இருபத்திநாலு மணி நேர வேலையிலே இரவும் பகலும் ஜெபிக்கும் ஜாமக்காரர்களை தேசமெங்கும் நிறுத்திவைத்து முனைந்து நிற்கும் நெகேமியாக்கள் எங்கே? (நெகே 4:9)

• "எருசலேமே உன் மதில்கள் மேல் பகல் முழுவதும் இராமுழுவதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன்.." (ஏசா 62:6) என்றவர், இன்று

இத்தேசம் கடந்து போகும் இந்த நிலையிலே அப்படிப்பட்ட ஜாமக்காரரை எழுப்பும்படியாகக் கதறுவோர் எங்கே?

இந்தக் காவல்கோபுர வாசலை ஜெபத்தில் திரும்ப எடுப்பித்துக் கட்டி, இரவும்பகலும் ஜெபநிலையில் நிற்கும் ஜாமக்காரரை தேவன் தேசத்தில் ஆங்காங்கே எழுப்பி நிறுத்தும்படியாய்க் கைகோர்ப்போம் வாருங்கள்!

3. கட்டப்பட்டு காவலிலே வைக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட வேண்டியவைகள் :

- "மகா பாபிலோன் பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிருக்கிறதல்லவோ? (வெளி 18:2)"

- பாதாளத்தில் இறங்கிய இயேசுவும் காவலிலுள்ள ஆவிகளுக்குப் போய்ப் பிரசங்கித்தாரே! (1 பேதுரு 3:19)

- பிசாசென்னும் சாத்தானும் வலுசர்ப்பமானவனும் இறுதியிலே கட்டப்பட்டு பாதாளத்திலே தள்ளி அடைக்கப்பட வேண்டியவனல்லவோ? (வெளி 20:1,2)

ஆக, சகலவித அசுத்த ஆவிகளும் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே கட்டப்பட்டு, அவைகளின் வல்லமைகள் ஜெபத்தினாலே முறிக்கப்பட்டு, அவைகள் கட்டுண்டவைகளாய்க் காவலில் வைக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட வேண்டியவைகளே!

- ஆனால் இந்தத் தேசமெங்கும் தறிகெட்டுத் திரிகிற அசுத்த ஆவிகளின் கிரியைகளையோ நாம் கண்கூடாகப் பார்க்கிறோமே!

- ஜெபத்திலே கட்டப்பட்டு, கட்டுண்டு கிடக்க வேண்டிய ஆவிகள், சுதந்திரமாய் உலாவி, தங்கள் மனம்போனபடி ஜனங்களைக் கட்டி வைக்கக் காண்கிறோமே!

தேசத்தில் கிரியை செய்யும்..

• விக்கிரக ஆவிகள்! விபச்சார ஆவிகள் !

• குடிவெறியின் ஆவிகள்! குருட்டாட்ட ஆவிகள்!

• பாரம்பரிய ஆவிகள்! மூடநம்பிக்கையின் ஆவிகள்!

• தாறுமாறுகளின் ஆவிகள்! தற்கொலையின் ஆவிகள்!

• பொய்யின் ஆவிகள்! அடிமைத்தன ஆவிகள்!

• எரிச்சலின் ஆவிகள்! மூர்க்க வெறியின் ஆவிகள்!

• மந்திரவாத ஆவிகள்! குறி சொல்லும் ஆவிகள்!

• மாம்சத்தோடும் இரத்தத்தோடும் போராடும் ஆவிகள்!

• துரைத்தனங்களின் ஆவிகள்! அதிகாரமட்டத்தில் கிரியை செய்யும் ஆவிகள்!

• அந்தகார லோகாதிபதிகளின் ஆவிகள்!

• தேசத்தின் மேலுள்ள வான மண்டலங்களில் கிரியை செய்யும் ஆவிகள்!

- தலைமுறை தலைமுறையாய் இந்த மண்ணில் குடியிருந்து கிரியை செய்யும் ஆவிகள்!

- ஜாதிமத பேத ஆவிகள்! கலவரத்தைத் தூண்டும் ஆவிகள்!

- சினிமா உலக ஆவிகள் ! சோஷியல் மீடியா ஆவிகள்! சபையின் மேல் கிரியை செய்யும்...

- வஞ்சிக்கிற ஆவிகள்! கனநித்திரையின் ஆவிகள்!

- சோம்பலின் ஆவிகள்! சோர்வின் ஆவிகள்!

- பெலவீனப்படுத்தும் ஆவிகள்! தோல்வி மனப்பான்மையின் ஆவிகள்!

- ஊமையும் செவிடுமான ஆவிகள்!

- பொய்யின் ஆவிகள்! பொய்யான அற்புதங்களைச் செய்யும் ஆவிகள்!

- பொய்த் தீர்க்கதரிசன ஆவிகள்!

- பொய்ப் போதக ஆவிகள்! கள்ள உபதேச ஆவிகள்!

- ஆத்துமப் பிணைப்பின் ஆவிகள்! விபச்சார ஆவிகள்!

- பெருமையின் ஆவிகள்! மாய்மால ஆவிகள்!

- மன்னியாமையின் ஆவிகள்!

- பலவித இச்சைகளின் ஆவிகள்!

ஜெபவீட்டிலே ஜெபத்தில் கட்டப்பட்டு காவல்வீட்டிலே அடைத்து வைக்கப்பட வேண்டிய இப்படிப்பட்ட ஆவிகளோ, தேசத்து ஜனங்களையும் விசுவாசிகளையுமே கட்டி வைத்திருக்கின்றனவே!

இதோ, தேசத்திலே இப்படிப்பட்ட காவல்வீட்டு வாசலும் காவல் கோபுரங்களும் இடிந்து தகர்ந்து கிடக்கிறதே! பரிசுத்த ஆவியில் நிறைந்து வசனத்தினாலும், வல்லமையினாலும் இப்படிப்பட்ட ஆவிகளைக் கட்டி, காவலிலே அடைத்து, அவைகளைக் கண்காணிக்கும் காவல் கோபுரங்களையும் காவல் வீட்டுவாசல்களையும் ஜெபத்திலே திரும்ப எடுப்பித்துக்கட்டுவோம் வாருங்கள்!

CHAPTER 05

மிப்காத் என்னும் வாசல்
(Gate Mipkahad or Muster Gate)

PART- 12

“அவனுக்குப் பின்னாகத் தட்டானின் குமாரன் மல்கியா, மிப்காத் என்னும் வாசலுக்கு எதிரே நிதனீமியரும் மளிகைக்காரரும் குடியிருக்கிற ஸ்தலமுதல் கோடியின் மேல்வீடுமட்டாகவும் இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.." (நெகே 3:31)

மிப்காத் என்னும் வாசல், அலங்கத்தின் வடகிழக்குப்பகுதியில் இருந்தது. "மிப்காத்" என்றால்" நியமிக்கப்பட்ட இடம்" என்று பொருள். பொதுவாக இது, "ஒன்றுகூடும் வாசல்" (Muster Gate) என்று அழைக்கப்பட்டது. சத்துருக்களால் தீக்கிரையான கடைசி வாசலான, ஜனங்கள் கூடிவரும் இந்தப் பன்னிரண்டாவது வாசலும் நெகேமியாவால் பழுதுபார்த்துக் கட்டப்பட்டது.

தேசத்து ஜனங்கள் தேவனைத் தொழுதுகொள்ள ஒன்றுகூடி வரும் மிப்காத் வாசல்களான ஆராதிக்கும் ஸ்தலங்களும், தொழுகை செய்யும் இடங்களுமே இன்று சத்துருக்களின் இலக்குகளாய் மாறிப்போயிருக்கின்றன அல்லவோ?

இஸ்ரவேலின் வரலாற்றில் எழுப்புதல் வீராங்கனை யூதித்தின் நாட்களிலே படைத்தளபதி ஓலோபெர்னஸ் (Holofernes) தலைமையிலே நேபுகாத்நேச்சாரின் அசீரியப்படைகள் இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பாளயமிறங்கியிருந்த நாட்கள் அவை.. "கடவுளையே சிறைவைப்பான் ஓலோபெர்னாஸ்" என்று வர்ணிக்கப்பட்ட அவனது பெயரைக் கேட்டாலே அழும் பிள்ளைகள் கூட கப்சிப்பென்று வாயை மூடிக்கொள்ளும் என்று சொல்லுமளவு குலைநடுங்கச் செய்யும் ஒரு பெயர் அது!

ஆனால் அப்படிப்பட்ட ஓலோபெர்னாசின் குறியும் கவலையுமே இஸ்ரவேல் ஜனம் ஒன்று கூடி தங்கள் தேவனை ஆராதிக்கும் அவர்களது தேவாலயமாகவே இருந்ததாம்!

ஆக, அன்று முதல் இன்று வரை சத்துருவின் இலக்கே , தொழுகைத் தலங்களும், ஆராதிக்கும் ஆலயங்களும், ஒன்றுகூடும் இடங்களுமேயாம்! இன்றைய இந்தியாவின் ஆளுகையின் இலக்கும் குறியும் சிறுபான்மையினரின் ஆராதனை ஸ்தலங்களும், சபைகளும், ஜனங்கள் கூடிவரும் மதவழிபாட்டுத் தலங்களுமே அல்லவோ?

ஆசாப் என்னும் சங்கீதக்காரன் சொல்லுகிறான்...

"நீர் பூர்வகாலத்தில் சம்பாதித்த உமது சபையையும், நீர் மீட்டுக்கொண்ட உமது சுதந்தரமான கோத்திரத்தையும், நீர் வாசமாயிருந்த சீயோன் பர்வதத்தையும் நினைத்தருளும்..

நெடுங்காலமாகப் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களில் உம்முடைய பாதங்களை எழுந்தருளப்பண்ணும்; பரிசுத்த ஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கெடுத்துப்போட்டான்...

உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஆலயங்களுக்குள்ளே கெர்ச்சித்து, தங்கள் கொடிகளை அடையாளங்களாய் நாட்டுகிறார்கள். கோடரிகளை ஓங்கிச் சோலையிலே மரங்களை வெட்டுகிறவன் பேர்பெற்றவனானான்...

இப்பொழுதோ அவர்கள் அதின் சித்திர வேலைகள் முழுவதையும் வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப் போடுகிறார்கள்..

உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்கி உமது நாமத்தின் வாசஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்கி இடித்து, அசுத்தப்படுத்தினார்கள்.

அவர்களை ஏகமாய் நிர்த்துளியாக்குவோம் என்று தங்கள் இருதயத்தில் சொல்லி, தேசத்திலுள்ள ஆலயங்களையெல்லாம் சுட்டெரித்துப்போட்டார்கள்..

எங்களுக்கு இருந்த அடையாளங்களைக் காணோம்; தீர்க்கதரிசியும் இல்லை, இது எதுவரைக்கும் என்று அறிவிக்கிறவனும் எங்களிடத்தில் இல்லை..(சங் 74:2-10)

"இதோ உம்முடைய சத்துருக்கள் கொந்தளித்து, உம்முடைய பகைஞர்கள் தலையெடுக்கிறார்கள்.. உமது ஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசித்து, உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஆலோசனை பண்ணுகிறார்கள்.

அவர்கள் இனி ஒரு ஜாதியாயிராமலும், இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக அவர்களை அதம் பண்ணுவோம் வாருங்கள் என்கிறார்கள்.

இப்படி, ஆர் எஸ் எஸ்ஸாரும், பஜ்ரங்தள்காரரும், விஷ்வ ஹிந்து பரிக்ஷத்தாரும், இந்து முன்னணியினரும், துர்கா வாஹினியினரும், ஹிந்து ஜாக்ரண் மஞ்ச்காரருமான வலதுசாரிக்காரர்கள் ஏகமன நிர்ணயமாய் ஆலோசனை செய்து, உமக்கு விரோதமாய் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுவாழ் இந்தியரில் இவர்சார்ந்தவரும் அவர்களோடேகூடக் கலந்து, ஆளுகிறவர்களுக்குப் புயபலமானார்கள். (சங் 83: 2-8)

இதோ, தேசத்தில் தேவ ஜனம் ஒன்றுகூடிவரும் மிப்காத்

என்னும் ஒன்றுகூடும் வாசல் பாழாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதே! ஜெபத்திலே எழுந்து இதைக் கட்டுவோம் வாருங்கள்!

"இதை இடித்துப் போடுங்கள்.. மூன்று நாளிலே திரும்ப எழுப்புவேன்" என்றார் இயேசு. எழுத்தின் பிரகாரமான ஆலயமோ, சரீரமாகிய ஆலயமோ, எது இடிக்கப்பட்டாலும் மீண்டும் எழுந்திருக்கும்!

ஆமென்!

CHAPTER 06

ஒரு விசுவாச உறுதிமொழி

ELECTION '24

மிஷன் 2024 என்ற இந்தக் கட்டுரையோ, புத்தகமோ எழுதப்பட்டதின் நோக்கம் "தேர்தலுக்காகவும் தேசத்துக்காகவுமே!"

இதின் நோக்கம் 2024 தேர்தலோடு மட்டுமல்ல, தேர்தலைத் தாண்டிவரும் நாட்களுக்காகவும் காலங்களுக்காகவும் ஜெபிக்கும் ஒரு சேனையை எழுப்புவதே! இதற்கு மாதிரி வரைபடம் எசேக்கியா ராஜாவின் செயல்திட்டமே!

இந்த ஜெபம் தேர்தலோடு நின்று விடாமல், தேசம் தேவனை அறியும் ஒரு மாபெரும் எழுப்புதல் ஒன்றைக் காணுமட்டும் சங்கிலித்தொடராக நீண்டு நடந்துகொண்டே இருக்கும்.

2024 தேர்தலில் கட்டாயம் ஒரு மாற்றம் வந்தே ஆக வேண்டும் என்பதே அனைவரின் உள்ளக் கொந்தளிப்பாய் இருந்தாலும், தேவனின் ராஜரீகத் திட்டத்தை மாற்றவோ, அதை ஜெபத்தில் மாற்றத் துணியவோ, நமக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்பதை நாம் முதலில் நமது மனங்களில் ஆழமாய்ப் பதித்தாக வேண்டும். நமது ஆழ்ந்த விருப்பமும், வேகமும் வேதனையும் கொதிப்பும் ஆட்சி மாற்றமாகவே இருந்தாலும், தேவனது பரிபூரண சித்தத்துக்கு உட்பட்டதாகவே நமது ஜெபங்கள் இருந்தாக வேண்டும் - நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்!

ஆகவே வேதத்தின்படியான ஒரு விசுவாச உறுதிமொழியை எடுக்க நாம் அழைக்கப்படுகிறோம் - அதையே இங்கு முன்மொழிகிறோம்...

- நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்..அவர் எங்களை.. நீங்கலாக்கி

விடுவிப்பார்...அப்படியே விடுவிக்காமல் போனா **லும்..**
(தானி 3:17, 18)

- தேவன் எங்கள் அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர். *ஆகையால்* பூமி நிலைமாறினா **லும்**,

மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனா **லும்**,

அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தா **லும்**

நாங்கள் பயப்படமாட்டோம்..(சங் 46:1-3)

- நாங்கள் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தா **லும்** பொல்லாப்புக்குப் பயப்படோம். தேவரீர் எங்களோடே கூட இருக்கிறீர்.. (சங் 23:4)

- எங்களுக்கு விரோதமாக ஒரு பாளயம் இறங்கினா **லும்** எங்கள் இருதயம் பயப்படாது;

எங்கள் மேல் யுத்தம் எழும்பினா **லும்** இதிலே நாங்கள் நம்பிக்கையாய் இருப்போம்... (சங் 27:3)

- **ஆனாலும்** கர்த்தாவே, நாங்கள் எப்பொழுதும் உம்மோடிருப்போம்; எங்கள் வலதுகையைப் பிடித்து நீர் தாங்குவீர்...(சங் 73:23)

- எங்கள் அத்திமரம் துளிர்விடாமல் போனா **லும்**..

எங்கள் திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமல் போனா **லும்**..

எங்கள் ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனா **லும்**...

எங்கள் வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனா **லும்**...

எங்கள் கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனா **லும்**...

எங்கள் தொழுவத்திலே மாடுகள் இல்லாமல் போனா **லும்**...

நாங்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்போம்..
எங்கள் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூறுவோம்..
(ஆபகூக் 3:17, 18)

- அவர் எங்களைக் கொன்றுபோட்டா **லும்** அவர் மேல் நம்பிக்கையாயிருப்போம்...(யோபு 13:15)

தேவன் சர்வ வல்லவர் - சர்வ வியாபி - சர்வ ஞானி - சர்வ சிருஷ்டிகர்
அவர் ராஜரீகக் கர்த்தர்!

“ஆம் ஆண்டவரே, தேவரீர் நீர் சகலத்தையும் வல்லவர்! நீர் செய்ய நினைத்தது தடைபடாது. ஆமென்!

CHAPTER 07

ஒரு செயல்திட்டம் (An Action Plan)

ELECTION '24

- 2024க்கான தேர்தலுக்காக ஜெபித்தே ஆக வேண்டும் என்ற திடமான திட்டமான ஒரு தீர்மானம்!

- இதற்கான பாரமும், ஒரே மனமும், சிந்தையும் நோக்கமும் கொண்டவர்களைக் கண்டுபிடிப்பது.

- அவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களேயானாலும் அவர்கள் ஒரே ஊரிலும், அருகருகே இருப்பவர்களுமானால் அவர்கள் தினமுமோ அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாளோ ஜெபத்தில் இணைவது.

- ஜெபவீரர்கள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களாயிருந்தால், அந்த ஊரிலுள்ள சபையின் சுத்திகரிப்புக்காகவும், ஊழியர்கள், விசுவாசிகளின் பாவநிவிர்த்திக்காவும் (எசேக்கியாவின் பத்து அம்சத் திட்டம்) தேவ சமூகத்தில் மன்றாடுவது. அடுத்தது, அந்த ஊரின் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி, வார்டு மற்றும் கவுன்சில்களுக்காகத் திறப்பிலே நிற்பது.

- Zoom இல் இணையும் வெவ்வேறு ஊரையோ இடத்தையோ சேர்ந்தவர்களாய் இருந்தால், இந்தியாவிலுள்ள அவரவரது இடங்களுக்காகவும் ஊருக்காகவும் இப்படியே ஜெபிப்பது.

- ஜெபிக்கிறவர்களும், இந்தக் காரியங்களுக்காக ஒரு மனப்படும் ஊழியர்களும் வடமாநிலங்களைப் பார்க்கிலும்

தென்மாநிலங்களில் மட்டுமே அதிகம் இருப்பதால், ஜெபிக்க அதிக ஆளில்லாத வடமாநிலங்களுக்காக ஒவ்வொரு மாநிலத் தலைநகருக்காகவும், அம்மாநிலத்தின் முக்கிய நகரங்கள், ஊர்களுக்காகவும், அந்தந்த மாநில வரைபடத்துடன் கூடிய விபரங்களை சேகரித்து, அதோடு அங்குள்ள நடப்பு நிலவரங்களையும் மனதில்கொண்டு ஜெபிப்பது அவசியம். இந்தியாவின் ஒவ்வொரு மாநில விபரங்களும் அடங்கிய ஜெபக் கையேடுகள் கிறிஸ்தவ புத்தக நிலையங்களில் கிடைக்கும். அல்லது இத்துடன் நாம் இணைத்துப் பதிவிடும் PDF புத்தகங்களை வைத்தும் ஜெபிக்கலாம்.

- ஆவிக்குரிய யுத்தம் இன்றியமையாதது. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும், உலகின் எந்த மூலையையும் கண்டுபிடித்துவிடும் GPS சாதனங்களுமே இன்று சாத்தியமானால், நமது ஜெபம் உலகின், நாட்டின் எந்த மூலைக்கும் ஊடுருவிச் செல்ல வல்லமையுள்ளது அன்றோ?

ஆகவே எந்தெந்த மாநிலங்களில் எப்படிப்பட்ட அந்தகார ஆவிகள், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் அந்த மண்ணைக் காலங்காலமாக ஆண்டு வருகின்றன என அறிந்து அவைகளை உபவாசத்தோடு கட்டி ஜெபிப்பது அவசியம். சகரியா டேனி ஃபோமம், பாஸ்டர் ட. ஜோசப் மற்றும் சமீபத்தில் நாம்

மொழிபெயர்த்து வெளியிட்ட Dr.ரெபேக்கா ப்ரவுனின் "கொலையுண்ணப்போகிறவர்களை விடுவி" ஆகிய புத்தகங்கள் ஆவிக்குரிய யுத்த ஜெபத்தில் அதிகப்படியான நடைமுறை விபரங்களை நாம் அறிந்துகொண்டு ஜெபிக்க நமக்கு உதவுபவை.

- முக்கியமாகத் தேர்தலில் மும்முரமாக ஈடுபடும் கட்சிகள், அவர்களது திட்டமிடல்கள், Master minds, Strategies மற்றும் அவர்களது செயல்திட்டங்களை நிறைவேற்றும் கடைசித் தொண்டன் வரையுள்ள கட்சிக் கட்டமைப்புகளுக்காகவும், தேவ சித்தமல்லாத அகிதோப்பேல்களின் ஆலோசனைகளை அவமாக்கி ஜெபிப்பதும் அவசியம்.

- தேர்தலுடன் சம்பந்தப்பட்ட தேர்தல் ஆணையம் மற்றும் அரசுத்துறைகள் மற்றும் அரசு நிர்வாக இயந்திரங்களின் செயல்பாடுகள் ஜெபவீரர்களின் ஜெபத்தின் திசையில் செயல்பட வேண்டுமென்றும், அந்தரங்கத்தில் தீட்டப்படும் திட்டங்களை எலிசாவைப் போலும், தானியேலைப் போலும் தேவன் ஜெபவீரர்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்றும் ஜெபிப்பது அவசியம்.

- ஜெபவீரர்களுக்குள் ஒற்றுமை, ஒருமனம், ஒருங்கிணைப்பு, தொலைநோக்கு, இணக்கம், அபிஷேகம், உடல் நலம், குடும்ப ஐக்கியம் இவை யாவும் மிக மிக முக்கியமாதலால், குழுக்கள் தங்களுக்காகவும் ஜெபிப்பது அவசியம்.

- தேர்தல் காலக் கலவரங்கள், நேர்மையின்மை, ஏமாற்றுகள், பணப்பரிமாற்றங்கள், ஓட்டு மிஷின் தில்லுமுல்லுகள் - இவைகளுக்காக ஜெபித்தல் அவசியம்.

- உண்மையான ஜெபவீரர்களையும் குழுக்களையும் முழங்கால் யுத்தவீரர்களையும், இரவு பகல் ஜாமக்காரரையும் தேவன் தேசமங்கும் எழுப்பிக்கொண்டே இருக்கும்படியாய் ஜெபிப்போம்.

- இவைகள் தவிர, இந்தப் புத்தகத்தின் முக்கியக் கருத்துகளான இந்தியாவின் 12 விதமான சுட்டெரிக்கப்பட்ட வாசல்களும் கட்டப்படும்படி, எசேக்கியாவின் 10 அம்சத் திட்டத்தின் வரைமுறை மாதிரியைக் கருத்தில்கொண்டு பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படி ஜெபிப்போம்.

- ஒவ்வொரு நாளும் நாட்டில் நடக்கும் அன்றாட நிகழ்வுகள், அரசாணைகள், நடவடிக்கைகள் யாவற்றையும் மிக நுணுக்கமாகப் படித்தறிந்து நமது ஜெபத்தை Update பண்ணிக் கூர்மையாக்கிக் கொள்வது அவசியம். அன்றாட நடப்புகளையும் வேதவசன நிறைவேறுதல்களையும் ஒப்பிட்டு கவனித்து ஜெபிப்பது அவசியம்.

- மேலே குறிப்பிடப்பட யாவும் நாம் அறிந்தவைகளே ! இவற்றில் நமக்குப் புதிதானவைகள் என்று எதுவுமல்ல. இவைகள் தவிர, மற்ற குழுக்கள் மற்றும் நமக்குத் தெரிந்த ஊழியர்கள், தேவ பிள்ளைகள் மற்றும் உலக மக்கள் மூலம் நாம் அறியவரும் விபரங்களையும் ஒருவரோடொருவர் பகிர்ந்துகொண்டு ஜெபிப்பது நல்லது.

"இதோ, கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது; நகரத்தையும் (நாட்டையும்) பிடிக்க வருகிறார்கள்; நீர் சொன்னபடி சம்பவிக்கிறது; இதோ, நீர் அதைப் பார்க்கிறீர்." (எரே 32:24)

கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் நம்மோடிருந்து நம்மை ஜெபத்திலே வழிநடத்துவாராக! ஆமென் !

பரலோகத்தின் தேவனானவர் நமக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார்; எழுந்து கட்டுவோம் வாருங்கள் !

முற்றும்

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

இனிமேல்
சம்பவிக்கப்போகிறது
என்ன ?

இந்து தேசம்
முதல்
இந்துத்துவா வரை...

மீண்டும்
ஒரு
மிஸா ?

இக்காலத்துக்கு
உதவும்படி...
(5 in 1 Pack)

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:



என் தகப்பனே என் தகப்பனே !
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே !

என் மகனாகிய
அப்சலோமே !
என் மகனே ! என் மகனே !

விக்கினத்தின்
மேல் விக்கினம்

சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...



நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக !

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

வருகைக்கு முன்னான வசந்தம்

எழுப்புதல் ஏவுகணைகள் Vol.1-5

தீக்கொளுத்துவேன்! தீக்கொளுத்துவேன்!

யோவேல் மறவேல்!

ஹிட் லைக் ஹிட்லர்

இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது!

ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)

விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்

கறுப்பு பெந்தெகோஸ்தே

ஆரம்பகால இரத்தசாட்சிகள்

அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..

எழுதிவைத்தான் எசேக்கியா!

எனக்கு உண்டானவைகளில்
நான் பெற்றுக்கொள்ளாதது யாது?

தேவனின் அசையாச் சொத்து

திரை உலகே! கலை உலகே!

Dr. Paul Enenche Quotes

ரேவன்ஹில் பேஜஸ் Vol- 1 & 2

மொழிபெயர்ப்புகள்:

ஒரு கைதியின் டைரி
[ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith]

கேட்டகோம்ஸ்
இரத்தசாட்சிகள்
[Martyrs of Catacombs]

நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[Thou art My battle Axe -
Dr. Paul Enenche]

கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown]

மொழிபெயர்ப்புகள்:

ரேவன்ஹில் தீக்கணைகள்
[Powerful Quotes of
Rev. Leonard Ravenhill]



எழுப்புதல் இன்னும் தாமதிப்பது ஏன்?
[Rev. லியோனார்ட் ரேவன்ஹில்லின்
25 எழுப்புதல் செய்திகள்]



உடைத்தெறி
[Breakthrough -
Rudy Lack]

எழுப்புதல்
எழுத்துக்கள்
[Assorted Revival Notes]

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010



சிதைந்து கிடக்கும்

இந்திய மண்ணின் சிதிலங்களை

எழுந்து கட்டுவோம் வாருங்கள் !

எசேக்கியாவின் ஆலய சுத்திகரிப்பு



அடைபட்ட அக்கினி
Pr. S. Romilton, Delhi
98106 46981

பாஸ்டர்.
ரொமில்ட்டன்

புத்தக ஆசிரியரைப்பற்றி...

டெல்லியில் மிஷினரி பாஸ்டராகக் கடந்த 30 வருடங்களாகக் குடும்பமாக ஊழியம் செய்து வரும் இவர், கிறிஸ்தவ இலக்கியம் மற்றும் எழுத்துப் பணிகளில் தீவிர ஆர்வம் கொண்டவர். கடந்த பத்து ஆண்டுகளாக உண்மையான ஆவிக்குரிய எழுப்புதல், தமிழ்க் கிறிஸ்தவ உலகால் அறியப்படாத இரத்த சாட்சிகளின் சரித்திரங்கள், மிஷினரி வரலாறுகள் மற்றும் ஆவிக்குரிய யுத்தம் சம்பந்தமான பல புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளைப் படைத்துப் பதிவிட்டு வருகிறார்.

இவைகள் தவிர, அநேக அரிய ஆங்கில நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அவற்றுள் முக்கியமானது, Rev. லியோனார்ட் ரேவன்ஹில் அவர்களின், பல எழுப்புதல் செய்திகள் அடங்கிய, இதுவரை வெளிவராத ”எழுப்புதல் இன்னும் தாமதிப்பது ஏன்? என்ற முற்றிலும் புதிய புத்தகம். இதை 2021ல் சகோ. R. Stanley அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

ஹெரலன் பாப்போவ் - ஒரு கைதியின் டைரி, கேட்டகோம்ஸ் இரத்தசாட்சிகள், இனிமேல் சம்பவிக்கப்போகிறது என்ன? இந்து தேசம் முதல் இந்துத்துவா வரை, மீண்டும் ஒரு மிஸா போன்ற பல புத்தகங்களின் வரிசையில் இப்போது...”

மிஷன் 2024..